# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 | கதிர் 114 | பங்குனி 06ஆம் நாள் செவ்வாய்க்கிழமை - 20 மார்ச் 2018 | வள்ளுவர் ஆண்டு 2049


# தீர்வு கிடைக்கும் என்றே ஆதரவளித்தனர் தமிழர்

## யாழ்ப்பாணம் வந்த மைத்திரியிடம் இரா. சம்பந்தன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 20

தமிழ் மக்களாகிய எமது பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பீர்கள் என்ற நம்பிக்கையிலேயே நாம் உங்களுக்கு முழுமையான ஆதரவை வழங்கியுள்ளோம். உங்களால் எமது பிரச்சினைகளை நிச்சயமாகத் தீர்த்து வைக்கமுடியும். உள்நாட்டில்பிரச்சினையைத் தீர்த்து வைத்த தலைவராக பன்னாடுகள் அங்கீகரிக்கும் அளவுக்கு மைத்திரிபால சிறிசேன செயற்படுவார் என்பதில் எமக்கு எவ்வித சந்தேகமும் இல்லை.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.

யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட தொழில்நுட்ப ஆய்வு கூடக் கட்டடத் தொகுதி நேற்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் திறக்கப்பட்டது. அந்த நிகழ்வில் உரையாற்றும்போதே இரா. சம்பந்தன் மேற்கண்டவாறு குறிப் >> 06




# வடக்குப் பட்டதாரிகள் 197 பேருக்கு நியமனம்

## அரச தலைவர் மைத்திரி நேற்றுக் கடிதம் வழங்கினார்

யாழ்ப்பாணம், மார்ச் 20

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 197 பட்டதாரிகளுக்கு நேற்று அரச நியமனங்கள் வழங்கப்பட்டன. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அவர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கினார். புனித பத்திரிசியார் கல்லூரியின் தொழில்நுட் >> 23

# காவலூர் தவிசாளர் இன்று பதவி ஏற்பார்

யாழ்ப்பாணம், மார்ச் 20

ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் தவிசாளராக ஈ.பி.டி.பி. சார்பில் நியமிக்கப்பட்டுள்ள மரு >> 23

# முன்னணி உறுப்பினர்கள் சத்தியப் பிரமாணம்

யாழ்ப்பாணம், மார்ச் 20

உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்களுக்கான சத்தியப்பிரமாண நிகழ்வு >> 23

# தொடருந்து மோதி வயோதிபர் சாவு

யாழ்ப்பாணம், அரியாலை, முள்ளியில் நேற்று அதிகாலை தொடருந்துடன் மோதுண்டு வயோதிபர் ஒருவர் உடல் சிதறி உயிரிழந்தார்.

கொழும்புத்துறையைச் சேர்ந்த செல்லையா கந்தசாமி (வயது-73) என்ற வயோதிபரே உயிரிழந்தார்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி நேற்று அதிகாலை பயணித்த தொடருந்துடனேயே இவர் மோதுண்டு உயிரிழந்திருக்கலாம் என யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் உடல் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது. இறப்பு விசாரணையை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர்.

(ந-8.32)

# தமிழ் மக்களின் நம்பிக்கையை நான் உடைத்து எறியவில்லை

## கொள்கைகளை மாற்றேன் என அரச தலைவர் மைத்திரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 20

எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் தனது உரையில், வடக்கு மக்கள் எனக்கு வழங்கிய ஒத்துழைப்புத் தொடர்பாகக் குறிப்பிட்டார். அவர்கள் வழங்கிய அந்த ஒத்துழைப்பு எனது மனதில் இன்னும் இருப்பதாலேயே நன்றிக் கடனாக வடக்கில் இடம்பெறும் சகல நிகழ்வுகளிலும் நான் பங்குபற்றுகிறேன். 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இடம் >> 06

# ஆங்கில மொழி அறிவால் நல்லிணக்கம் உருவாகும்

## வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 20

அரசியல் தலைவர்களால் எடுக்கப்பட்ட சில பொருத்தமற்ற முடிவுகளால் ஆங்கில மொழிக் கற்கை படிப்படியாகக் குறைந்துவிட்டது. இப்போது ஆங்கிலம் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் கூட இல்லை. காலம் கடந்து என்றாலும் தற்போது அரசும், கல்வி அமைச்சர் காரியவசம் போன்றவர்களும் நடவடிக்கை எடுக்கின்றனர். அவற்றால் ஆங்கில மொழி அறிவுத் திறன் படிப்படியாக அதிகரிப்பதைக் காண முடிகின்றது. >> 23

# த.தே.கூட்டமைப்பு உறுப்பினர்கள் வவுனியாவில் சத்தியப்பிர்மாணம்

வவுனியா, மார்ச் 20

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வவுனியா மாவட்டத்தில் வெற்றி பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்க >> 23



# காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி வழங்க வேண்டும் மைத்திரி

## யாழ்ப்பாணத்தில் நேற்று ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 20

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த நிலையில், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியின் தொழில்நுட்ப ஆய்வு கூடக் கட்டடத் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. அரசதலைவர் மைத்திரிபாலசிறிசேன அதில்கலந்து கொள்வதற்காக >> 06

# இந்தியாவின் வெற்றியை கொண்டாடியது இலங்கை.



இலங்கையின் 70ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட முத்தரப்பு ரி-20 தொடரில், பங்களாதேஷை வீழ்த்தி கிண்ணம் வென்றது இந்தியா. இந்திய அணியின் வெற்றியை இலங்கை ரசிகர்கள் என்றுமில்லாத அளவுக்குக் கொண்டாடி வருகின்றனர்.

இலங்கையைத் தொடரில் இருந்து வெளியேற்றிய பின்னர் பங்களாதேஷ் வீரர்கள் வெளிப்படுத்திய அருவருக்கத்தக்க கொண்டாட்டங்களில் இலங்கை ரசிகர்களுக்கு வந்த அதிருப்தியும் எதிர்ப்புமே இந்தியாவுக்கான ஆதரவாக மாறியுள்ளது, (ம)

# தமிழரசுக் கட்சி அலுவலகம் முன்பும் நேற்றுப் போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 20

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சிலர் நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழரசுக் கட்சி அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்தில் நீதி கிடைக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தார். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்தில் தீர்வு பெற்றுத்தர வேண்டும் என்று தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தலைமையில் பத்திரிசியார் சந்தியில் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் எனப் பலர் அதில் >> 06

# பணியகம் இயங்குவதால் என் பதில் அவசியமில்லை

## காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் மைத்திரிபால சிறிசேன கருத்து

யாழ்ப்பாணம், மார்ச் 20

இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க காணாமல் ஆக்கப்பட்டோருக்கான பணியகம் உருவாக்கப்பட்டுள்ளது. எனவே நான் அது >> 06

# விளிக்க மறந்த விக்கிக்கு தண்ணீர் கொடுத்த மாவை

யாழ்ப்பாணம், மார்ச் 20

நேற்று அரசதலைவர் கலந்து கொண்ட நிகழ்வில் உரையாற்றிய வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நிகழ்வுக்கு வந்த அனைவரையும் விளித்தார். ஆனால் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசாவை விளிக்க மறந்தார்.

உரையைநிறைவு >> 06

# நிசாந்தவுக்கும் சகோதரனுக்கும் விளக்கமறியல்

புத்தளம், மார்ச் 20

புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான, சனத் நிசாந்த பெரேரா மற்றும், அவரது சகோதரரான ஆரச்சிக்கட்டுவ பிரதேசசபையின் முன்னாள் தலைவருமான ஜகத் சமந்த பெரேரா ஆகிய இருவரையும், மே மாதம் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சிலாபம் மேல்நீதிமன்ற நீதிபதி நேற்று உத்தரவிட்டுள்ளார்.

ஆரச்சிக்கட்டுவ பிரதேச செயலாளரை தாக்கியமை தொடர்பில், இவர்களுக்கு எதிராக, வழக்குத் தொடரப்பட்டுள்ள நிலையில், இந்தச் சம்பவம் தொடர்பில், பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள சந்தேக நபர்கள் இருவரும், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும், சிலாபம் பொலிஸ் நிலையத்தில் கையொப்பம் இடவேண்டும் என்ற நிபந்தனையுடனே இவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

2017ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்திலிருந்து இருவரும், பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிடாத குற்றச்சாட்டுத் தொடர்பில், கைது செய்யப்பட்ட இவர்களுக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. (ற-ரி5)

# அரசியல் கைதி தேவகனின் இறுதிக் கிரியைகள் நேற்று

வவுனியா, மார்ச் 20

**கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மாரடைப்பால் உயிரிழந்த அரசியல்கைதியான ச.தேவகனின் இறுதிக்கிரியைகள் நேற்று மாலை வவுனியாவில் நடைபெற்றன.**



இறுதிக் கிரியையில் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை சுகவீனமடைந்த தேவகன் வெலிக்கடைச் சிறைச்சாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அங்கிருந்து கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அங்கு அவர் உயிரிழந்தார்.

2008ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி அவர் கைது செய்யப்பட்டார். விடுதலைப் புலிகள் அமைப்புக்கு வாகனம் கடத்திக் கொடுத்தார் என்று அவர் மீது குற்றஞ்சுமத்தப்பட்டது. கொழும்பு, நீர்கொழும்பு சிறைச்சாலைகளில் அவர் தடுத்து வைக்கப்பட்டார். புத்தளம், சிலாபம் நீதிமன்றங்களில் வழக்குகள் நடைபெற்றன.

மொத்தமாக 3 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இரு வழக்குகளுக்குத் தீர்ப்புகள் வழங்கப்பட்டு தண்டனைகள் முடிவுற்றிருந்தன. 3ஆவது வழக்குக்கான தண்டனை எதிர்வரும் நவம்பவர் 26ஆம் திகதியுடன் முடிவடையவிருந்தது. ஆனால் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் அவர் மீது புதிதாக ஒரு வழக்குப் புத்தளம் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது. அதனால் தேவகன் மனமுடைந்திருந்தார். (ற-110)



# குடைசாய்ந்தது லொறி: ஐவர் படுகாயம்

கொழும்பு, மார்ச் 20

கொட்டகலையில் லொறி ஒன்று பிரதான வீதியில் குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் ஐந்து பேர் காயங்களுக்குள்ளாகினர்.

இந்த விபத்து நேற்றுக் காலை நடந்தது.

நோட்டன்பிரிட்ஜ் பகுதியிலிருந்து பத்தனை பகுதிக்கு சென்ற லொறியே தலவாக்கலை - ஹற்றன் பிரதான வீதியில் குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது எனத் தெரிவிக்கப்பட்டது.

லொறியின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாததாலேயே இந்த விபத்து ஏற்பட்டது என பொலிஸாரின் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

லொறியில் ஏழு பேர் பயணித்துள்ளனர். இதில் ஐவர் கடும் காயங்களுக்குள்ளாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை திம்புள்ள பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

# தவறான முடிவெடுத்து இளைஞன் உயிர்மாய்ப்பு

வவுனியா, மார்ச் 20

வவுனியாவில் இளைஞர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துள்ளார். பண்டாரிக்குளம், மில் வீதியில் வசிக்கும் 36 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார்.

கழுத்தைக் கூரிய ஆயுதத்தால் காயப்படுத்தியதில் குருதிப் பெருக்கு அதிகரித்து உயிரிழந்துள்ளார் என்றும், அவர் உடனடியாக வவுனியா பொது மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோதும் அது பயனளிக்காது உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பண்டாரிக்குளம் பொலிஸார் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற-110)

# வீதியிலிருந்த பொதியில் கேரளக் கஞ்சா

மட்டக்களப்பு,மார்ச் 20

ஏறாவூர் - தைக்கா வீதியில் காணப்பட்ட பொதியொன்றிலிருந்து கேரளக் கஞ்சா நேற்று மீட்கப்பட்டது.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின்படியே இது மீட்கப்பட்டது. இதனுடன் 10 இலட்சம் ரூபா பெறுமதியான, மூன்றரைக் கிலோ கிராம் நிறையுள்ள கஞ்சாவும் இலத்திரனியல் தராசும் இதன்போது மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற,ரி4)

# முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் பொலிஸ் நிலையத்தில் முன்னிலை

நுவரெலியா,மார்ச் 20

கொட்டகலைபிரதேசமருத்துவமனையில்ஏற்பட்ட குழப்பநிலை தொடர்பில் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் மலர்வாசகம் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்னிலையாகினார் எனத் திம்புளை பத்தனை பொலிஸார் தெரிவித்தனர். விபத்துச் சம்பவம்ஒன்றுதொடர்பில்பாதிக்கப்பட்டவருக்குஉரியசிகிச்சை மேற்கொள்ள தவறியதாக தெரிவித்து வைத்தியசாலை வைத்தியர்கள் மற்றும் நிர்வாக செயற்பாட்டுக்கு எதிராக செயற்பட்டதாக இவர் மீது பொலிஸ் முறைப்பாட்டை மருத்துவமனை நிர்வாகம் பதிவு செய்திருந்தது. கடந்த வெள்ளிக்கிழமை பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்டிருந்த முறைப்பாட்டுக்கு உரிய நடவடிக்கையை பொலிஸார் மேற்கொள்ளும்வரைபணிப்புறக்கணிப்பில்ஈடுபடப்போவதாக கூறி கடந்த இரண்டு தினங்களாக் பணிப்புறக்கனிப்பை மருத்துவமனை நிர்வாகம் மேற்கொண்டது. இந்த நிலையில் பொலிஸ்விசாரணைக்காக அழைக்கப்பட்டிருந்த மலர்வாசகம் நேற்றுபொலிஸ் நிலையத்தில் முன்னிலையாகினார் எனத்தெரிவிக்கப்பட்டது. (ற,ரி4)

# மன்னார் மாவட்டச் செயலராக தமிழர் நியமிக்கப்பட வேண்டும்

## மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியம் மைத்திரிக்கு கடிதம்

மன்னார், மார்ச் 20

மன்னார் மாவட்டம் 99 சதவீதம் தமிழ் பேசும் மக்களைக் கொண்ட மாவட்டமாகும். கடந்த காலத்தில் இரு பெரும்பான்மையின மாவட்டச் செயலர்கள் 7 ஆண்டுகள் பதவி வகித்துள்ளனர். தற்போது தமிழர் ஒருவரை மாவட்டச் செயலராக நியமிக்க வேண்டும்.

இவ்வாறு மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் அரச தலைவருக்கு அவசர கடிதம் அனுப்பியுள்ளது.

அதில் உள்ளதாவது:

புதிய மாவட்டச் செயலராக நியமிக்கப்படவுள்ளவர் எமது மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். ஆனால் நீங்கள் மீண்டும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரையே மாவட்டச் செயலராக நியமிக்கவுள்ளீர்கள் என்று அறிகின்றோம். இது எமது மன்னார் மக்களுக்குச் செய்யும் பெரும் துரோகமாகும்.

கடந்த காலத்தில் பதவி வகித்த பெரும்பான்மையின மாவட்டச் செயலர் சாமானிய மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளாமல் சர்வாதிகாரியாகவே நிர்வாகம் நடத்தினார். அதனால் பல விடயங்கள் தேக்கமடைந்தன. நிர்வாகச் சீர்கேடுகளும் ஒழுங்கின்மைகளும் தாண்டவமாடின. அவ்வாறான ஒருவர் தேவையில்லை. மக்களோடு மக்களாக மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளக்கூடிய நிர்வாகத் திறனுள்ள ஒருவரே எமக்கு வேண்டும். அடக்கி ஆள்வதற்கு பெயர் நல்லிணக்கம் இல்லை. சிங்களமயமாக்கல் சிந்தனையை தயவு செய்து நடைமுறைப்படுத்தாதீர்கள். மன்னார் மாவட்ட மக்களின் விருப்புக்கு மாறாக செயற்பட மாட்டீர்கள் என நம்புகின்றோம். என்றுள்ளது.

எதிர்க்கட்சித்தலைவர் இரா.சம்பந்தன், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அமைச்சர் ரிசாத் பதியுதீன் ஆகியோருக்கும் இந்தக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-56)

# தலவாக்கலையில் விபத்து: மூவர் படுகாயம்



கொழும்பு, மார்ச் 20

தலவாக்கலை, பூண்டுலோயா வீதியில் சிறிய ரக லொறி ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானது. இதில் மூவர் படுகாயமடைந்தனர்.

இந்த விபத்து நேற்று காலை நடந்தது.

தலவாக்கலையிலிருந்து கண்டி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் பூண்டுலோயா விலிருந்து தலவாக்கலை நோக்கி பயணித்துக்

கொண்டிருந்த சிறிய ரக லொறி ஒன்றுடன் மோதியே விபத்துக்குள்ளானது எனத் தெரிவிக்கப்பட்டது.

மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்தமையே விபத்துக்குக் காரணமென பொலிஸாரின் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் கொத்மலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக் காக கம்பளைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பூண்டுலோயா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ற-ரி5)

# வீரவன்ச, சமரவீரஆகிய இருவருக்கு பிடியாணை

கொழும்பு, மார்ச் 20

தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச மற்றும் ஜயந்த சமரவீர ஆகியோரை கைதுசெய்து, நீதிமன்றில் முற்படுத்துமாறு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டமை தொடர்பில் கறுவாத்தோட்டம் பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்கு நேற்று கொழும்பு நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த வழக்கு விசாரணைக்கு இருவரும் முன்னிலையாகாததாலேயே பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசைனின் இலங்கை பயணத்தின் போது, கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை தொடர்பாகவே இவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்தது. (ற-ரி5)

# கண்டியில் 130 பேருக்கு நட்டஈடு வழங்கி வைப்பு

கண்டி, மார்ச் 20

கண்டி பிரதேசத்தில் இடம்பெற்ற அசாதாரண நிலைமையின் போது, சொத்துக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கும் முதற் கட்ட நடவடிக்கை நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

இதற்கமைய, கண்டி மாவட்டத்தின், பூஜாபிட்டிய, ஹரிஸ்பத்துவ, குண்டசாலை, அக்குரணை, தெல்தெனிய மற்றும் கங்கவட்ட கோரலை போன்ற பகுதிகளைச் சேர்ந்த 130 பேருக்கு வழங்கப்பட்டது.

நட்டஈட்டை சிறைச்சாலைகள், புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சு வழங்கியது எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி5)

# நியமன வயதெல்லையை அதிகரிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 20

அரச நியமனங்களின்போது போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு பட்டதாரிகளின் வயது எல்லையை 35இல் இருந்து 45 வயதாகக் கணிப்பதற்குப் பிரதமர் கொள்கையளவில் இணங்கியுள்ளார். அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சோ. சேனாதிராசா கோரிக்கை விடுத்தார்.
நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நிகழ்வில் அரச தலைவர் கலந்து கொண்டார். அதிலேயே மாவை. சேனாதிராசா இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.
அவர் தெரிவித்ததாவது:
வடக்கு கிழக்கில் யுத்தம் காரணமாக வேலை வாய்ப்புக்கள் தாமதமடைந்துள்ளன. அதிக பட்டதாரிகள் பல இடர்களுக்கும் முகம் கொடுத்து சிதறி வாழ்ந்து தற்போதே இயல்பு வாழ்வுக்கு திரும்பியுள்ளனர். அரச நியமனங்களுக்கான வாய்ப்பைப் பலர் தவற விட்டுள்ளனர். போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு பட்டதாரிகளுக்கு அரச வேலை வாய்ப்பின்போது வயது எல்லையை 35 ஆகக் கொள்ளாது 45 வயதாக கணிப்பதற்கு ஏற்ற ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும் எனப் பிரதமரிடம் கோரியிருந்தோம்.
அந்தக் கோரிக்கைக்கு பிரதமரும் கொள்கையளவில் இணக்கம் தெரிவித்துள்ளார். அதற்கான நடவடிக்கையை அரச தலைவரும் மேற்கொண்டு எமது மாகாணத்தில் உள்ள 45 வயது வரையான பட்டதாரிகளின் நியமனத்துக்கு ஆவன மேற்கொள்ள வேண்டும்." என்று தெரிவித்தார்.
இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்துவது பொருத்தமானது. கொழும்பு திரும்பியதும் இது தொடர்பில் ஏற்ற ஒழுங்குகள் செய்து சகல தரப்பினரின் ஊடாகவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரச தலைவர் தெரிவித்தார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டார். (ற-105)

## கணவன், மனைவி சடலங்களாக மீட்பு



மட்டக்களப்பு, மார்ச் 20
மட்டக்களப்பு, குறிஞ்சாமுனையில் கணவனும் மனைவியும் அவர்களது வீட்டிலிருந்து சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர் என வவுணதீவுப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை நடந்துள்ளது. பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சடலங்களை மீட்டுள்ளனர். கந்தசாமி வேதநாயகம் (வயது 36). நீலவண்ணன் லோகநாயகி (வயது 29) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர். இவர்களுக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர் என அவர்களது உறவினர்கள் தெரிவித்தனர். சடலங்கள் மீட்கப்பட்ட இடத்திலிருந்து. சிலதடயப்பொருள்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர். அவற்றின் மூலம் அங்கு கொலை இடம்பெற்றிருக்கலாம் என்ற சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. கணவனுக்கும் மனைவிக்கும் இடையில். தொடர்ச்சியாக குடும்பச் சண்டை இடம்பெற்று வந்தது எனவும், நேற்றுமுன்தினம் இரவு இருவருக்கும் இடையில் சண்டை ஏற்பட்டது எனவும் அயலவர்கள் தெரிவிக்கின்றனர். மனைவியை அடித்துக் கொலை செய்துவிட்டு, கணவன் தனது உயிரை மாய்த்திருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகின்றது. சடலங்கள் உடற்கூற்றுச் சோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டன. இந்தச் சம்பவம் குறித்து தீவிர விசாரணைகளில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (ற)

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு,மார்ச்.20
கொழும்பு மெஸேன்ஜர் வீதியில் இடம்பெற்ற சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார்.
கொழும்பு தெமட்டகொடை பகுதியைச் சேர்ந்த அன்டனி ராஜ் (வயது42) என்பவரே சாவடைந்தார்.
மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர் ஒருவர் காரில் சென்ற இருவர் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதில் ஒருவர் உயிரிழந்தார்.
துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்தவர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாகவும் காயமடைந்த அவரின் மனைவி சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.
சட்டவிரோத ஹெரோயின் விற்பனையே துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் என்றும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையிலிருந்து தெரிய வந்தது.
சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ற,ரி2)



## டிப்பர் மோதி ஒருவர் சாவு

திருகோணமலை,மார்ச்.20
திருகோணமலை சூரங்கல் பகுதியில், டிப்பர் மற்றும் உந்துருளி மோதியதில் ஒருவர் உயிரிழந்தார்.
மூதூர். நெய்தல் நகரைச் சேர்ந்த தௌபிக் ஹருணி (வயது 23) என்பவேரே சாவடைந்தார்.
படுகாயமடைந்த மற்றுமொருவர் தம்பலகாமம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
தம்பலகாமத்திலிருந்து. கருங்கற்களை ஏற்றி வந்த டிப்பர் வாகனமும் மூதூரிலிருந்து தம்பலகாமத்தை நோக்கிச் சென்ற உந்துருளியும் மோதியதிலேயே விபத்து நேர்ந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.
டிப்பர் சாரதி கைது செய்யப்பட்டதாகவும் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்தனர். (ற,ரி2,45)

## புதிதாக முளைத்த புத்தர் சிலை

கண்டி,மார்ச்.20
அக்குறணை பகுதியில் புதிதாகப் புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
அக்குறணை 9ஆவது மைல் கல்லுக்கு அருகாமையில் இருந்த சிறியளவிலான புத்தர் சிலை இனந்தெரியாத நபர்களால் கடந்த சனிக்கிழமை உடைக்கப்பட்டது. இச் சம்பவத்துக்கு முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு மீண்டும் அந்த இடத்தில் புதிய புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது. (ற,ரி2)

## தெல்தெனியா வன்முறை 8 பேர் நேற்று விடுவிப்பு

கண்டி,மார்ச்.20
தெல்தெனியாவில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டவர்களில் சிலர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.
கடந்த மாத இறுதியில், கண்டி தெல்தெனியப் பகுதியில் இடம்பெற்ற வன்முறையில் 24 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.
இதில், 8 பேரே விடுதலை செய்யப்பட்டனர்.
இவர்களை நேற்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியதே, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.
ஏனைய 16 பேரும் ஏப்ரல் 2 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ற,ரி2)

## மீப்பே தேசிய கல்வியியற் நிறுவகத்துக்கு புதிய விடுதி

கொழும்பு,மார்ச்.20
இலங்கையின் கல்வித்துறைக்கு பாரிய பங்களிப்பை வழங்கி வரும் மீப்பே தேசிய கல்வியியற் நிறுவகத்துக்குப் புதிய விடுதி அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று நிறுவக வளாகத்துக்குள் இடம்பெற்றது.
இவ்வாறு கல்வி அமைச்சு அனுப்பி வைத்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,
விடுதி அமைப்பதன் ஊடாக நாடளாவிய ரீதியில் காணப்படும் பாடசாலைகளின் ஆசிரியர்கள் இந்த விடுதியில் தங்கியிருந்து பயிற்சிகயையும் பாடநெறிகளையும் கற்க முடியும்.
இதற்கு முன்னர் இந்த வசதி இன்மை காரணமாக ஆசிரியர்கள் பல இன்னல்களை அனுபவித்து வந்தனர்.
இந்த அடிக்கல் நடும் நிகழ்வுக்கு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் மற்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன் விருந்தினர்களாக கலந்து கொண்டனர் நிகழ்வில் கவ்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஹெட்டியாராச்சி, தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் உட்பட கல்வி அமைச்சின் அதிகாரிகள், தேசிய கல்வி நிறுவகத்தின் உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற,ரி2)

## ஆரம்ப நிகழ்வு

திருகோணமலை,மார்ச்.20
மூலோபாய கற்கை நிலையத்தின் ஆரம்ப நிகழ்வு திருகோணமலை குளக்கோட்டன் மண்டபத்தில் இடம்பெற்றது.
இயக்குனர் ஆ . யதீந்திரா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரன் பிரதமவிருந்தினராக கலந்து கொண்டார்.
தினக்குரல் பத்திரிகையின் முன்னைநாள் பிரதம ஆசிரியர் வீ. தனபாலசிங்கம், யாழ் பல்கலைக்கழகத்தின் அரசறிவியற் துறை தலைவர் கலாநிதி கணேசலிங்கம் மற்றும் பலர் கலந்து கொண்டனர். (ற,ரி2,40)

## சீரமைப்பு பணியில் ஈடுபட்டவர் தொடருந்து மோதி உயிரிழப்பு

கொழும்பு,மார்ச்.20
கொழும்பு , பம்பலப் பிட்டிப் பகுதியில் தொடருந்தில் மோதி ஒருவர் உயிரிழந்தார்.
நேற்று அதிகாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பொரளையைச் சேர்ந்த 55 வயதுடைய ஒருவரே உயிரிழந்தவராவர்.
தண்டவாளத்தில் புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது இவர்மீது தொடருந்து மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது.
கண்டி முதல் மாத்தறை வரை சேவையில் ஈடுபடும் தொடருந்தே மோதியது. (ற,ரி2)



## உட்கட்டுமான 3 வீதிகள் சீரமைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 20
வலி.மேற்கு பிரதேச செயலாளர் பிவிற்கு உட்பட்ட பகுதியில் மூன்று உட்கட்டுமான அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு ள்ளன.
வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி வளாக முகப்பு சீரமைப்பு, அராலி முளங்குப்பிட்டி வீதிச் சீரமைப்பு மற்றும் தொல்புரம் மத்தி சனசமூக அபிவிருத்தி வேலைகள் சீரமைக்கப்பட்டுள்ளன. தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் கீழ் இவை சீர மைக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. இதேவேளை இந்தஅமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் 2 கிலோமீற்றர் நீளமான கிளவான வீதி சீரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.
மேற்படி வீதி நீண்ட கால இடைவெளியின் பின்னர் பல மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டு ள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (50)

# பால் நிலைச் சமத்துவம் கட்டாயம் தேவை

### பன்னாட்டு மகளிர் தின நிகழ்வில் பலரும் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,மார்ச் 19
ஆரோக்கியமான வேலைச்சூழல், மற்றும் பால்நிலை சமத்துவத்தை மேம்படுத்துவது அடிப்படையானது, அவற்றை அனைவரும் பின்னபற்றுதல் வேண்டும் என்பதை வலியுறுத்திய பேச்சுக்களுடனான பன்னாட்டு மகளிர் தின நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்ப்பாண மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

ஆரோக்கியமான வேலைச்சூழல் அனைவரதும் உரிமை என்ற தொனிப்பொருளில் இடம்பெற்ற இந்த நிகழ்வை யாழ்ப்பாண மாவட்டச் செயற்குழுவும், சொலிடாரிற் நிறுவனமும் இணைந்து நடத்தியது.
நிகழ்வின் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சமூகவியல் துறை தலைவர் ஜீ.பகீரதியும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகனும் கலந்து கொண்டனர்.
நிகழ்வில் ஆரோக்கியமான வேலைச் சூழலை நோக்கிய பால்நிலை சமத்துவத்தை மேம்படுத்துவதற்கான கொள்கை வழிகாட்டலின் வரைவு காணொலி மூலமாக அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த காணொலியில் பால்நிலைச் சமத்துவம் தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விரிவுரையாளர் ஜனனி தேவானந்த் உரையாற்றிருந்தார்.
அவர் தெரிவித்ததாவது; பாலியல் சமத்துவம் என்பது வேலைத்தளங்களில் கட்டாயம் தேவை. ஊழியர்கள் பல பிரச்சினைகளை எதிர் கொள்கின்றனர். அதாவது உயர் பதவிகளுக்குச் செல்லும் போது பாகுபாடு காட்டப்படுகின்றது என்றார்.
சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாண மாவட்டச் செயலர் வேதநாயகன் உரையாற்றும் போது; பாலியல் ரீதியான தொல்லைகளைக் கட்டுப்படுத்துவது என்பது கட்டாயம் தேவை. விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்கள் தமது பிரச்சினைகளை முன்வந்து சொல்ல வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.
நிகழ்வில் கலந்து கொண்ட இலங்கை ஆசிரியர் சங்க இணைப்பாளர் ரீ.தீபன், சட்டத்தரணி ஸ்ரீ.அம்பிகா, மருத்துவ கலாநிதி குருபரன், தேசிய சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் கு.கௌதமன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகவியல் துறைத் தலைவர் ஜீ.பகீரதி ஆகியோரும் பால்நிலை சமத்துவம் தொடர்பான கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர்.
இந்த நிகழ்வில் பிரதேச செயலர்கள், உதவிப் பிரதேச செயலர்கள், சட்டத்தரணிகள், சொலிடாரிட்டி நிறுவன உத்தியோகத்தர்கள், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (21, 111)

## வீதியில் கழிவுகளை போடுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 20
கோப்பாய் கைதடி வீதியில் தொடர்ந்தும் கழிவுப் பொருள்கள் கொட்டப்பட்டு வருகின்றமை தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக வலி.கிழக்கு பிரதேச சபை தெரிவித்தது.
இந்த வீதியோரத்தில் சிலர் வாகனங்களில் கழிவுகளை ஏற்றிவந்து அவற்றைக் கொட்டிவிட்டுச் செல்கின்றனர்.
கூடுதலான இறைச்சி, விலங்கு மற்றும் ஏனைய திண்மக் கழிவுகளை இந்துப் பகுதியில் கொட்டப்படுவதால் அவற்றில் இருந்து துர்நாற்றமும் வீசுகின்றமையால் வீதியால் பயணிப்போர் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக தெரிவித்துள்ளனர். (17)

## கல்லூரி வளர்ச்சிக்கு அரசிடம் இருந்து ஒரு சதமும் பெறவில்லை

யாழ்ப்பாணம், மார்ச். 20
194 வருடங்களை எமது கல்லூரி கடந்து விட்டபோதும் அரசிடம் இருந்தும் இதுவரை ஒரு சதம் கூட நாம் பெற்றதில்லை என உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் பி.எஸ் ஜெயரட்ணம் தெரிவித்தார்.
ஆசிரியர்- பெற்றோர் சந்திப்பு கல்லூரி மண்டபத்தில் அண்மையில் இடம் பெற்றது. இதில் கலந்து கொண்ட பேசகையில் இவ்வாறு தெரிவித்தார்.
இன்னும் சில ஆண்டுகளில் இரு நூற்றாண்டை எமது கல்லூரி எட்டவுள்ள நிலையில் கல்வி வளர்ச்சி பாதையில் மகுடம் சூட்டியுள்ளோம். கடந்த காலங்களில் மிசனரி மாரினால் கட்டப்பட்ட உட்கட்டமானங்களை பாதுகாத்து வருகின்றோம். எனவே அரசிடம் இருந்து எவ்வித நிதிகளையும் நாம் கோருவதில்லை. பெற்றோர்களின் பங்களிப்பிலேயே இப்பாடசாலை வளர்ச்சி அடைந்து வருகின்றது.
மேலும் இப்பாடசாலையின் உட்கட்டமானங்களை பாதுகாக்க பெற்றோர்கள் உதவவீர்களாயின் நூற்றாண்டு கால கட்டிடங்கள் பாதுகாக்கப்படுவதோடு கல்விபுலவளர்ச்சியும் மெருகூட்டப்படும் என்றார். (50)

# பன்னாட்டு மகளிர் தின நிகழ்வு




யாழ்ப்பாணம், மார்ச்.19
அரியாலை அபிவிருத்திச் சங்கத்தினால் நடத்தப்பட்ட பன்னாட்டு மகளிர் தின நிகழ்வு சரஸ்வதி சனசமூக நிலைய மண்டபத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் சங்கத் தலைவர் சு.சண்முகரட்ணம் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக இந்தியா நாட்டின் மனவளக்கலைப் பேராசிரியர் இந்திரா சண்முகசுந்தரம் மற்றும், சிறப்பு விருந்தினராக முன்னாள் வலயக்கல்விப் பணிப்பாளர் அருளேஸ்வரி வேதநாயகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.
இந்த நிகழ்வில் அழகியற்றுறை முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளரும் யாழ்.ரட்ண விருது பெற்ற கலைஞருமான மயில்வாகனன் கிருஸ்ணவேணி அவர்களிற்கு இந்தஆண்டிற்கான பன்னாட்டு மகளிர் தினவிழாவில் உயரிய மகளிராக கருதி மதிப்பளிக்கப்பட்டார்.
மேலும் சிறப்பு விருந்தினர் முன்னாள் வலயக்கல்விப் பணிப்பாளர் அருளேஸ்வரி வேதநாயகம் தனது உரையில், 'எல்லா வகையான உதவியும் தியாகமும் செய்து இந்த உலகை செழிப்பாக வைத்துக் கொள்வதற்காக இறை அருளே பெண்ணினமாக தோன்றியதாக நான் கருதுகிறேன் படித்தும் இருக்கிறேன். பெண்கள் உயர்ந்தவர்கள் அனைத்திலும் என நினைத்துக் கொண்டு வாழ்க்கை நடைமுறைகளை அமைத்துக் கொள்ள வேண்டும்.' என தெரிவித்தார்.
மனவளக்கலைப் பேராசிரியர் இந்திரா சண்முகசுந்தரம் இந்தியா(தமிழ்நாடு) தனது முதன்மை விருந்தினர் உரையில், 'பார்ப்பதற்கு பெண்மை மென்மை தான் ஆனால் அதனுடைய வல்லமை சொல்லி முடியாது. ஒரு உயிரை பெற்றெடுப்பதற்கு பெண் சந்திக்கும் வலியுணர்வு அதிகம். பெண்மை சிறப்பு பெறுவது தாய்மையிலே. அந்த வலியை தாங்கும் வல்லமையையும் பெண்ணிடத்திற்கு தான் தெய்வம் கொடுத்திருக்கிறது. இரண்டு கண் எப்படி ஒரே பார்வையால் பார்ப்பதற்கு உதவி செய்கிறதோ. அது போல தான் இந்த சமுதாயத்தில் ஒரு கண் ஆண்கள் என்றால் மற்றையது பெண்கள். ஒரு கண்ணை மூடிக்கொண்டு அதிக நேரம் இருக்க முடியாது. இந்தப் பார்வையால் தரக்கூடிய காட்சிகள் எவ்வளவு உயர்ந்ததோ அதுபோல தான் சமுதாயத்தில் ஆணும், பெண்ணும். என்னிடம் கேட்டார்கள், இந்தியாவிற்கும் யாழ்ப்பாணத்திற்குமான வேறுபாடு பற்றி, நான் கூறினேன். இந்தியாவிடம் ஒரு அவசரம் தெரிகிறது. யாழ்ப்பாணத்தில் ஒரு நிதானம் தெரிகிறது. இது நான் கண்ட உண்மைகள். இங்குள்ளவர்களிடம் உள்ள ஒரு மனிதநேயம், உதவி மனப்பான்மை அங்கு தமிழ்நாட்டிலுள்ளவர்களிடமில்லை, அங்கேயும் சொல்லி இருக்கிறேன். ஆண் பெண் சமுதாயம் என இணைப்பில் நடத்தப்படுகின்ற குடும்பம் உயர்வானதாக இருக்கப்பட வேண்டுமென்றால், அங்கு அறிவு நிர்வாகம் செய்ய வேண்டும். இதன் மூலம் நல்ல சமுதாயம் கட்டியெழுப்ப முடியும்' என்றார். (112)

## மரபுக் கவிதைப் பயிலரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 20
யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் நடத்தும் மரபுக் கவிதைப் பயிலரங்கில் கலந்து கொள்ள ஆர்வமுடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
.வகுப்புக்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 3 மணி தொடக்கம் 5 மணி வரை நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெறும். கவிஞர்களான சோ.பத்மநாதன், த.ஜெயசீலன் (மாநகர ஆணையாளர்) ஆகியோர் வளவாளர்களாகப் பங்குகொள்ளவுள்ளனர்.
12 வகுப்புக்கள் கொண்டதாக (30 மணி நேரம் 3 மாதங்கள்) கற்கை நெறி அமையவுள்ளது. கவிதைத் துறையில் ஆர்வமுள்ள எவரும் வயதுக் கட்டுப்பாடு இன்றி இக்கற்கைநெறியில் பங்கு கொள்ளலாம். ஆனால் வரவு முக்கியமானது. முப்பது பேர் மாத்திரமே வகுப்பில் அனுமதிக்கப்படுவர். அதிகளவானோர் விண்ணப்பிக்கு மிடத்து நேர்முகத் தேர்வு மூலம் தெரிவு இடம் பெறும்.
விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 31.03. 2018 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர், யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம், இல 28, குமாரசாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு சுயமுகவரி இடப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடிதவுறையையும் தங்கள் சுயவிபரத் திரட்டு ஒன்றையும் இணைத்து அனுப்ப வேண்டும் எனத் தமிழ்ச்சங்கம் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில்

# கரடி தாக்கியதில் ஒருவர் படுகாயம்

வவுனியா, மார்ச் 20
வவுனியாவில் தேன் எடுப்பதற்கு காட்டுக்குச் சென்ற மூவரில் ஒருவர் கரடி தாக்குதலுக்கு இலக்காகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக வவுனியாப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.
இந்தச் சம்பவம் ஓமந்தை பொலிஸ் பிரிவிலுள்ள கொம்புவைத்தகுளம் காட்டுப்பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் மாதர் பனிக்கர்குளம் பகுதியைச் சேர்ந்த செல்வம் மகேந்திரன் (வயது42) என்பவரே படுகாயமடைந்துள்ளார்.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது. தேன் எடுப்பதற்காக சென்ற மூவர் தேன் உள்ள பகுதிகளைத்தேடிச் சென்று எடுத்துக்கொண்டிருந்தபோது திடீரென்று ஒருவரை நோக்கிய கரடி ஒன்று பாய்ந்து சத்தத்துடன் சென்றுள்ளது இதையடுத்து கரடியின் சத்தத்திற்கு மேலும் அவ்விடத்திற்கு 11 கரடிகள் சென்று அவரைத் தாக்கி காயப்படுத்தியதாக தெரிவிக்கப்பட்டது.



இதையடுத்து அவருடன் சென்றவர்களின் உதவியுடன் பொலிஸார் வரவழைக்கப்பட்டு கரடிகளுடன் போராடி காயமடைந்தவரை மீட்டு வவுனியா பொது மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## கணக்காளர் நியமனம்

சாவகச்சேரி, மார்ச் 20
தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு கணக்காளராக இலங்கை கணக்காளர் சேவையைச் சேர்ந்த கவிதாம்பிகை பிரதீபன் நேற்று கடமைகளைப் பொறுப்பேற்றார் எனத் தெரிவிக்கப்பட்டது.
தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கணக்காளராகக் கடமையாற்றிய இலங்கை கணக்காளர் சேவையைச் சேர்ந்த வசந்தமாலா மனோகரன் வடமராட்சி தென்மராட்சி சபைக்கு இடமாற்றல் செய்யப்பட்டு கடந்த 12 ஆம் திகதி கடமைகளைப் பொறுப்பேற்றதையடுத்து வலி கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய இவர் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (9)

### வலிகாம் கல்வியத்துக்குட்பட்ட


# மீள்குடியமர்ந்த பிரதேசங்களில் உள்ள பாடசாலைகள் தொடர்பில் கள ஆய்வு

## வட மாகாண கல்வி அமைச்சர் தலைமையிலான குழு முன்னெடுத்தது

யாழ்ப்பாணம், மார்ச், 20

யாழ்ப்பாணம் வலிகாமம் கல்வி வலயத்தில் மீள் குடியமர்வு இடம்பெற்ற பகுதிகளில் அமைந்துள்ள பாடசாலைகளின் தற்போதைய நிலைமை,தேவைகள் குறித்து வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் தலைமையிலான குழுவினரின் கள ஆய்வுப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சின் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது: கடந்த வெள்ளிக் கிழமை வலிகாமம் கல்வி வலயத்தில் ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாலயம், ஊரணி கனிஸ்ட வித்தியாலயம், தையிட்டி கனேசா வித்தியாலயம், தையிட்டிசிவகுருநாதர் வித்தியாலயம், ஒட்டகப்புலம் றோ.க.த.க பாடசாலை உள்ளிட்ட ஐந்து பாடசாலைகள் கள ஆய்வுப்பணி மூலம் தற்போதைய நிலை தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மீளக்குடியமர்ந்த பாடசாலைகளின் எல்லைகளுக்கு அருகில் இராணுவ முகாம்கள் காணப்படுவதுடன் பாடசாலைகளுக்கு எந்தவித மறைப்புக்களும் இல்லாமல் திறந்த வெளியாக காணப்படுவதும் ஆய்வுப்பணியின் போது கண்டறியப்பட்டு அவற்றுக்கான மறைப்பு வேலிகளை அமைத்து மாணவர்களின் இயல்பான கற்றல் செயற்பாட்டுக்கு வளியமைக்குமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.
அதேவேளை பாடசாலைச் சூழல் பற்றைகளாலும், கற்பாறைகளினாலும் நிறைந்து இருப்பதால், அவற்றை அப்புறப்படுத்துவதற்கு வலிகாமம் வடக்குப் பிரதேச சபையிடம் இருந்து உதவிகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு கல்வி அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.



கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக இராணுவக் கட்டுப்பட்டில் இருந்து 2017ஆண்டு மே மாதத்தின் பின்னர் விடுவிக்கப்பட்ட ஒட்டகப்புலம் றோ.க.த.க. பாடசாலை மற்றும் 2018 ஆம் அண்டு ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்ட ஏனைய பாடசாலைகள் தற்போது போதிய அடிப்படை வசதிகளற்ற நிலையில் இயங்கிக்கொண்டிருப்பது ஆய்வுப்பணி மூலம் கண்டறியப்பட்டு உடனடியாக தீர்வு காணக்கூடிய விடயங்களை உடன் அமுலுக்கு வரும்வகையில் நடைமுறைப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு·கல்வி அமைச்சர் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.
மேற்குறித்த பாடசாலைகள் நீண்ட காலம் இயங்காத காரணத்தினாலும் போர் காரணமாகவும் பாடசாலைகளின் பெரும்பாலான கட்டிடங்கள் அழிவுற்ற நிலையில் காணப்படுவதால் குறித்த பாடசாலைகளுக்குத் தேவையான கட்டடங்கள், தளபாடங்கள் உள்ளிட்டவற்றை பெற்றுக்கொடுப்பதற்கான மதிப்பீடுகளை மேற்கொள்ளுமாறும் கல்வி அமைச்சர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.
அந்தக் கள ஆய்வுப்பணியில் கல்வி அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் ந.அனந்தராஜ், மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் பிரேமகாந்தன், திட்மிடல் பிரதிக் கல்விப்பணிப்பாளர் அன்ரனி, வலிகாமம் வலயக் கல்விப் பணிமனையின் தொழில் நுட்ப அலுவலர், மற்றும் கல்வி அமைச்சின் பாடசாலைகள் வேலைகள் பணிப்பாளர் சுரேஸ் ஆகியோர் ஈடுபட்டிருந்தனர்.
வடக்கு மாகாண மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தை உயர்த்தும் நோக்கில் எதிர்வரும் நாள்களில் பாடசாலைகளில் இவ்வாறான ஆய்வுப்பணிகளைமேற்கொள்ளதிட்டமிடப்பட்டுள்ளது என்றுள்ளது. (21)

## சி.க.கூ. சங்கம் வலுவானது எனில் எப்போதும் உதவுவதற்குத் தயார்

### யாழ். மாநகர ஆணையாளர் உறுதி



யாழ்ப்பாணம்,மார்ச்.20
சிக்கனக் கடனுதவுக் கூட்டுறவுச் சங்கம் வலுவானதாகச் செயற்பட்டால் அந்தச் சங்கத்துக்கு எனது உதவி எப்போதும் இருக்கும் என்று யாழ்ப்பாண மாநகர · சபையின் ஆணையாளர் இ.த.ஜெயசீலன் தெரிவித்தார்.
யாழ்ப்பாணம் மாநகர சபை ஊழியர் சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் 40ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை மு.ப10மணிக்கு நாவலர்கலாச்சார மண்டபத்தில் நடைபெற்றது.
இதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது; யாழ்ப்பாண மாநகர சபை ஊழியர் சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச்சங்கம் ஆனது மிக நீண்ட வரலாற்றைக் கொண்டது. 1946 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆயிரத்து 200 பேர் மாநகர சபையில் வேலை செய்கிறார்கள். அவர்களை ஒரே தடவையில் பார்க்கும் அளவுக்கு இந்தச் சங்கம் செயற்பட வேண்டும். சங்கம் எப்பொழுதும் உடையாமலும் சங்கம் வலுவாகச் செயற்படுமானல் என்னுடைய உதவி எப்பொழுதும் சங்கத்துக்கு இருக்கும் என்றார்.
நிகழ்வுக்கு தலைமை வகித்த சிக்கனக்கடனுதவுக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் கோ.நாரேந்திரன் தனது தலைமையுரையில் தெரிவிக்கும் போது; ஆறு இலட்சம் ரூபா பணம் எங்களுடைய சங்கத்தில் வைப்பில் இருக்கிறது. தற்போது 24அங்கத்தவர்கள் புதிதாக சங்கத்தில் இணைந்துள்ளனர். ஒரு வருடத்துக்கு இரண்டு இலட்சம் ரூபா வைப்பில் இட்டால் சங்கம் வளர்ச்சி அடையும் என்றார்.
நிகழ்வில் கலந்து கொண்ட செயலாளர் லீ.அனிடஸ் சென்ற பொதுக்கூட்ட அறிக்கையை சமர்ப்பித்தார். அதனைத்தொடர்ந்து பொருளாளர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. புதிய அங்கத்துவம் பெற்றவர்களை அங்கிகரிப்பு நிகழ்வும் இடம்பெற்றது. (21, 113)

## எமது நகரை நாம் சுத்தமாக வைத்திருப்போம்





யாழ்ப்பாணம், மார்ச்.20
'எமது நகரை நாம் சுத்தமாக வைத்திருப்போம்' எனும் தொனிப்பொருளிலான துப்புரவுப் பணி இடம்பெற்றது. நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிமுதல் 8.30 மணிவரையில் யாழ்ப்பாணம் பண்ணை கடற்கரையோரத்தில் இந்தப்பணி இடம்பெற்றது.
கடல் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் அனுசரணையோடு சத்தியசாயி பன்னாட்டு நிறுவனம் வடபிராந்திய தொண்டர்களால் பணி மேற்கொள்ளப்பட்டது.
இது தொடர்பில் கடல் சூழல் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்ததாவது:
'ஒவ்வொரு மாதமும் கடல் சார்ந்த சூழலை இவ்வாறு சுத்தம் செய்கின்றோம், இந்தச் சபையின் நோக்கம் இலங்கையிலிருக்கின்ற அனைத்து கடல் மற்றும் கடலை அண்டிய சூழலை மாசு இல்லாது சுத்தமாக வைத்திருப்பதே. அடுத்ததாகப் புங்குடுதீவில் செய்ய இருக்கின்றோம். தற்போது தான் இந்தச் சபையின் திட்டங்கள் கூடுதலாக உள்ளது. 14 கரையோர மாவட்டங்கள் இருக்கிறது. அதில் யாழ்ப்பாணத்திலும், மன்னாரிலும் தற்போது தான் கவனம் செலுத்தத்தொடங்கியிருக்கிறோம். குருநகரில் பெரிய பிரச்சினையை எதிர் நோக்குகிறோம். அங்கு படகுகளின் பாவனை அதிகம். அங்கு குப்பைகள் படகுகளாலும், மக்களாலும், வடிகான்களாலும், ஒவ்வொரு பருவத்திலும் அடித்து கொண்டு வரப்படுகின்ற தாளைகள், போத்தல்களாலும் மாசுக்கள் பலவிதமாக ஏற்படுகிறது. இதனால் குருநகரில் மொடல் விலேஜ் என 50, 100 வீடுகளைத் தெரிவு செய்து அவர்களுக்குச் சரியான முறையில் பயிற்சி வழங்கி மாநகர சபையோடு இணைந்து செய்வதாகவும் திட்டம் இருக்கின்றது. வெகு விரைவில் செய்வோம். எமது சபையால் தற்போது தான் முதன்மை நோக்காக வடக்கு மாகாணத்தில் முன்னுரிமை வழங்கி நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது என்றனர். (21,112)

## மகளிர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 20
இலங்கை வங்கியின் யாழ்.மாவட்டக் கிளைகளால் ஒழுங்கு செய்யப்பட்ட மகளிர் தின நிகழ்வு யாழ்.இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 3.30 க்கு நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக இலங்கை வங்கியின் வடக்கு மாகாண உதவிப் பொது முகாமையாளர் எம்.ஜே.பிரபாகரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.
மகளிர் தின நிகழ்வுகளாக சிறப்புரை, பட்டிமன்றம், நடனம், பாடல் என்பன நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

## பூநகரியில் தீ எல்லை மீறியது:

# 250 தென்னம்பிள்ளைகளும் வீட்டின் ஒரு பகுதியும் கருகின

யாழ்ப்பாணம், மார்ச் 20
பூநகரியில் பற்றைக்கு வைத்த தீ பரவியதால் சுமார் 250 தென்னம் பிள்ளைகள் எரிந்து அழிந்தன. வீடு ஒன்றின் பகுதியும் எரிந்தது என்று பூநகரிப் பொலிஸார் தெரிவித்தனர்.
பூநகரி பரமங்கிராய் வெட்டுக்காடு பகுதியில் உள்ள பற்றைக் காணியை அதன் உரிமையாளர் துப்பரவு செய்யத் தீர்மானித்துள்ளார். இரண்டுபேரை யாழ்ப்பாணத்திலிருந்து அழைத்துச் சென்று துப்பரவுப் பணி இடம்பெற்றது. பற்றைகளை வெட்டி அவற்றுக்குத் தீ மூட்டினர். பற்றைக் குவியல் கொழுந்துவிட்டு எரிந்தது. நேற்றுமதியம் வெயில் வெட்கையும் தீவிரமாக இருந்தது. காற்று வீசத் தொடங்கியது. அதன்போது எரிந்துகொண்டிருந்த நெருப்பு காற்றில் பரவி அருகிலிருந்த தென்னம்பிள்ளைக் காணிக்குள் வீழ்ந்தது.
அதனால் சுமார் 250 தென்னம்பிள்ளைகள் தீயில் கருகி அழிந்தன. அதுமட்டுமன்றி அந்தக் காணிக்கு அருகிலிருந்த வீடு ஒன்றின் ஒரு பகுதியும் எரிந்தது.
சம்பவம் தொடர்பில் கிராம அலுவலர் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார். பொலிஸாரும் அங்குள்ள ஏனைய தென்னந்தோட்டக் காணிகளின் உரிமையாளர்களது இரண்டு தண்ணீர் பௌசர்களது உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.
காணியைத் துப்பரவில் ஈடுபட்டிருந்த இருவரும விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளனர். என்று பொலிஸார் தெரிவித்தனர்.
தற்போதைய காலநிலை வெயில் கூடிய, காற்று அதிகமாக வீசும் நிலை காணப்படுகிறது. எனவே மதிய நேரங்களில் தீ மூட்டுவதை இயன்றளவு தவிர்த்துக் கொள்ளுமாறும் பொலிஸார் கேட்டுள்ளனர். (4)

## தீர்வு...

பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்கவேண்டும் என்ற விருப்பம் அரசதலைவர் மைத்திரிபாலவுக்கு இருக்கிறது என்பதை நாங்கள் அறிந்துள்ளோம். இந்த விடயத்தில் அவருக்குச் சவால்கள் உள்ளன. அவற்றைச் சமாளித்து அவர் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த நாட்டுக்கு வெள்ளையர்களிடம் இருந்து சுதந்திரம் பெற சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் எனப் பேதமின்றி எல்லோரும் இணைந்துதான் போராடினார்கள். ஆனால் சுதந்திரம் கிடைத்த பின்னர் நாங்கள் ஓரங்கட்டப்பட்டுவிட்டோம்.

தமிழ் மக்கள் தனிநாட்டைக் கேட்கவில்லை. தங்களுக்கான அதிகாரங்களை ஐக்கிய இலங்கைக்குள்ளே பெற்றுக்கொள்ளவே தமிழ் மக்கள் விரும்பகின்றனர்

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. நாட்டை இப்படியே கொண்டு செல்ல முடியாது. நாடு மிகப்பெரிய துன்பங்களையும், பொருளாதாரப் பின்னடைவையும் சந்தித்துள்ளது. உள்நாட்டில் பிரச்சினையைத் தீர்த்து வைத்த தலைவராக பன்னாடுகள் அங்கீகரிக்கும் அளவுக்கு மைத்திரிபால சிறிசேன செயற்படுவார் என்பதில் எமக்கு எவ்வித சந்தேகமும் இல்லை.

இலங்கையை விடப் பின்தங்கியிருந்த பல நாடுகள் தற்போது முன்னேற்றம் கண்டுள்ளன. உள்நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்காது நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற முடியாது. எமது பிரதேசங்களில் உள்ள சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில் பேட்டைகளை முன்னேற்ற வேண்டும். எமது மாணவர்களின் ஆற்றல்கள் வெளிக்கொணர வேண்டும்.

தமிழ் மக்களாகிய நாம் எமது பிரச்சினைகளை தீர்த்து வைப்பீர்கள் என்ற நம்பிக்கையிலேயே நாம் உங்களுக்கு முழுமையான ஆதரவை வழங்கியுள்ளோம். உங்களால் எமது பிரச்சினைகளை நிச்சயமாகத் தீர்த்து வைக்க முடியும். நாங்கள் அளவுக்கு அதிகமாக துன்பப்பட்டுவிட்டோம்.

இந்த நிலை தொடர்ந்தால் நிலமை மோசமடைந்து விடும். அந்த நிலை உருவாகக் கூடாது. சிங்களவர்கள் கெட்டவர்கள் அல்ல. நாங்கள் அவர்களை மதிக்கின்றோம். இது எமது பிரச்சினை. நாங்கள் எங்களுக்குள்ளேயே தீர்த்துக் கொள்ளலாம். நாம் தனி நாடு கேட்கவில்லை. இந்த நாட்டில் மற்றைய மக்களைப் போல சமாதானமாக, அமைதியாக எமது கலாசாரம், பாரம்பரியத்துடன் வாழ வழிவகை செய்ய வேண்டும். அதற்கான ஒரு சூழ்நிலையை நாம் அனைவரும் இணைந்து உருவாக்க வேண்டும் -என்றார். (ம-8)

## காணாமல்...

யாழ்ப்பாணம் வந்தார். அவரது கவனத்தை ஈர்க்கும் வகையில் இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணம் பிரதான சாலையில் காலை 8 மணி முதல் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்தில் உரிய தீர்வு வழங்க வேண்டும் என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வலியுறுத்தினர். சென். பற்றிக்ஸ் கல்லூரியை நோக்கி அவர்கள் ஊர்வலமாகச் செல்ல முற்பட்டனர். அவர்களைப் பொலிஸார் தடுத்து நிறுத்தினர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெண் ஒருவர் மயங்கினார்.

**பொலிஸாரின் செயலால் வாக்குவாதம்**

நிகழ்வு முடிந்து அரச தலைவர் வெளியேறிபோது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வீதிக்கு வந்து வீதியை மறிக்க முயன்றனர். அங்கு கடமையில் இருந்த பொலிஸார் அவர்களைத் தடுத்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பெண்களை ஆண் பொலிஸார் தள்ளினர். அதனால் அங்கு வாக்குவாதம் ஏற்பட்டது. அரச தலைவர் அங்கிருந்து அகன்றதும் பொலிஸாரும் அங்கிருந்து அகன்றனர்.

அங்கு பாதுகாப்புக் கடமையில் பெண் பொலிஸார் எவரும் இருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

**ஏமாற்றம்**

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களின் பிரதிநிதிகள் மூவரை அரச அதிபர் சந்திப்பார் என்று தெரிவிக்கப்பட்டபோதும் அது நடக்கவில்லை என்று அருட்தந்தை சக்திவேல் தெரிவித்தார்.

"நாங்கள் காணாமல் போனோர் விடயமாக போராடிக்கொண்டு இருக்கின்றோம். அருட்தந்தை ஜிம்ரான் , அருட்தந்தை பிரான்சீஸ் இவர்கள் இந்த கல்லூரியின் அதிபராக இருந்தவர்கள்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட முதலமைச்சரோ, எதிர்க்கட்சித் தலைவரோ, கல்லூரி நிர்வாகமோ அரச தலைவர் முன்னிலையில் அது தொடர்பில் பேசவில்லை.

அரச தலைவரிடம் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எங்கே என அவர்கள் கேட்டு இருக்க வேண்டும். யாரும் அது தொடர்பில் பேசவில்லை.

கூட்டத்தின் இறுதி வரையில் நாங்கள் காத்திருந்தோம். ஆனால் எங்களை அவர் சந்திக்கவில்லை." என்று அருட்தந்தை சக்திவேல் தெரிவித்தார்.

**பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவர் ஆர்ப்பாட்டம்**

சென்.பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவர்களாலும் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது. இராணுவத்திடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டவரான கல்லூரியின் முன்னாள் அதிபர் அருட்தந்தை பிரான்ஸ்சிஸ் தொடர்பிலும், அவருடன் சரணடைந்தவர்கள் தொடர்பிலும் தகவல்களை வெளிப்படுத்த வேண்டும் என்று கோரியே அவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

**வேதனை**

காணாமல் ஆக்கப்பட்ட எமது கல்லூரி அதிபர் தொடர்பில் கேட்காது கல்லூரிக்கு நீச்சல் தடாகம் அமைத்துத் தர வேண்டும் என்று கல்லூரி நிர்வாகம் கோரியது மன வேதனை தருகின்றது என்று தெரிவித்தனர் ஆர்ப்பாட்டம் நடத்திய பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவர்கள்.

"நிகழ்வில் உரையாற்றிய கல்லூரி நிர்வாகம் சார்ந்த எவரும் தமது கல்லூரி முன்னாள் அதிபர் அருட்தந்தை பிரான்சீஸ் காணாமல் ஆக்கப்படமை தொடர்பில் கருத்து எதுவும் தெரிவித்து இருக்கவில்லை. ஆனால் கல்லூரிக்கு புதிதாக நீச்சல் தடாகம் அமைத்துத் தர வேண்டும் என்று அரச தலைவர் முன்னிலையில் கோரி இருக்கின்றார்கள். இது எமக்கு மிகுந்த மனவேதனை தருகின்றது." என்று அவர்கள் தெரிவித்தனர். (ம-8,32,37)

## தமிழ்...

பெற்ற அரச தலைவர் தேர்தலில் மக்கள் எனக்கு வெற்றியை பெற்றுக்கொடுத்தார்கள். நான் அந்த நம்பிக்கையை உடைத்து எறியவில்லை. அந்த கொள்கைகளை நான் மாற்றிக்கொள்ளவும் இல்லை. மாற்றப்போவதும் இல்லை.

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவித்தார். புனித பத்திரிசியார் கல்லூரியின் புதிய தொழில்நுட்ப கூடத்தை மாணவர்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

வடக்கு மக்களின் மீது எனக்குள்ள மதிப்பும் அன்பும் காரணமாகவே நான் இன்று இங்கு வந்தேன்.

எமக்குப் பல அரசியல், பொருளாதார, சமூக பிரச்சினைகள் காணப்படுகின்றன. அனைத்துப் பிரச்சினைகளுக்கும் நாம் தீர்வு காண வேண்டும். அதற்கான பொறுப்பும் கடமையும் எமக்குள்ளது. மனிதர்களை நேசிப்பதும் சிநேகமுடன் வாழ்வதும் ஏனையவர்களுக்கு உதவி புரிவதும் மனிதர்களிடம் காணப்பட வேண்டிய அடிப்படைப் பண்புகளாகும். அவை மனிதர்களுடைய பிரதான பொறுப்பும் கடமையுமாகும். நான் அந்தக் கொள்கையுடன் வாழ்வதனாலேயே இத்தகைய முக்கிய சந்தர்ப்பங்களில் நான் பங்குகொள்கிறேன்.

**சிங்கள மாணவர்கள்**

இங்கு உரை நிகழ்த்தியவர்கள் இந்தப் பாடசாலையில் சிங்கள மாணவர்கள் கூட கல்வி கற்றனர் என்று குறிப்பிட்டார்கள். இற்றைக்கு 40, 50 ஆண்டுகளுக்கு முன்னர் வடக்கில் யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலைகளில் சிங்கள மாணவர்கள் கல்வி கற்றார்கள் என்பதை நானும் அறிவேன். முன்னாள் நாடாளுமன்ற சபாநாயகர், கே.பி.ரத்னாயக்க அநுராதபுர மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர். அவர் யாழ்ப்பாண பாடசாலை ஒன்றிலேயே தனது ஆரம்பக் கல்வியைப் பெற்றார். பாடசாலை என்பது கல்வியை கற்பிக்கும் இடமாகும். மொழி, இனம் அல்லது ஏனைய பேதங்களின்றியே கல்வி கற்பிக்கப்படல் வேண்டும். கல்வியைப் பெற்றுக்கொள்ளும் மாணவர்கள் தொடர்பில் எந்தவொரு வேறுபாடுகளும் காணப்படக்கூடாது. அதுவே கல்வி தொடர்பான அடிப்படை சித்தாந்தமும் கொள்கையுமாகும்.

உலகின் எந்தவொரு நாட்டிலும் காணப்படும் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு அந்த நாட்டு மக்களுக்கு சிறந்த கல்வியைப் பெற்றுக்கொடுத்தல் அவசியமாகின்றது. கற்றவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க அந்த நாடுகளில் பிரச்சினைகள் குறைகின்றன. எந்தவொரு நாட்டிலும் பொருளாதார, அரசியல் உள்ளிட்ட ஏனைய பிரச்சினைகள் அதிகரிப்பதற்கு கற்றவர்களின் எண்ணிக்கை குறைவாக இருத்தலும் ஒரு காரணமாகும்.

**நீச்சல் தடாகம்**

இந்தப் பாடசாலையில் நீச்சல் தடாகம் இல்லை என்று எனக்கு அறியக் கிடைத்துள்ளது. அதிபர் அதனை எனக்குக் கூறவில்லை. மெல்கம் ரஞ்சித் பேராயரே எனக்கு இதனைத் தெரிவித்தார். அதற்கு நான் உதவி வழங்க எதிர்பார்க்கின்றேன். அதற்கான திட்டத்தையும் மதிப்பீட்டையும் எனக்கு அனுப்பி வையுங்கள். கல்விக்கு நாம் முன்னுரிமை அளித்தல் வேண்டும். சில தினங்களுக்கு முன்னர் இந்தியாவில் இடம்பெற்ற மாநாட்டில் நான் கலந்துகொண்டேன் என்பதை நீங்கள் ஊடகங்களினூடாக அறிந்திருப்பீர்கள். அதில் 47 நாடுகளின் அரச தலைவர்கள் பங்குபற்றினார்கள். அவர்களுடன் நான் சிநேகபூர்வமாக உரையாடினேன். அந்தந்த நாடுகளிலும் எமது நாட்டிலும் காணப்படும் கல்வி முறைகள் தொடர்பாக நாங்கள் கலந்துரையாடினோம்.

**இலவசக் கல்வி**

எமது நாட்டில் முதலாம் தரத்திலிருந்து பல்கலைக்கழக கல்வி வரை இலவசக் கல்வி வழங்கப்படுகின்றது என்பதை நான் சுட்டிக் காட்டினேன். சில தலைவர்கள் தமது நாடுகளில் நான்கு வருடங்கள் இலவசக் கல்வி வழங்கப்படுகின்றது என்று குறிப்பிட்டார்கள். சிலர் 8 வருடங்கள் இலவசக் கல்வி வழங்கப்படுகின்றது என்றும், சிலர் 15 வயது வரை இலவசக் கல்வியை வழங்குவதாகவும் குறிப்பிட்டார்கள். ஆனால் பெரும்பாலான நாடுகள் பல்கலைக்கழக கல்வியை தாம் இலவசமாக வழங்குவதில்லை என்றே குறிப்பிட்டார்கள்.

சீனா ஒரு வளர்ச்சியடைந்த நாடாகும். ஆனால் சீனப் பல்கலைக்கழகங்களில் எந்தவொரு மாணவருக்கும் இலவசக் கல்வி வழங்கப்படுவதில்லை. எமது நாட்டில் எவ்வளவு சேவைகள் மக்களுக்கு வழங்கப்படுகின்றன?

**எல்லாம் இலவசம்**

அரசு இலவசக் கல்வியை வழங்குகின்றது. இலவச மருத்துவம் வழங்குகின்றது. ஏழை மக்களுக்கு உதவிகள் வழங்கப்படுகின்றன. அரசு நட்டம் அடைகின்றபோதிலும் மக்களுக்கு சேவையாற்றுகின்றது. பல உலக நாடுகள் எம்மைப் போன்று சகல விடயங்களையும் இலவசமாக வழங்காத காரணத்தாலேயே அவை வளர்ச்சியடைந்துள்ளன. ஆனால் அப்படி நடைபெறுகின்றதென்பதனால் நாம் இலவசமாக வழங்கும் எதனையும் கட்டுப்படுத்தப் போவதில்லை. தொடர்ந்தும் வழங்குவோம். கல்வியை வழங்குகையில் புதிய கல்விக் கொள்கைகளினூடாக செயற்படுவதற்கான பொறுப்பும் கடமையும் எமக்குள்ளது.

**நான் கரிசனையுடன் உள்ளேன்**

எதிர்க்கட்சித் தலைவரும், முதலமைச்சர் விக்னேஸ்வரனும் இங்கு பல விடயங்களைக் குறிப்பிட்டார்கள். அவர்கள் தெரிவித்த விடயங்கள் தொடர்பாக நாம் எப்போதும் பொறுப்புடன் செயற்படுகிறோம். இன்று எமது நாட்டின் அரசியலில் ஏற்பட்டுள்ள சிக்கலான நிலையை நீங்கள் அறிவீர்கள். நாட்டை நேசிக்கும் அரசியல்வாதிகள் எத்தனை பேர் உள்ளார்கள் என்பது ஒரு பிரச்சினையாக உள்ளது. அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக தாமே உருவாக்கிக் கொண்ட தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்கள் காணப்படுகின்றன.

அவர்களுக்கு நாட்டு மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டிய அவசியமில்லை. அவர்களுக்குத் தேசிய ஒற்றுமையைப் பலப்படுத்த வேண்டிய தேவையும் இல்லை. எவ்வாறாயினும் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே அவர்களின் தனிப்பட்ட அரசியல் நிகழ்ச்சி நிரல்களில் காணப்படுகின்றது. இவற்றுக்கு ஏமாறும் குழுவினரும் நாட்டில் உள்ளனர். நாட்டு மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உண்மையான அரசியல்வாதிகளின் ஒத்துழைப்பு தேவையாகும்.

நாட்டின் அடுத்த அரச தலைவர் யார்? தலைமை அமைச்சர் யார்? என்பது மக்களின் முக்கிய பிரச்சினையல்ல. இவ்வாறு நீண்ட காலமாக சிலர் செயற்பட்டுள்ளனர். சொற்ப அளவினரே நாட்டை நேசித்து செயற்பட்டுள்ளனர். இவை அனைத்தையும் நாம் படிப்பினையாகக் கொள்ள வேண்டும். நாட்டை நேசிக்காத, அதிகாரங்களை பற்றி மாத்திரமே சிந்திக்கும் அரசியல்வாதிகளை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் - என்றார். (ம-5,8)

## பணியகம்...

தொடர்பில் மேலதிகமாக எதனையும் கூற விரும்பவில்லை என அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரியின் தொழில்நுட்பக் கட்டடத் தொகுதித் திறப்பு விழா நிகழ்வில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நான் இந்த நிகழ்வுக்கு வரும் பாதையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர். அவர்களுக்காகவே நாடாளுமன்றில் சட்டம் ஒன்று இயற்றப்பட்டுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு தீர்வை வழங்கவும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான பணியகம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அந்தப் பணியகத்துக்கான அதிகாரிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர். எனவே நான் இது தொடர்பாக அதிகமாக இப்போது பேச வேண்டிய தேவை இல்லை - என்றார். (ம-8)

## தமிழரசுக்...

கலந்து கொண்டனர். அரச தலைவர் நிகழ்வில் கலந்து கொண்டபின்னர் அங்கிருந்து அகன்றதும் ஆர்ப்பாட்டம் செய்தவர்களும் கலைந்து சென்றனர்.

அதன்பின்னர் மதியம் மார்ட்டின் வீதியில் உள்ள தமிழரசுக் கட்சி அலுவலகம் முன்பாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சிலர் ஒன்று கூடினர். தமக்கு நீதி வழங்க வேண்டும் என்று அவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். (ம-8)

## விளிக்க...

செய்து வந்தமர்ந்த முதலமைச்சர் அங்கிருந்த தண்ணீர் போத்தலை எடுத்துத் திறக்க முயன்றார். அது முடியாது போனதால் அருகில் இருந்த மாவையிடம் கொடுத்துத் திறந்து தரும்படி கேட்டார். அவரும் திறந்து கொடுத்தார். அப்போது பரஸ்பரம் இருவரும் புன்னகையில் பேசிக் கொண்டனர். (ம-8)

## தனிப்பட்ட தாக்குதல்களால் சிலாபத்தில் பதற்றம் பொலிஸார் குவிப்பு

கொழும்பு, மார்ச் 20

சிலாபம் மாதம்பே மற்றும் எஹலியகொட பகுதிகளில் இடம்பெற்ற இரு வேறு தனிப்பட்ட தாக்குதல் சம்பவங்களால் அந்தப் பகுதியில் பதற்ற நிலை தோன்றியது. இருப்பினும் பொலிஸார் குவிக்கப்பட்டு உடனடியாகவே நிலமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

மேலும், தாக்குதல்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்களையும் கைது செய்தனர்.

மாதம்பேயில் முஸ்லிம் இளைஞர் ஒருவர் பெரும்பான்மை இன முதியவர் ஒருவர் மீது தாக்குதல் நடத்தியுள்ளார். இதனால் அவர் காயமடைந்து சிலாபம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இதனால் அங்கு பதற்றநிலை தோன்றியது.

இருப்பினும், மாதம்பே பழைய நகர் பகுதிக்கு பொலிஸாரும், பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையினரும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு பதற்றத்தைத் தணிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தாக்குதல் நடத்திய இளைஞரையும் பொலிஸார் கைது செய்தனர்.

எஹலியகொடையிலும் பெரும்பான்மை இன இளைஞர் ஒருவர் மீது முஸ்லிம் இளைஞர்கள் நடத்திய தாக்குதல் காரணமாகவும் அங்கு பதற்றம் ஏற்படும் சூழல் உருவாகியது. பொலிஸ் நடவடிக்கை மூலம் நிலமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. (5,71)

# போர்க்குற்ற விசாரணை குறித்து ஜெனிவாவில் கடும் சொற்போர்!

## தமிழ்ப் பிரதிநிதிகளும், சரத் வீரசேகரவும் கூட்டத்தில் நேரடி கருத்து மோதல்

கொழும்பு, மார்ச் 20

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நேற்று நடைபெற்ற உபகுழுக் கூட்டமொன்றின்போது இலங்கை குழுவினருக்கும், புலம்பெயர் தமிழ்ப் பிரதிநிதிகளுக்கும் இடையே கடும் வாக்குவாதம் இடம்பெற்றுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 37ஆவது கூட்டத்தொடர் சுவிஸ் தலைநகரான ஜெனிவாவில் நடைபெற்று வருகின்றது. அரச பிரதிநிதிகள் பங்கேற்கும் கூட்டம், அரசசார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளும் உப கூட்டம் என்று இரண்டு வகையான சந்திப்புகள் இடம்பெற்று வருகின்றன.

அரசசார்பற்ற அமைப்புகளுக்கான கூட்டத்தில் மனித உரிமை செயற்பாட்டாளர்கள், சட்டவல்லுநர்கள் எனப் பல தரப்பினரும் பங்கேற்பார்கள். இலங்கையிலிருந்தும் பல குழுக்கள் சென்றுள்ளன.

இதில் மகிந்த அணியான பொது எதிரணியைப் பிரதிநிதித்துவப்படுத்தி முன்னாள் கடற்படை அதிகாரியான ரியல் அட்மிரல் சரத் வீரசேகர தலைமையிலான குழுவொன்று பங்கேற்றது.

ஓய்வுபெற்ற முக்கிய இராணுவ அதிகாரிகள், போரின்போது காயமடைந்து ஊனமுற்ற படைச் சிப்பாய்கள் சிலரையும் நேரடிச் சாட்சிகளாக அழைத்துச் சென்றுள்ளார் சரத்வீரசேகர.

நேற்றைய கூட்டத்தின்போது இறுதிக் கட்டப் போர் சம்பந்தமாகவும், அது தொடர்பில் முடங்கியுள்ள விசாரணைகள் பற்றியும், இலங்கையில் சிறுபான்மையின மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள அடக்குமுறைகள் சம்பந்தமாகவும் புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகள் எடுத்துரைத்தனர்.

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் சரத் வீரசேகர கருத்துகளை வெளியிட்டுள்ளார். இலங்கையில் மனிதாபிமான நடவடிக்கையே முன்னெடுக்கப்பட்டது. படையினர் குற்றங்களில் ஈடுபடவில்லை, எனவும் அவர் வாதிட்டுள்ளார்.

இவ்வாறு இரு தரப்புகளுக்கும் இடையே கடும் சொற்போர் மூண்டுள்ளது. (5)

# விடைபெறுகின்றார் ரணில்

## குழப்பங்களுக்கு முற்றுப்புள்ளி

கொழும்பு, மார்ச் 20

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியில் மாற்றம் வேண்டுமென கட்சிக்குள்ளேயே கருத்து வலுத்து வரும் நிலையில், தனது பிறந்தநாளான எதிர்வரும் 24ஆம் திகதி சர்ச்சைகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரான தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க முற்றுப்புள்ளி வைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தலைமைப் பதவியைத் துறக்கும் அறிவிப்பை அவர் பிறந்தநாளன்று வெளியிடுவார் என்றும், கட்சியின் எதிர்காலம் சம்பந்தமாக சிறப்பு உரையொன்றை நிகழ்த்தவுள்ளார் என்றும் சிறிகொத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க 1994ஆம் ஆண்டு முதல் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராகவுள்ளார். கடந்த மாதம் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியைத் தழுவியதால் அவருக்கு எதிராக கட்சியிலும் கூட்டு அரசிலும் எதிர்ப்புகள் வலுப்பெற்றன. தலைமை அமைச்சர் பதவி விலக வேண்டுமென சுதந்திரக் கட்சி போர்க்கொடி உயர்த்தியிருந்தது. அரச தலைவருடன் இணக்கப்பாடு எட்டப்பட்டதால் அந்த நடவடிக்கை கைவிடப்பட்டது.

ஆனால், ஐக்கிய தேசியக் கட்சிக்குள் தலைமைத்துவத்தில் மாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டுமென எழுச்சியடைந்த எதிர்ப்புகளை தலைமை அமைச்சரால் தணிக்க முடியாது போனது. ரணிலுக்கு எதிராக நாடாளுமன்றில் கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையில் ஐக்கிய தேசியக் கட்சியின் சில உறுப்பினர்கள் கையெழுத்திடும் அளவுக்கு அவருக்கு எதிரான எதிர்ப்புகள் வலுப்பெற்றுள்ளன.

எதிர்வரும் 24ஆம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 69ஆவது பிறந்தநாளைக் கொண்டாடவுள்ளார். பிறந்தநாளில் சிறப்பு அறிவிப்புகள் சிலவற்றை ரணில் விடுக்கவுள்ளதுடன், கட்சியின் தலைமைப் பதவியையும் புதியவரிடம் கையளிக்கவுள்ளார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. (5)

# அமைச்சரவை மாற்றம் ஒத்திவைப்பு

கொழும்பு, மார்ச் 20

கூட்டு அரசின் இரண்டாம் கட்ட அமைச்சரவை மாற்றம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று அறியமுடிகின்றது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் பாகிஸ்தான் பயணம், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை, தமிழ் சிங்களப் புத்தாண்டு உட்பட மேலும் சில காரணிகளைக் கருத்திற் கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கூட்டரசு தோல்வியடைந்ததால் அரச கட்டமைப்பில் அதிரடி மாற்றங்களைச் செய்வதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தீர்மானித்தார். இதன் ஓர் அங்கமாக அமைச்சரவை மாற்றம் இடம்பெற்றது.

இந்த மாத இறுதிக்குள் இரண்டாம்கட்ட அமைச்சரவை மறுசீரமைப்பு இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அரச தலைவரின் பாகிஸ்தான் பயணம், தலைமை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை உட்பட மேலும் சில அரசியல் காரணிகளால் நடைபெறாது என்றே தெரியவருகின்றது.

நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஐக்கிய தேசியக் கட்சி முறியடித்து, கூட்டரசு தொடர்ந்தால் மாத்திரம் ஏப்ரலுக்குப் பிறகு அமைச்சரவை மாற்றம் இடம்பெறுவதற்குரிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. இதற்கிடையில் அரச தலைவரைத் திருப்திப்படுத்தக் கூடிய நடவடிக்கையில் ஐக்கிய தேசியக் கட்சி இறங்கி அந்த முயற்சி கைகூடும் பட்சத்தில் இரண்டாம்கட்ட மாற்றம் ஏப்ரல் இறுதியில் இடம்பெறக்கூடும். (5)




# இலங்கையில் முஸ்லிம்கள் மீதான இன வன்முறையை உடன் நிறுத்து!

## ஜெனிவாவில் விண்ணதிரக் கோசம்

இலங்கையில் முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்படும் இனவன்முறைக்கு எதிராகவும், அந்த வன்முறையுடன் தொடர்புடையவர்களைக் கைதுசெய்து உடனடியாக சட்டத்தின் முன் நிறுத்தக் கோரியும் ஐரோப்பிய வாழ் இலங்கை முஸ்லிம்கள் ஏற்பாடு செய்திருந்த மாபெரும் போராட்டம் ஜெனிவா நகரில் நேற்று நடைபெற்றது.

ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு முன் நடைபெற்ற இந்தப் போராட்டத்துக்கான அழைப்பை, சுவிற்ஸர்லாந்தில் இருந்து இயங்கும், ஐரோப்பிய இஸ்லாமிய தகவல் நிலையம் விடுத்திருந்தது.

பிற்பகல் 1.30 மணியளவில் ஆரம்பமான இந்தப் போராட்டத்தில் 'முஸ்லிம்கள் மீதான இனவாதத்தை உடன் நிறுத்து', 'பள்ளிவாசல்களை உடைக்காதே', 'முஸ்லிம்களின் பொருளாதாரத்தை சூறையாடாதே', 'சட்டத்தை சரிசமமாக நடைமுறைப்படுத்து', 'குற்றவாளிகளைக் கைதுசெய்' உள்ளிட்ட பல்வேறு சுலோகங்களையும், பதாகைகளையும் தாங்கியபடி மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

மேலும், ஜெனிவாவில் அமைந்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு முன் கூடிய இந்த மக்கள், முஸ்லிம் இனவாதத்துக்கு எதிராகவும் உரத்த குரலில் கோசமிட்டனர்.

சுவிஸ், பிரிட்டன், ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகளிலிருந்து வருகைதந்த இலங்கைவாழ் முஸ்லிம்கள் பெருமளவில் பங்கேற்ற இந்தப் போராட்டத்தில் புலம்பெயர் தமிழர்களும் கலந்துகொண்டனர். போராட்டத்தின் இறுதியில், 3 முக்கிய மனுக்களும் கையளிக்கப்பட்டன. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன் ஐ.நா. மனித உரிமைகள் சிறுபான்மை விவகார சிறப்பு அறிக்கையாளர் கலாநிதி பெர்னான்ட் டீ. வரன்னஸ், இஸ்லாமிய கூட்டுறவு அமைப்பின் ஜெனிவா பிரதிநிதி திருமதி ஜெஸீமா பக்லி ஆகியோரிடம் இந்த மனுக்கள் கையளிக்கப்பட்டன.

இந்த மனுவில் இலங்கையில் முஸ்லிம் சமூகத்துக்கு எதிரான இனவாத அடக்குமுறைகளை நிறுத்த, பன்னாட்டுச் சமூகம் உரிய அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

# பிசுபிசுத்தது கொழும்பின் தந்திரம்

## பைசரின் கோரிக்கையை நிராகரித்துவிட்டு முஸ்லிம்களுக்காக ஜெனிவாவில் போராட்டம்

கொழும்பு, மார்ச் 20

ஜெனிவா ஆர்ப்பாட்டத்தை தடுத்து நிறுத்துவதற்கு இலங்கை அரசு இறுதி நேரத்தில் முன்னெடுத்த முயற்சிகள் யாவும் தோல்விகண்டன. இதையடுத்து திட்டமிட்ட அடிப்படையில் நேற்று ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இலங்கையில் முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களைக் கண்டித்தும், நீதி கோரியும், இலங்கை அரசுக்கு எதிராக புலம்பெயர்ந்து வாழும் முஸ்லிம்களால் ஜெனிவாவில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடர் நடைபெற்றுவரும் நிலையில், இத்தகையதொரு கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டால் அது தமக்கு மேலும் சிக்கலை ஏற்படுத்திவிடும் எனக் கொழும்பு கருதியது. முஸ்லிம் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்துவதற்காகவும், முஸ்லிம் நாடுகளின் இராஜதந்திரிகளுக்கு விளக்கமளிப்பதற்காகவும் அமைச்சர் பைசர் முஸ்தபாவை ஜெனிவாவில் களமிறக்கியது இலங்கை அரசு. ஜெனிவா சென்றுள்ள இலங்கையின் உயர்மட்டக் குழுவுக்கு இறுதி நேரத்திலேயே அமைச்சர் பைசர் முஸ்தபா உள்வாங்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜெனிவா சென்ற அமைச்சர், அம்பாறை மற்றும் கண்டியில் வெடித்த வன்முறைகளை அடிப்படையாகக்கொண்டு அவற்றுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்த பிரமுகர்களுடன் பேச்சு நடத்தினார்.

'இலங்கையில் எல்லாம் சுமுகமாக முடிந்துவிட்டது. போராட்டம் நடத்தினால் அது பெரும் குழப்பங்களுக்கு வழிவகுத்துவிடும்' எனவும் அமைச்சர் கோரினார்.

எனினும், ஏற்பாட்டாளர்கள் இதற்கு உடன்பட மறுத்துவிட்டனர். திட்டமிட்ட அடிப்படையில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் எனக் கூறி அதை நடத்தியும் காட்டியுள்ளனர். (5)

# பாகிஸ்தான் செல்கிறார் மைத்திரி

கொழும்பு, மார்ச் 20

இரு நாள் உத்தியோகபூர்வப் பயணத்தை மேற்கொண்டு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் வியாழக்கிழமை பாகிஸ்தானுக்குச் செல்லவுள்ளார்.

பாகிஸ்தானின் 78ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு இடம்பெறும் நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காகவே அரச தலைவர் மைத்திரிபால அங்கு செல்கின்றார்.

இருநாள் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு பாகிஸ்தான் செல்லும் மைத்திரி குடியரசு தின நிகழ்வுகளில் பங்கேற்றதன் பின்னர் அந்த நாட்டுத் தலைவர்களுடன் இருதரப்பு பேச்சுக்களிலும் ஈடுபட உள்ளார்.

இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்புகள் குறித்து கலந்துரையாட உள்ளார். புதிய



முதலீடுகள் மற்றும் இருதரப்பு உறவுகள் தொடர்பாக பாகிஸ்தான் தலைவர்களுடன் இதன்போது பரந்தளவில் கலந்துரையாட உள்ளார்.

இந்தியா, ஜப்பானுக்கு கடந்தவாரம் அரச தலைவர் மைத்திரி பயணம் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

# ஐ.நா. அமைதிப் படைக்குச் செல்லும் இலங்கைப் படையினருக்கு புது சிக்கல்

கொழும்பு, மார்ச் 20

ஐ.நா. அமைதிப் படையில் இலங்கைப் படையினர் பங்கேற்பதாயின், இறுதிப் போரின்போது அவர்கள் பணியாற்றிய முகாம், பகுதி தொடர்பிலான ஆவணங்களைச் சமர்ப்பிக்கவேண்டும் என்று ஐ.நா. அமைப்பு நிபந்தனை விதித்துள்ளது.

இறுதிப் போரின் பின்னர் இலங்கைப் படையினர் அமைதி காக்கும் பணிகளில் ஈடுபடுவதற்காக விண்ணப்பிக்கும் போது, போரில் நேரடியாகப் பங்கேற்றவர்களின் பெயர்களை ஐக்கிய நாடுகள் அமைப்பு நீக்கி வருகின்றது.

சில படைப் பிரிவுகளில் கடமையாற்றிய படையினர் அமைதி காக்கும் பணிகளுக்காக உள்வாங்கப்படுவதில்லை. இலங்கைப் படையினர் தொடர்பிலான இந்த நிபந்தனையானது உத்தியோகப்பற்றற்ற ரீதியான தடையாகவே கருதப்பட வேண்டுமெனப் பாதுகாப்பு தரப்பினர் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இராணுவப் பயண உத்தரவு ஆவணமானது படையினருக்கான நியமனக் கடிதத்துக்கு நிகரானது எனவும், இந்த ஆவணத்தை ஐக்கிய நாடுகள் சபை கோருவது தவறானது என்றும் பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கைப் படையினர் போரின் இறுதிக் கட்டத்தில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டு தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வரும் நிலையிலேயே, ஐ.நா. சபை இலங்கைப் படையினருக்கு மேற்படி நிபந்தனையை விதித்துள்ளது. (5)



## மகிந்த ஆட்சிக் காலத்து கடத்தல்கள் வெளிவரும்

*அமைச்சர் ராஜித தெரிவிப்பு*

கொழும்பு, மார்ச் 20

மகிந்த ஆட்சிக் காலத்தின் கடத்தல்கள் தொடர்பான ஆவணத்தை நாட்டுக்கு வெளிப்படுத்தவுள்ளதாக சுகாதார அமைச்சரும், அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கேகாலை பொது வைத்திய சாலையில் 37 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள அவசர சிகிச்சை பிரிவுக்கான அடிக்கல் நடும் விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம் பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில், ஊழல் மோசடிகள் மற்றும் மனித படுகொலைகள் பல நடந்தேறியிருந்தன. கடத்தல் சம்பவங்கள் இவை எல்லாவற்றுக்கும் மேலாகும்.

இந்தக் கடத்தல் சம்பவங்கள் தொடர்பான விபரங்கள் கணினிமயப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றை விரைவில் வெளியிட எதிர்பார்த்துள்ளேன்' என்று அவர் குறிப்பிட்டார். (5)

## சடலம் இடம் மாறியது குழம்பிய உறவினர்கள்

கொழும்பு, மார்ச் 20

யக்கலமுல்ல பிரதேசத்தில் உயிரிழந்த நபரின் சடலத்துக்குப் பதிலாக அஹங்கம பிரதேசத்தில் உயிரிழந்த நபரின் சடலத்தை, யக்கலமுல்ல பிரதேசத்தில் உயிரிழந்த நபரின் வீட்டுக்கு கொண்டு சென்றதால், இறந்தவரின் உறவினர்கள் கடும் அசௌகரியங்களை எதிர்நோக்கியதாக தெரியவருகிறது.

அஹங்கம மெலிகொட பிரதேசத்தில் 65 வயதான நபர் உயிரிழந்துள்ளார். சடலத்தை தயார் செய்ய உறவினர்கள் வெலிகமை பிரதேசத்தில் உள்ள மலர்சாலையில் கையளித்துள்ளனர். இந்த நிலையில், மலர்சாலைக்கு மேலும் இரண்டு சடலங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

சடலம் ஒன்றைப் பெட்டியில் வைத்து தயார் செய்து, அதனை யக்கலமுல்லவில் உள்ள வீட்டுக்கு எடுத்துச் சென்று கொடுக்குமாறு அமரர் ஊர்தியின் சாரதியிடம் மலர்சாலையினர் கூறியுள்ளனர். சாரதி பிணப் பெட்டியை யக்கலமுல்ல பிரதேசத்தில் உள்ள வீட்டுக்கு எடுத்துச் சென்று கொடுத்துள்ளார். உறவினர்களின் அழுகைக்கு மத்தியில் பிணப்பெட்டியை வரவேற்பு அறையில் வைத்து திறந்துள்ளனர்.

சடலத்தை பார்த்த உறவினர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். சடலம் தமது உறவினரது சடலம் அல்ல என்று சாரதியிடம் கூறியுள்ளனர். இதன் பின்னர் சடலம் அடங்கிய பெட்டி மீண்டும் மலர்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, யக்கலமுல்லையில் இறந்தவரின் சடலம் அவரது வீட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. அஹங்கமயில் இறந்தவரின் சடலத்தை யக்கமுல்லைக்குக் எடுத்துச் சென்று, அங்கிருந்து விடிய விடிய பயணித்து, நேற்று அதிகாலையில் அஹங்கம, மெலிகொட வீட்டுக்கு எடுத்துச் சென்று கையளிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)

## மீண்டும் மாற்றப்பட்டது வாஸுக்கு எதிரான வழக்கு

முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்தன உள்பட எண்மருக்கு எதிரான வழக்கு, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சம்பத் அபேகோன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்காக மீண்டும் மாற்றப்பட்டது.

மாணவனான நிபுண ராமநாயக்க, 2009ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 4ஆம் திகதியன்று தாக்கப்பட்டார். தாக்குதல் சம்பவம் தொடர்பில், முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்தன, உட்பட எட்டுப்பேருக்கு எதிராக சட்டமா அதிபரால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு மேலதிக சாட்சிய விசாரணைக்காக, கடந்த மாதம் முதலாம் திகதி எடுத்துக்கொள்ளப்பட்டபோது, வழக்கிலிருந்து தான் விலகிக்கொள்ளவுள்ளதாகவும், அது தொடர்பில் தலைமை நீதியரசருக்கு அறிவிக்கவுள்ளதாகவும் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆர்.குருசிங்க அறிவித்திருந்தார்.

பிரதிவாதிகளில் ஒருவரின் நண்பர் தனக்கும் நண்பர் என்று அண்மையிலேயே தான் அறிந்து கொண்டதாக அறிவித்த நீதிபதி, இந்த வழக்கிலிருந்து தான் விலகுவதாகவும், தலைமை நீதியரசருக்கு இதுதொடர்பில் அறிவிக்கவுள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

இவ்விடயத்தை வழக்குப் புத்தகத்திலும் குறிப்பிட்டிருந்த அவர், இவ்விடயம் தொடர்பில் தலைமை நீதியரசருக்கு அறிவிக்கத் தேவையில்லை என்று மீண்டும் குறிப்பிட்டு நீதிபதி ஏ.ஏ.ஆர்.ஹெய்யந்துடுவை முன்னிலையில் விசாரிக்குமாறும் பரிந்துரைத்துள்ளார்.

கடந்த 5ஆம் திகதி வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, மேற்குறிப்பிட்டுள்ள இரண்டு காரணங்கள் வழக்குப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், அது தொடர்பில் ஆராய்ந்து சரியான காரணத்தை அறிவிக்குமாறும் உத்தரவிட்ட நீதிபதி ஹெய்யந்துடுவ வழக்கை மீண்டும் நீதிபதி ஆர். குருசிங்க முன்னிலையில் எடுத்துக்கொள்ளுமாறும் உத்தரவிட்டார்.

வழக்கு நேற்றையதினம் நீதிபதி ஆர்.குருசிங்க முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது, தலைமை நீதிபதியான ஏ.ஏ.ஆர்.ஹெய்யந்துடுவைக்கு வழக்கை மாற்றுவதாக அறிவித்தார்.

நீதிபதி ஏ.ஏ.ஆர்.ஹெய்யந்துடுவ முன்னிலையில் வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, நீதிபதி சம்பத் விஜேரத்னவுக்கு வழக்கு மாற்றப்பட்டது.

வழக்கை எடுத்துக்கொண்ட நீதிபதி சம்பத் விஜேரத்ன, பெப்ரவரி மாத இறுதியில் தனது மன்றுக்கு ஏற்கனவே இரண்டு வழக்குகள் மாற்றப்பட்டுள்ளனவெனக் குறிப்பிட்டு, மீண்டும் தலைமை நீதிபதி ஏ.ஏ.ஆர்.ஹெய்யந்துடுவுக்கே வழக்கை மாற்றினார். நீதிபதி சம்பத் அபேகோன் முன்னிலையில் விசாரிப்பதற்காக வழக்கை மாற்றுவதாக நீதிபதி ஹெய்யந்துடுவ அறிவித்ததையடுத்தே, நீதிபதி அபேகோன் முன்னிலையில் வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு அமர்வுத் தினமாக ஜூன் 29ஆம் திகதி அறிவிக்கப்பட்டது. (5)

### அரச தலைவர் முறைமையை

# முழுமையாக ஒழிக்கும் தனிநபர் பிரேரணை கொண்டுவருகிறது ஜே.வி.பி

அரசமைப்பின் 20ஆம் திருத்தமாக நிறைவேற்று அரச தலைவர் முறைமையை நீக்கும் தனி நபர் பிரேரணையை நாடாளுமன்றத்தில் கொண்டு வரவுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திசாநாயக தெரிவித்தார். மக்கள் விடுதலை முன்னணியின் செய்தியாளர் சந்திப்பு நேற்றுக் கட்சித் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

2000ஆம் ஆண்டு பலவீனமான ஆட்சியில் 17ஆம் திருத்தும் கொண்டுவரப்பட்டது. பின்னர் மகிந்த ராஜபக்ச ஆட்சியில் நீக்கப்பட்டது. இந்த ஆட்சியில் பலமான ஒரு கட்சி அதிகாரம் இல்லாத போதிலும் 19 ஆம் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. இப்போது பலவீன அரசு இருந்தாலும் கூட மக்கள் நலன்சார் அரசமைப்பு மாற்றங்களைக் கொண்டுவர முடியும். குறிப்பாக நிறைவேற்று அரச தலைவர் முறைமையில் மாற்றங்களைக் கொண்டுவந்து நாட்டைப் பலப்படுத்த வேண்டும். இதுவரை காலமும் ஆட்சிக்கு வந்த அரச தலைவர் வேட்பாளர்கள் அனைவரும் நிறைவேற்று அரச தலைவர் முறைமையினை நீக்குவதாக வாக்குறுதி கொடுத்தே ஆட்சிக்கு வந்தனர்.

இம்முறையும் அதில் மாற்றம் இல்லாது மைத்திரிபால சிறிசேனவும் அதே வாக்குறுதியை தெரிவித்தே ஆட்சிக்கு வந்தார். இந்த நாட்டில் இனி ஒருபோதும் அரச தலைவர் தேர்தல் இடம்பெறாது என்று கூறினார். அரச தலைவர் வேட்பாளராக மட்டும் அல்லாது ஆட்சிக்கு வந்த பின்னரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்த வாக்குறுதிகளை வழங்கியுள்ளார்.

ஆனால் இன்று நாட்டின் தலைவராக அவர்கள் கொடுத்த வாக்குறுதிகளை கவனத்தில் கொள்ளாது செயற்பட்டு வருகின்றனர். ரணில் விக்கிரமசிங்கவிற்கு இனியும் அரச தலைவர் ஆசனத்தில் அமர முடியாது என்பது உறுதியாகிவிட்டது. இனி எந்த அதிகார நாற்காலியும் அவருக்குக் கிடைக்காது என்ற நிலைப்பாடும் உள்ளது.


கடந்த அரசதலைவர் தேர்தலில் நிறைவேற்று அரச தலைவர் முறைமையை நீக்கும் வரம் கிடைத்துள்ளது. அதனை மீற முடியாது. மூன்று ஆண்டுகளுக்கு மேலாக நிறைவேற்று அரச தலைவராக மைத்திரிபால சிறிசேன செயற்பட்டு விட்டார். நீண்ட காலமாக அரசமைப்புத் திருத்தம் குறித்து பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஏனைய கட்சிகளும் நிறைவேற்று அரச தலைவர் முறை மையை நீக்க தயாராக உள்ளன.

மக்கள் விடுதலை முன்னணியாக நாம் 20 ஆம் திருத்த சட்ட திருத்தமாக அரசமைப்புத் திருத்தத்தை தனிநபர் பிரேரணையாக நாடாளுமன்றத்தில் முன்வைக்கவுள்ளோம். இப்போது நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் முன்வைக்க தயாராகி வருகின்றனர். நம்பிக்கையில்லாப் பிரேரணையை உறுதியாகக் கொண்டுவருவதாக தீர்மானம் எடுத்தால் அதற்கு பின்னர் நாம் எமது யோசனையை முன்வைக்கத் தயார். நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவருகின்றோம் என்று கூறிக் காலத்தை கடத்தும் திட்டம் இருப்பின் அதனை நாம் கவனத்தில் கொள்ள மாட்டோம். எமது நடவடிக்கைகளை முன்னெடுப்போம். நம்பிக்கையில்லா பிரேரணையை உறுதியாக கொண்டுவந்தால் அதற்கு இடமளித்து அதன் பின்னர் எமது திருத்தத்தை கொண்டுவருவோம். ஆரோக்கியமான மாற்றங்களை கொண்டு வந்து நாடாளுமன்றத்தின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதேபோல் கடினமாகவேனும் மக்கள் கருத்துக்கணிப்பிற்கு விட்டேனும் இதனை நிறைவேற்றி கொள்ள வேண்டும். தனி நபர் கரங்களில் உள்ள நிறைவேற்று அதிகாரங்களை அமைப்புகளுக்கு கொடுக்க வேண்டும். அதுவே இப்போது எமது நோக்கமாக உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். (5.31)

# இலங்கையில் மூக்கை நுழைக்கும் சீனாவால் கவலைப்படுகிறார் ராகுல்

*கொழும்பு, மார்ச் 20*
இலங்கை உள்ளிட்ட இந்தியாவின் அண்டை நாடுகளில் சீனாவின் தலையீடுகள் அதிகரித்துள்ளமை குறித்து, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவரான ராகுல் காந்தி கரிசனை எழுப்பியுள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் மாநாட்டில் நேற்று முன்தினம் உரையாற்றிய அவர்,
'இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி தனிப்பட்ட முறையிலான அயலுறவுத்துறைக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறார்.
இது இந்தியாவின் பன்னாட்டு நம்பகத்தன்மையைக் குறைத்துள்ளது.
சீனா எல்லை இடங்களிலும் தலையீடு செய்கிறது. நேபாளத்தில் டோக்லம், இலங்கை, மாலைதீவு, மியான்மார் என்று எல்லா இடங்களிலும் சீனாவின் தலையீடுகள் உள்ளன.
ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் சீனாவின் தலையீடுகள் விரிவடைந்து வருகின்றன.
இந்த நிலையில், உலக ஒழுங்கில் அமெரிக்கா மற்றும் சீனாவுக்கு மாற்றான மூன்றாவது சக்தி ஒன்றைக் கட்டியெழுப்ப வேண்டும்' என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (5)



## திகனவில் தொடரும் துப்புரவுப் பணி

கொழும்பு, மார்ச் 20
இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட திகனப் பிரதேசத்தில் இயல்பு நிலையை ஏற்படுத்தும் வகையில் இராணுவத்தினரின் தலைமையில் சிரமதானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுத் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றது.
கண்டி மாவட்டம் திகனப் பிரதேசத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக நடைபெற்ற இனக்கலவரத்தின் போது சேதமாக்கப்பட்ட அனைத்துக் கட்டடங்களையும் மறுசீரமைக்கும் பொறுப்பை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.
இதன் முதற்கட்டமாகத் தற்போது அந்தப் பிரதேசத்தில் சேதமடைந்த கட்டடங்களின் இடிபாடுகள் மற்றும் தீயில் எரிந்த சிதைவுகள் என்பவற்றை அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
பிரதேசத்தின் முக்கிய பௌத்த விகாரைகளின் பிக்குமார் சிலரும் இந்தச் சிரமதானங்களில் கலந்து கொண்டு சிங்களமுஸ்லிம் நல்லுறவைப் பழைய நிலைக்குக் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளை முன்னெடுத்துள்ளனர். (5)

## இந்திய அமைதிப் படையினர் வடக்கில் சுற்றுலா செய்தனர்

*பழைய நினைவுகளை தொலைக்கும் நோக்கில்*



கொழும்பு, மார்ச் 20
முப்பது ஆண்டுகளுக்கு முன்னர், இலங்கையில் இந்திய அமைதிப் படையில் பணியாற்றிய, ஓய்வு பெற்ற இந்திய இராணுவ மற்றும் வான்படை அதிகாரிகள் ஒன்பது பேர், மீண்டும் கடந்த மாதம் இலங்கைக்கு வந்து சென்றுள்ளனர்.
இவர்கள் ஒன்பது பேரும், காடக்வாஸ்லாவில் உள்ள இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு அக்கடமியில் 37 ஆவது கற்கைநெறியில் இணைந்திருந்தவர்களாவர்.
பின்னர் 1987-1989 ஆம் ஆண்டு காலகட்டத்தில் இவர்கள் இந்திய அமைதிப்படையில் இலங்கையில் பணியாற்றியிருந்தனர்.
தற்போது ஓய்வுபெற்றுள்ள இந்த அதிகாரிகள் ஒன்பது பேரும், இலங்கைக்குக் கடந்த பெப்ரவரி மாதம் பயணம் செய்தனர்.
இவர்களின் குழு வடபகுதியில் 9 நாள்கள் தங்கியிருந்து வெவ்வேறு பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டது.
அந்தக் காலகட்ட நினைவுகளில் இருந்து விடுபடுவதே இந்தப் பயணத்தின் நோக்கம் என்று, மேஜர் ஜெனரல் ஜோஸ் மணவாளன் தெரிவித்தார்.
'அங்கு போரின் எந்தத் தடயமும் இல்லை. நாடு மாறி விட்டது.' என்று கூறினார் மேஜர் ஜெனரல் ஜோஸ் மணவாளன்.
இவர் யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய பகுதிகளில் இந்திய அமைதிப்படையில் மேஜர் நிலை அதிகாரியாகப் பணியாற்றியிருந்தார்.
இவர் அடர்ந்த காட்டுக்கு நடுவே உள்ள புளியங்குளம் தொடருந்து நிலையத்துக்கு அருகே, இந்திய அதிகாரியான மேஜர் மைக்கல் லூயிசின் கல்லறை அமைந்திருப்பதை நினைவுபடுத்தினார்.
இந்தக் குழுவினர், முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளையும் சந்தித்துள்ளனர்.
வானூர்தியில் இலங்கைக்கு அடிக்கடி வந்து சென்ற தனது நினைவுகளை மீட்ட ஹைதராபாத்தைச்சேர்ந்தவிங்கொமாண்டர் உன்னி கார்தா, விடுதலைப் புலிகளின் போரிடும்திறனை மெச்சினார்.
"அவர்கள் வலுவாக இருந்தனர். அவர்களின் இராணுவம் ஒழுக்கமானதாக இருந்தது என்று கூறுவதற்கு நான் தயங்கமாட்டேன்.
ஆரம்பத்தில் இந்திய அமைதிப்படையை வரவேற்றார்கள். அரசியல் சூழ்நிலைகள் மாறியதால் அவர்களின் பார்வை மாற்றமடைந்தது" என்று அவர் கூறினார்.
ஒரு சோதனை வானூர்தி ஓட்டுனரான விங்கொமாண்டர் கார்தா, திருவனந்தபுரம் மற்றும் சூலூர் விமானப்படைத் தளங்களில் இருந்து, யாழ்ப்பாணத்தின் பலாலி விமான தளத்துக்கு போக்குவரத்து வானூர்திகளில் பயணித்துள்ளார்.
வடபகுதியில் உள்ள மக்களுக்கு உணவுப் பொதிகளை வீசிய ஒப்பரேசன் பூமாலை நடவடிக்கைக்குத் திட்டமிட்டது பற்றியும் அவர் நினைவுபடுத்தியுள்ளார். (5)

# இலங்கைக்கு ஆதரவாகவும் ஜெனிவாவில் போராட்டங்கள்

கொழும்பு, மார்ச் 20
இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருவதாக தெரிவித்துள்ள உலகளாவிய இலங்கை மன்றம், அதனைக் கண்டித்து ஜெனிவாவில் கண்டன ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியுள்ளது.
ஜெனிவாவிலுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தலைமையகத்துக்கு முன்னால் பெரும் எண்ணிக்கையிலான வெளிநாடு வாழ் இலங்கையர்களின் பங்களிப்புடன் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை இந்தப் போராட்டம் இடம்பெற்றுள்ளது.
உலகளாவிய இலங்கை மன்றத்தை பிரதிநித்துவப்படுத்தும் வகையில் இத்தாலி, பிரிட்டன், டென்மார்க், ஜேர்மன், சுவீடன், சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து நூற்றுக் கணக்கானோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர்.
இதேவேளை, மன்றத்தின் அழைப்பில் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர, கலாநிதி நாலக கொடஹேவா, அநுராதா யஹம்பத் ஆகியோர் இலங்கையிலிருந்து சென்று ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றுள்ளனர்.
தவறான அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு அமெரிக்காவினால் முன்மொழியப்பட்டு 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்கியதன் மூலம் தற்போதைய இலங்கை அரசு தவறிழைத்துள்ளதாகக் கலாநிதி நாலக கொடஹேவா தெரிவித்துள்ளார். (5)

## மக்களுடன் பொறுமையாக பணியாற்றுங்கள்

*மைத்திரி அறிவுரை*

உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதிநிதிகள் பொதுமக்களுடன் பிரச்சினைகளை ஏற்படுத்திக் கொள்ளாது, கொள்கைகளுக்கு உட்பட்டு பொறுமையாகவும், அவதானத்தோடும் செயற்படவேண்டும். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டிய சிறிலங்கா சுதந்திரக் கட்சியினதும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினதும் பிரதிநிதிகளுடன் அரச தலைவர் மாளிகையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
பண்புமிக்கதும் உயர் பெறுமதியுள்ளதுமான அரசியல் கலாசாரத்தை கட்டியெழுப்புவதற்காக மக்கள் பிரதிநிதிகள் தமது நடத்தைகளாலும் செயற்பாடுகளாலும் பொது மக்களுக்கு முன்னுதாரண மாகத் திகழ வேண்டும்- என்றார். (5)

## அணிமாறி உழைப்போருக்கு எதிராக நடவடிக்கை அவசியம்

*மைத்திரியிடம் சு.க. உறுப்பினர்கள் வலியுறுத்து*



கொழும்பு, மார்ச் 20
சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இருந்து கொண்டு வேறு ஓர் அரசியல் கட்சியின் வெற்றிக்கு உழைக்கும் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.
உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை மறுசீரமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
இது தொடர்பில் அந்தக் கட்சியின் முக்கியபிரமுகர் ஒருவர் தெரிவித்ததாவது:
எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் உள்ளிட்ட தொகுதி அமைப்பாளர்களை மாற்றம் செய்து கட்சியை வெற்றிப் பாதைக்குக் கொண்டு செல்வதற்கான மானசீக பலத்தை ஏற்படுத்த வேண்டும்.
இது தொடர்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரபலங்கள் பலர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர். கட்சிக்குள் தீர்மானங்களை எடுப்பதற்கான அதிக அதிகாரத்தை இளம் தலைவர்களுக்கு வழங்க வேண்டும் என்றும் மைத்திரிக்கு அவர்கள் கூறியுள்ளனர்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இருந்து கொண்டு வேறு ஓர் அரசியல் கட்சியின் வெற்றிக்கு உழைக்கும் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுவே சுதந்திரக் கட்சியிலுள்ள பெரும்பாலானோரின் கருத்தாகும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (5)

# மகிந்த அணிக்கு 'செக்' வைக்கிறது ஜே.வி.பி.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக, கூட்டு எதிரணியினரால் கொண்டு வரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணையில், மக்கள் விடுதலை முன்னணி கையெழுத்திடாது என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற பெரிய முறைகேடுகளுக்குப் பின்னால் இருந்தவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கத் தவறினார் என்ற குற்றச்சாட்டைத் தலைமை அமைச்சர் மீது முன்வைத்தால் மாத்திரமே, இந்தப் பிரேரணைக்கு மக்கள் விடுதலை முன்னணி ஆதரவு அளிக்கும் என்று கூறப்படுகிறது.
எனினும், மகிந்த ராஜபக்ச விசுவாசிகளைக் கொண்ட கூட்டு எதிரணி இந்தக் குற்றச்சாட்டை முன்வைப்பது சாத்தியமில்லை என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.
இது குறித்துத் தகவல் வெளியிட்ட மக்கள்விடுதலைமுன்னணியின் மூத்த உறுப்பினர் ஒருவர், நம்பிக்கையில்லாப் பிரேரணையின் உள்ளடக்கத்தைப் பொறுத்தே, என்ன செய்வது என்று முடிவெடுக்கப்படும் என்று கூறியுள்ளார்.
மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற பெரிய முறைகேடுகளை விசாரித்து குற்றவாளிகளைத் தண்டிக்கத் தாமதித்துள்ளதால் தலைமை அமைச்சர் மீது மக்கள் நம்பிக்கையிழந்துள்ளனர் என்றும் அவர் மக்களின் ஆணையை மீறியுள்ளார் என்றும் மக்கள் விடுதலை முன்னணி பிரமுகர் தெரிவித்துள்ளார். (5)

**வீடு விற்பனைக்கு**

நந்தாவில் லேனில் அமைந்துள்ள் 4½ பரப்புக் காணியில் உ்ள்ள மாடிவீடு விற்பனைக்குண்டு. (7 அறைகளுடன் பெரிய வீடு)

**077 187 7754** (CS/14770)(11)

**வேலையாள்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனத்திற்கு வேலையாள்கள் தேவை

- ★ மேசன் (அனுபவமுள்ள) 1500/=
- ★ வெல்டர் (அனுபவமுள்ள) 1500/=
- ★ தச்சுத்தொழிலாளி (அனுபவமுள்ள) 1500/=

தொடர்பு - 075 918 3940
8.30 Am - 5.00 Pm தொடர்பு கொள்ளவும்

**ES Printers**

பனர் பிரிண்ட் (Banner), 35/=

# 357, Kasthuriyar Road, Jaffna.

## மரண அறிவித்தல்கள்

# சுந்தரர் கதிர்காமத்தம்பி

*(ஓய்வுநிலை தபாலதிபர்)*



தோற்றம் 27.11.1940 மறைவு 18.03.2018

குரும்பைகட்டி, புலோலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரர் கதிர்காமத்தம்பி கடந்த (18.03.2018) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரர் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகனும் விமலாதேவியின் அன்புக் கணவரும் ரவிசுந்தர் (லண்டன்), வினோசுந்தர் (பொறியியலாளர் தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபை, திருகோணமலை), குணசுந்தர் (ஆசிரியர் - பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), கனிமொழி (ஆஸ்திரேலியா), வரதசுந்தர் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிர்மலாதேவி (லண்டன்), செல்வவினிதா (கால்நடை வைத்தியர்), காயத்திரி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - சிறைச்சாலை, மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு), சர்வேந்திரா (பொறியியலாளர் - ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனும் ஹரிசன், அக்சரன், அபீசன், அனந்தனேஸ், அதீசனன், சாரகன், கவிநயா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான இராமசாமி, லட்சுமிப்பிள்ளை மற்றும் சிவபாக்கியம் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற கிருஸ்ணானந்தன் மற்றும் சிவச்சந்திரன், வெற்றிவேல், செந்தில்நேசன், தில்லைநாதன், தவலிங்கம், இந்திரலிங்கம், நவலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.03.2018) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் த்கனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**குரும்பைகட்டி, புலோலி தெற்கு, புலோலி.** (CS 588/15/17) **021 373 4263**

## திருமதி தெய்வானைப்பிள்ளை முருகேசபிள்ளை
## (தங்கச்சியம்மா)



யாழ். ஊர்காவற்றுறை புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், Kaduna State, Nigeria ஐ வதிவிடமாகவும், கனடாவை தற்போதைய வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி தெய்வானைப்பிள்ளை முருகேசபிள்ளை 18.03.2018 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை கனகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பேரம்பலம் மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும், முருகேசபிள்ளையின் (Chartered accountant Srilanka & Nigeria) அன்புமனைவியும், மலர்விழி, அருள்மொழி, திருமொழி, வேல்விழி, இறைமொழி (Electron Auto Montreal), நிறைமொழி (Montreal), கயல்விழி (பவி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மகாதேவா, சுலோச்சனா, சசிரேகா, இரத்தினேஸ்வரன், சிவதர்ஷினி, பவானி, புவனேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான சபாரட்ணம், பொன்னுத்துரை, கணபதிப்பிள்ளை, சிவசுப்பிரமணியம் (ஒளி, ஒலி அமைப்பாளர்), தம்பிஐயா(ஒளி, ஒலி அமைப்பாளர்) ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்றவர்களான இராசம்மா, இரத்தினம், பத்மாவதி, சுந்தரவல்லி, பொன்னுத்துரை, அன்னம்மா, பூலோகம், சிவபாக்கியம் மற்றும் அன்னலட்சுமி, பொன்னுச்சாமி (P.T Master) ஆகியோரின் அன்பு மைத்துனியும் சதீஸ்காந்- ஜனனி, லாவண்யா, கார்த்திகா - வாகீசன், ஆதவன், ஆரணி, ஆதவி, அனுராம், மயூரன், வாசுகி, தினேஷ், நரேன், கபிலன், பவித்திரன், காயத்திரி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், நேசிகா அவர்களின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 24.03.2018 சனிக்கிழமை பி.ப. 5 .00 - 9.00 இரவு வரையும் 25.03.2018 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 8 .00 - 9 .30 மணிவரை முகவரி :Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada இல்பார்வைக்காக வைக்கப்பட்டு இதே முகவரியில் 25.03.2018 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 - 11.30 மணியளவில் கிரியைகள் நடைபெற்று அதனைத்தொடர்ந்து 25.03.2018 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 - 1.00 மணியளவில் Highland Hills, 12492 Woodbine Ave, Gormley ON LOH 1GO, Canada வில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**மலர்விழி மகாதேவா (416) 286 8391, +94 076 309 3846 (இலங்கை),**
**அருள்மொழி (416) 508 5890, திருமொழி (416) 258 1918,**
**வேல்மொழி இரத்தினேஸ்வரன் (905) 471 2591,**
**இறைமொழி (514) 969 1906, நிறைமொழி (438) 989 7952,**
**கயல்விழி புவனேஸ்வரன் (416) 409 9947**

**புளியங்கூடல்.**

**குறிப்பு : அன்னாரின் புளியங்கூடல் இல்லத்தில் (25.03.2018) ஞாயிற்றுக்கிழமை துக்கம் அனுஷ்டிக்கப்படும்.**

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் வல்லிபுரம்
**சுவாமிநாதன்**
(ஓய்வுபெற்ற உப தபாலதிபர்)

தோற்றம் 25.01.1933 மறைவு 29.03.2009

எமக்கு நல்வழிகாட்டி சிறப்புற
வாழவைத்தவரே
ஆண்டுகள் ஒன்பது சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும்
நீங்காது

தண்ணீருற்று குடும்பத்தினர். (CS/14924)(11,17)

## கண்ணீர் அஞ்சலி



நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் ஆயுர்வேத வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர் திருமதி **நிசாந்தன் சிவலக்ஷ்மி** அவர்களின் அன்புத் தந்தையார்

**சண்முகசேகரம் சிவஞானசேகரம்**

அவர்களின் மறைவினால் துயரடையும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

**நல்லூர் பிரதேசசபை,**
**நலன்புரிச் சங்கம்** (CS/14921)(11,17)

**உதயன்**
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
0214931111

## மரண அறிவித்தல்கள்



# முருகேசு இந்திரன்

ஏழாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு இந்திரன் 16.03.2018 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் நாகரட்ணம் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் அம்பிகாராணியின் அன்புக்கணவரும் டெய்சிகா (கனடா), சஞ்சீவன் (பிரான்ஸ்), நிஷாந்திகா (லண்டன்), சலீபன் (ஏழாலை) ஆகியோரின் அன்புத்தந்தையும் ராணிமலர் (ஜேர்மனி) காலஞ்சென்றவர்களான இராசதுரை, பரமேஸ்வரி, கந்தசாமி, திருஞானசம்பந்தர், பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புச்சகோதரரும் சண்முகலிங்கம், அற்புதமலர், ஸ்ரீம்காராணி, தயாளகுமாரன், கண்ணகி ஆகியோரின் அன்புமைத்துனரும் சாந்தகுமார் (கனடா), பரணிதரன் (லண்டன்), மிருளாஜினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கிருத்திகா, திஷான், துவிகா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.03.2018) புதன்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை காடாகடம்பை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஏழாலை கிழக்கு, ஏழாலை**
**ஏழுகோயிலடி. 021 205 9433**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

# அண்ணாமலை தவராசா

*(இ.போ.ச. கோண்டாவில் சாலை)*



நீர்வேலி, அச்செழுவைச் சேர்ந்த அண்ணாமலை தவராசா (இ.போ.ச. கோண்டாவில் சாலை) கடந்த 17.03.2018 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அண்ணாமலை மற்றும் சின்னத்தங்கச்சி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை மற்றும் சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், ஜெயறூபியின் அன்புக் கணவரும், மதூசன் (மாகாண திறைசேரி, வட மாகாணம்), சரண்யா ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜேஸ்வரி, தங்கேஸ்வரி, மங்களேஸ்வரி, யோகேஸ்வரி (சுவிஸ்), செல்வராசா (இ.போ.ச) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பாலசுப்பிரமணியம் (இளைப்பாறிய இ.போ.ச. உத்தியோகத்தர்), நாகேந்திரம், கனகலிங்கம் (சுகாதார உத்தியோகத்தர்), குணசிங்கம் (சுவிஸ்), சுகந்தினி, யோகராணி, யோகராசா (சுவிஸ்), ஜெயரூபன் (ஜேர்மனி), நித்தியறூபன் (ஐக்கிய இராச்சியம்) ஆகியோரின் மைத்துனரும், சிவநாதன், சுமதி (சுவிஸ்), விஜிதா (ஜேர்மனி), உமா (ஐக்கிய இராச்சியம்) ஆகியோரது அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.03.2018) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புன்னாலைக்கட்டுவன் விலங்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**அச்செழு, நீர்வேலி.** (IN/6190)(11,17) **தகவல்: குடும்பத்தினர்.**

**077 947 7274, 021 224 1695**

# கடந்த வருட முதற்காலாண்டைவிட இந்த வருடம் மழை குறைந்துள்ளது

## கிடைப்பதை அனைவரும் இனியாவது சேமிக்குமாறு வலியுறுத்தல்

**யாழ்ப்பாணம், மார்ச் 20**

**கடந்த வருடம் முதற் காலாண்டில் பெய்த மழையின் அளவைவிட இந்த வருடம் முதற் காலாண்டில் பெய்த மழையின் அளவு வீழ்ச்சியடைந்துள்ளது. எனவே கிடைக்கும் மழை நீரைச் சேமிக்க அனைவருமே முன்வரவேண்டும். இவ்வாறு யாழ்ப்பாணத்திலுள்ள வளிமண்டலவியல் திணைக்களப் பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் 250 தொடக்கம் 300 மில்லிமீற்றர் மழை பெய்வது வழமை. ஆனால் கடந்த ஜனவரியில் 14.6 மில்லிமீற்றர், பெப்ரவரியில் 6.4 மில்லிமீற்றர், மார்ச் இதுவரை 48.6 மில்லிமீற்றர் மழை பெய்துள்ளது. இந்த வருடம் நேற்றுவரையான சுமார் 3 மாதங்களில் 84.1 மில்லிமீற்றர் மழையே பெய்துள்ளது.

கடந்த வருடம் ஜனவரியில் மட்டும் 86.7 மில்லிமீற்றர் மழை பெய்துள்ளது. பெப்ரவரியில் 25.6 மில்லிமீற்றர், மார்ச்சில் 119.6 மில்லிமீற்றர் மழை பெய்துள்ளது. இந்த வருட மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில் மழைவீழ்ச்சி மிகமிகக் குறைவாகவுள்ளது.

ஏப்ரலில் மழை வீழ்ச்சி பதிவாகவில்லை. மே 29.6 மில்லிமீற்றர், ஜூன் 10.8 மில்லிமீற்றர், ஜூலை 12.7 மில்லிமீற்றர், ஒகஸ்ட் 70 மில்லிமீற்றர், செப்டெம்பர் 91.3 மில்லிமீற்றர், ஒக்ரோபர் 184 மில்லிமீற்றர், நவம்பர் 611.7 மில்லிமீற்றர், டிசெம்பர் 100.6 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

2016 ஆம் ஆண்டிலும் முதற்காலாண்டில் மழைவீழ்ச்சி குறைவடைந்துள்ளது. ஜனவரியில் 15.9 மில்லிமீற்றர், பெப்ரவரியில் 6.4 மில்லிமீற்றர் மார்ச்சில் 1.8 மில்லிமீற்றர் பதிவாகியுள்ளது. 2015 ஆம் ஆண்டும் மழைவீழ்ச்சி குறைவடைந்துள்ளது. 2014 ஆம் ஆண்டு 100 மில்லிமீற்றரைத் தாண்டியுள்ளது.

2013 ஆம் ஆண்டு முதற்காலாண்டில் மிக அதிகளவில் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. அதன்படி ஜனவரியில் 151.8 மில்லிமீற்றர், பெப்ரவரியில் 151.5 மில்லிமீற்றர், மார்ச் 117 மில்லிமீற்றர் மழை பதிவாகியுள்ளது. இவற்றுடன் ஒப்பிடும்போது இந்த வருடம் முதற்காலாண்டில் மழை வீழ்ச்சி குறைவாகவே கிடைத்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

வடகீழ்ப் பருவப் பெயர்ச்சிக் காற்றினால் பெரியளவில் மழை வீழ்ச்சி கிடைக்கவில்லை. கடந்த வருடங்களில் ஜனவரியில் சராசரியாக 100 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி கிடைத்து வந்தது. சில வருடங்களாக இது குறைவடைந்துள்ளது. எனவேமழை நீரைச் சேமிக்க வேண்டிய சேகரிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதிலிருந்து எவரும் பின்வாங்கக்கூடாது. இலவசமாகக் கிடைப்பதாலும் அதன் அருமையை உணர்ந்துகொள்வோர் குறைவு. ஆனால் இனி அனைவரும் இந்த விடயத்தில் கவனமாக இருக்க வேண்டும். மழை நீரைச் சேகரிக்க ஏற்ற நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

எனவேதான் மழை நீரைச் சேமிக்க அனைவரும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதில் அனைவரும் ஆர்வம் கொள்ளவேண்டும் என்று பலரும் வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4)

# ஊழியர்களின் கோரிக்கைகள் அமைச்சரவையில் பரிசீலனை

## 30 வீத கொடுப்பனவைக்கோரி இன்று பேரணி இடம்பெறுகிறது

யாழ்ப்பாணம், மார்ச் 20

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உட்பட நாடுமுழுவதும் உள்ள பல்கலைக்கழகங்களின் கல்வி சாரா ஊழியர்களது பிரச்சினைகள் தொடர்பிலான பேச்சு நேற்றும் வெற்றியளிக்கவில்லை. இன்று அமைச்சரவையில் பேச்சு இடம்பெறவுள்ளது. அதேநேரம் பேரணியும் கொழும்பு நாடாளுமன்றை நோக்கி இன்று நகரும் என்று சங்கம் அறிவித்தது.

பல்கலைக்கழக ஊழியர்கள் கடந்த 28ஆம் திகதி தொடக்கம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். தமக்கான கொடுப்பனவுகள் உள்ளிட்ட நலன்களை வழங்குமாறு அவர்கள் முன்வைத்த கோரிக்கை பரிசீலிக்கப்படாதிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் உயர் கல்வி அமைச்சர் சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். அவர் வெளிநாடு செல்வதால் நேற்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், செயலாளர், உபதலைவர் உள்ளிட்டோருடன் கலந்துரையாடல் இடம்பெற்றது.

அதன்போது முன்னர் அறிவிக்கப்பட்டதன்படி அரச உத்தியோகத்தர்களுக்கான சம்பள அதிகரிப்புக் கோரி 40 வீமான கொடுப்பனவு அதிகரிப்பில் முதற்கட்டமாக 30 வீதத்தை உடன் வழங்கவேண்டும் என்று நேற்றைய பேச்சில் முதன்மைக் கோரிக்கையாக கல்விசாரா ஊழியர் சங்கம் முன்வைத்தது. முன்னர் 15 வீத அதிகரிப்பை கோரியபோதும், வருடாந்த அதிகரிப்பை வழங்காது இழுத்தடித்து வருவதால் ஊழியர்கள் பாதிக்கப்படுகின்றனர். அதனால் சகல கொடுப்பனவுகளையும் தொகுத்து அதன் அடிப்படையில் கிடைக்க வேண்டிய 40 வீதத்திலேயே முதற்கட்ட மாக 30 வீதத்தை வழங்குமாறு கல்விசாரா ஊழியர் சங்கம் கோரியுள்ளது.

தமது கோரிக்கை இன்று கொழும்பு அமைச்சரவையில் கலந்துரையாடப்படவுள்ளது. அதில் சாதகமான தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தவறினால் அல்லது உரிய தீர்வு கிடைக்கும்வரை தமது பணிப்புறக்கணிப்புப் போராட்டம் தொடரும் என்று கல்விசாரா ஊழியர் சங்கத்தினர் தெரிவித்தனர்.

அமைச்சரவையில் இன்று கலந்துரையாடல் இடம் பெற்றாலும் தமது கோரிக்கையை முன்வைத்து கண்டன ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று கொழும்பு நாடாளுமன்றை நோக்கி இன்று இடம்பெறும் என்று சங்கத்தினர் மேலும் தெரிவித்தனர். (4)

# சிறப்பு தேவையுடைய மாணவருக்கு பாடசாலை

யாழ்ப்பாணம், மார்ச் 17

வடமராட்சி வலயத்திலுள்ள நான்கு பாடசாலைகளில் சிறப்புத் தேவையுடையோர் கல்வி கற்று வருகின்றனர். அவர்களுக்கென ஒரு பாடசாலை அமைத்து ஒழுங்கான முறையில் எல்லாச் செயற்பாடுகளையும் பயிற்றுவிக்கக்கூடியவாறு திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இறுதியாக நடந்த கல்வி ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் அகிலதாஸ் இந்த வேண்டுகோளை விடுத்திருக்கிறார். கல்வியமைச்சின் சுற்றறிக்கைப்படி, மாற்றுத்திறனாளிகளுக்கென பாடசாலை அமைத்து, அவர்களை ஒதுக்கி வைப்பது தவறு. அனைவரும் படிக்கின்ற பாடசாலைகளிலே அவர்களும் கல்விகற்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், "அவர்களுக்கென தனி இடம் ஒதுக்கி அவர்களை அனைத்து செயற்பாடுகளிலும் ஈடுபட வைப்பதன் மூலம் வெளிநாட்டவர்களோ அல்லது பெரியார்களது உதவியும் கிடைக்கலாம். அவர்களின் நிறைய தேவைகள் பூர்த்தியாக வாய்ப்புள்ளது. இதனடிப்படையிலே வேண்டுகோளை விடுத்தேன்" என்றார். (4,112)

# குழாய்க் கிணறு அமைப்போர் நீர்வளச் சபையில் அவசியம் பதிவும் செய்திருத்தல் வேண்டும்

யாழ்ப்பாணம், மார்ச் 20

குழாய்க் கிணறுகள் அமைக்கும் தொழிலில் ஈடுபடும் சகலரும் துளையிடும் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் நீர்வளச் சபையில் பதிவுசெய்து அதற்கான அனுமதியைப் பெறவேண்டும்.

நீர்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சர் காமினி விஜித முனி சொய்சா இவ்வாறு அறிவித்துள்ளார்.

நீர்வளங்கள் சபையின் 1964 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க சட்டத்தின் 12(1) பிரிவின் கீழ் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரச அல்லது உள்ளூராட்சி, அரச சார்பற்ற அமைப்பு அல்லது தனிநபர் ஒருவரினால் இயற்கை நீர்ஊற்று அல்லது நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதாக இருந்தால் முறைப்படி அனுமதி பெற வேண்டும்.

குழாய்க் கிணறு அமைப்பதற்கு நீர் வழங்கல் சபையின் அனுமதி பெற்றுக் கொள்ளப்படவேண்டும்.

அவர்களது ஆலோசனைகளுக்கேற்ப செயற்பட வேண்டும். சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் அதில் பெற்றுக் கொள்ளக்கூடிய நீர்மட்டத்தை சரியான முறையில் அளவீடு செய்து நீர் வளங்கள் சபையின் மேற்பார்வையின் கீழ் குறித்த அனுமதியை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும் என்று அமைச்சர் விடுத்துள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (50)

*மீள்குடியேற்ற அமைச்சினால்*

# சங்கானைப் பிரிவில் 54 வீடுகள் சீரமைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 20

சங்கானைப் பிரதேச செயலாளர் பிரிவில் 54 வீடுகள் மீள்குடியமர்வு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் சீரமைக்கப்பட்டு வருகின்றன. குறித்த நிதி ஒதுக்கீட்டின் கீழ் 20 வீடுகள் சீரமைக்கப்படுகின்றன. 21 கிணறுகளும் சீரமைப்புக்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. அதற்கென நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக வலி.மேற்கு பிரதேச செயலாளர் திருமதி பொ.பிறேமினி தெரிவித்தார்.

சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சு 62 மலசலகூடங்கள் ஒரு பாடசாலை 34 குடும்பங்களுக்கான மின்சார இணைப்பு, 130 குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவி வழங்கல் ஆகிய திட்டங்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செயற்பாடுகள் இடம்பெறுகின்றன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (50)

# மனோகரக் குருக்களின் நினைவு தினம்



மன்னார், மார்ச் 20

கலாநிதி மனோகரக் குருக்களின் 6 ஆம் ஆண்டு நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியில் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் கலாநிதி மனோகரக்குருக்கள் நற்பணி மன்றத்தின் தலைவர் பிரம்மசிறி மனோ.ஐங்கர சர்மா தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக வவுனியா அந்தனர் ஒன்றியத்தின் போசகர் வேதாகம வித்தியாபதி சிவசிறி முத்து ஜெயந்திநாத குருக்கள் கலந்து கொண்டார். மனோகரக் குருக்களின் நினைவு தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற தோடு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பதக்கம், சான்றிதல் மற்றும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டன. (56)

### வடக்கு - கிழக்கில் தொடருந்துக் கடவைகளிலுள்ள

# காப்பாளர்களுக்கு நியமனம் வழங்கத் தவறின் சகலரும் ஒரே நாளில் பணியிலிருந்து விலகுவர்

## தொடருந்துக் கடவைக் காப்பாளர் ஒன்றியம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 20

**தமக்கு நிரந்தர நியமனம் வழங்க எந்தவொரு அமைச்சும், இந்த அரசும் நடவடிக்கை எடுக்கவில்லை. அரச தலைவருக்கு இது பற்றிக்கூறியும் அவரும் நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளார். அதனால் ஒட்டுமொத்தமாக அனைவரும் ஒரே தடவையில் காப்பாளர் பணிகளிலிருந்து விலகத் திட்டமிட்டுள்ளோம். அதன்பின்னர் கடவைகளில் பொதுமக்களின் உயிர்களுக்கு ஏற்படும் இழப்புகளுக்கு நாம் பொறுப்பாக மாட்டோம். விலகுவது தொடர்பில் மாவட்டங்களின் சங்கங்களுடன் தற்போது கலந்துரையாடிவருகிறோம்.**

இவ்வாறு வடக்குக் கிழக்கில் சேவையாற்றும் தொடருந்துக் கடவைக் காப்பாளர்கள் ஒன்றியத்தின் தலைவர் றொஹான் றாஜ்குமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, வடக்கு கிழக்கில் உள்ள தொடருந்துக் கடவைகளில் 2ஆயிரத்து 638 பேர் கடமைபுரிகின்றனர். இவர்கள் 5 வருடங்களாகப் பணிபுரிகின்றபோதும் தமக்கு நிரந்தர நியமனம் இன்னும் வழங்கப்படவில்லை. நாளாந்தம் 250ரூபா வீதம் மாதாந்தம் 7 ஆயிரத்து 500 ரூபா சம்பளமாக வழங்கப்படுகிறது. இந்தத் தொகை எமக்கு எப்படிப் போதுமானது?

நாளாந்தம் வாழ்க்கைச் செலவு அதிகரித்து வரும் நிலையில் அரச ஊழியர்களுக்கு சம்பளம் போதாது என்று சம்பள அதிகரிப்பு வழங்கும் நிலையில், தமக்கு மட்டும் இந்தத் தொகை எப்படிப் போதுமானது?

நிரந்தர நியமனம் வழங்குமாறு நிமல் சிறிபால டீ சில்வா உள்ளிட்ட அமைச்சர்களுடன் பேசினோம். உரிய நடவடிக்கை இன்னும் எடுக்கப்படவில்லை. தொடருந்துத் திணைக்களமும் நடவடிக்கை எடுக்கவில்லை. எத்தனையோ போராட்டங்கள் செய்தோம், தொடருந்தை வழிமறித்துப் போராட்டம் செய்தோம் அதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அரச தலைவரைச் சந்தித்து மனுக் கொடுத்தோம். கடவைகளில் தமது பணிகளை முன்னெடுக்கவேண்டியதன் அவசியம், அத்தகைய ஊழியர்களுக்கான நியமனம் உட்பட பல விடயங்களையும் அரச தலைவருக்கு எடுத்துக் கூறினோம். கவனிக்கிறேன் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கூறியிருந்தார். இன்றுவரை அவர் கவனிக்கவேயில்லை.

கடவைக் காப்பாளர்களில் பலரது குடும்பங்கள் காப்பாளர்களை நம்பியே வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். அவ்வாறிருக்க அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்காமையும் சம்பள அதிகரிப்பு இல்லாதமையும் அவர்களை மன உளைச்சலுக்கு ஆளாக்கியுள்ளது. மன உளைச்சலுடன்தான் அவர்கள் கடவைகளில் பயணிகளின் நலன்கருதி பணியில் ஈடுபடுகின்றனர். இதன் தார்ப்பரியம் தற்போதைக்குப் பயணிகளுக்கும் தெரியாது தான். தாங்கள் சென்ற பின்னர் கடவைகளில் எந்த நிமிடம் தொடருந்து வரும்? என்று கடவைகளைக் கடக்கும் பொதுமக்களான பயணிகள் ஒவ்வொரு தடவையும் பய உணர்வை ஏற்படுத்த அதிகாரிகள் இடங்கொடுக்கவுள்ளனரா?

எமது புள்ளிவிவரங்களின்படி கடந்த 5 வருடங்களில் 49 விபத்துகள் ஏற்பட்டுள்ளன. அவற்றில் 35 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த விபத்துகள் அனைத்தும் தொடருந்துத் திணைக்களத்தின் கீழ் உள்ள ஊழியர்கள் கடமைபுரியும் கடவைகளிலும், தன்னியக்க கருவிகள் இயங்கும் கடவைகளிலுமே இயங்குகின்றன. தாம் பணிபுரியும் இடங்களில் இத்தகைய விபத்துகள் இடம்பெறவில்லை.

5 வருடங்களாக நாளாந்தம் 250 ரூபா பாதுகாப்பு அமைச்சின் நிதியிலிருந்து பொலிஸாரால் எமக்கு வழங்கப்படுகிறது.

5 வருடங்களுக்கு முன்னர் பணிக்கு அமர்த்தும்போது 3 மாதங்களில் சம்பள உயர்வும் 6 மாதங்களில் நிரந்தர நியமனமும் வழங்கப்படும் என்று கூறியே இந்தப் பணிக்குச் சேர்த்தனர். அது இன்னும் நடக்கவில்லை.

முன்னர் போக்குவரத்து அமைச்சராக இருந்த குமார வெல்கம தமக்கு நிரந்தர நியமனம் பெற்றுத்தருவதாகக் கூறியிருந்தார். பின்னர் நிமல் சிறிபால டீ சில்வா போக்குவரத்து அமைச்சரான தன் பின்னர் நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. ஆனால் எம்மை விடுத்து 1200 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கியுள்ளார். எமக்கு நியமனம் வழங்காது அவர் பழிவாங்குகிறார்.

எமக்கு நியமனம் தந்து தனியே கடவைகளில் மட்டும் வேலை தாருங்கள் என்று கேட்கவில்லை. தொடருந்து பயணிக்கும் பகுதிகளில் தண்டவாள பராமரிப்பு, துப்பரவு உள்ளிட்ட, ஏனைய ஊழியர்கள் செய்வதைப் போன்று தாமும் செய்யத் தயார். கடவைகளையும் கவனிக்கமுடியும். இல்லாவிடில் ஏதாவது ஒரு அரச திணைக்களத்தில் சிற்றூழியர்களாக என்றாலும் நிரந்தரமாக அமர்த்த வேண்டும்.

சமுர்த்திப் பயனாளிகளுக்கு 22 ஆயிரத்து 500 ரூபா வழங்கி கடவைகளில் பாதுகாப்புப் பொறுப்பு வழங்க அமைச்சர் நிமல் சிறிபால டீ சில்வா நடவடிக்கை எடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறெனில் தமக்கு சமுர்த்தியைத் தந்து அந்தப் பணியை ஒப்படையுங்கள். தாம் அந்தப் பணியைச் செய்கிறோம். அதைவிடுத்து பழிவாங்காதீர்கள் என்று றொஹான் மேலும் தெரிவித்தார். (4)

## உற்பத்தித்திறன் விருதுக்கு 28 க்கு முன் விண்ணப்பிக்கவும்

யாழ்ப்பாணம், மார்ச் 20

இலங்கையர்களின் வாழ்க்கைத் தரத்தைக் கூட்டும் தேசிய பணிக்கு அரச நிறுவனங்களை முன்னெடுக்கவே 2018 தேசிய உற்பத்தி திறன் விருது வழங்கப்படுகிறது.

எனவே மாகாண சபை நிறுவனங்கள், உள்ளூராட்சி சபைகள், பிரதேச செயலகங்கள் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் உரிய படிவங்களை பூர்த்தி அனுப்பி வைக்குமாறு உற்பத்தி திறன் செயலக பணிப்பாளர் கேட்டுள்ளார்.

நாடு தழுவிய ரீதியில் தரம், உற்பத்தி திறன் மற்றும் சேவைகளை மேம்படுத்துவதற்காகவே தேசிய உற்பத்தி திறன் விருது வழங்கப்படுகிறது.

அமைச்சுக்களுக்கு இடையில்(மத்திய மாகாண முதலமைச்சர் அலுவலகம்) மாகாண அமைச்சுக்கள், அரசாங்க திணைக்க ளங்கள், பிரதேச செயலகங்கள், மாகாண சபை நிறுவனங்கள் மற்றும் அரச நிறுவனங்கள் இவ்வாறு வகைப்படுத்தப்பட்டு ஊக்குவிக்கப்படுகின்றன.

விண்ணப்பங்கள் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைத்தல் வேண்டும். மேலும் இதில் தெரிவாகும் அரச நிறுவ னங்களுக்கு எதிர்வரும் புரட்டாதி மாதப் பெறுபேறுகள் அறிவிக்கப்படும் 2018 கார்த்திகை மாதம் விருது வழங்கும் விழா நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (50)

## இரு நாள் பயிற்சிப் பட்டறை

மன்னார், மார்ச் 20

தேசிய சமாதானப்பேரவை மற்றும் ஒப்பன் நிறுவனம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்த 'நிலை மாற்று நீதிப் பொறிமுறை' எனும் தலைப்பிலான இரு நாள் பயிற்சி பட்டறை மன்னார் நகர சபை மண்டபத்தில் சனி , ஞாயிறு ஆகிய இரு தினங்கள் நிகழ்ச்சித்திட்ட அலுவலகர் ஏ.மெடோசன் பெரேரா தலைமையில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட பிராந்திய ஊடகவியலாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்களை ஒன்றிணைத்த செயலமர்வாக இடம் பெற்றது.

இந்த நிகழ்வுக்கு வளவாளராக சட்டத்தரணி ஜங்கரன் கலந்துகொண்டார். (56)



## தொண்டர் ஆசிரியர்களுடன் இன்று கலந்துரையாடல்

நிரந்தர நியமனம் கோரி வரும் வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்களுடனான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு முன்பாகவுள்ள என்.ஈ.சி கல்வி நிலையத்துக்கு முன்பாக இன்று முற்பகல் 11 மணிக்கு இது இடம்பெறும். தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனத்தை உறுதி செய்துகொள்ளும் வகையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறும். தொண்டர் ஆசிரியர்கள் அனைவரையும் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர் சங்கம் கோரியுள்ளது. (4)



உள்ளூராட்சித் தேர்தலில் வலிகாமம் மேற்கு பிரதேச சபையில் சுயேட்சைக் குழுவாக போட்டியிட்டு இரண்டு உறுப்பினர்களை வெற்றிகொண்ட சமூக மேம்பாட்டு இணையத்தினைச் சேர்ந்த உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு சுழிபுரம் சந்தியில் உள்ள இணைய அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

# கண்டி வன்முறைகளால் இலங்கைக்கு அபகீர்த்தி

## பிரதியமைச்சர் அமீர் அலி தெரிவிப்பு

அம்பாறை.மார்ச் 20
அம்பாறை மற்றும் கண்டியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் இலங்கைக்கு பன்னாட்டு மத்தியில் அபகீர்த்தியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இவ்வாறு பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.



தொழில் முயற்சியாளர்களுக்கு வாழ்வாதார உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு ஓட்டமாவடி பாத்திமா பாலிகா மகா வித்தியாலய மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
கண்டி பிரச்சினை தொடர்பில் நாடாளுமன்றத்தில் அமர்ந்திருந்து எமது சமூகத்தை காப்பாற்ற சண்டை போட்டோம்.
முஸ்லிம்கள் சட்ட ஒழுங்கை நிலைநாட்டி இருந்தால் இந்தப் பிரச்சினை இவ்வாறு ஏற்பட்டிருக்காது.
அம்பாறை மற்றும் கண்டிச் சம்பவம் போன்று இந்த நாட்டில் இன்னுமொரு இன முறுகலை எதிர்காலத்தில் ஏற்படுத்திக் கொள்ளக்கூடாது என்ற மனநிலைமை எங்களிடத்தில் இருக்க வேண்டும். நாம் பெரும்பான்மை சமூகத்தினருடன் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்கின்ற உணர்வுடன் பழக வேண்டும். இதனை மீறினால் எதிர்காலத்தில் எமது சமூகத்துக்கு பெரிய பிரச்சினையை ஏற்படலாம் என்றார். (ந.ரி4)

## பேருந்து உரிமையாளர் சேவைப் புறக்கணிப்பு

கொழும்பு. மார்ச் 20
மத்துகம - கொழும்பு தனியார் பேருந்து மற்றும் சொகுசு பேருந்து உரிமையாளர்களும் நேற்று முதல் சேவைப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். கடந்த சனிக்கிழமை பாடசாலை மாணவர் ஒருவர் பேருந்தில் இருந்து இறங்க முற்பட்ட போது கீழே விழுந்து காயமடைந்த சம்பவத்தை முன்னிறுத்தி அந்த பேருந்தின் சாரதி மற்றும் நடத்துனர் மீதும் பிரதேச வாசிகள் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். சம்பவத்தில் காயமடைந்த பேருந்தின் சாரதியும், நடத்துனரும் தற்போது அகலவத்தை - பிம்புர மருத்துமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.
தாக்குதலை மேற்கொண்ட தரப்பினரை கைது செய்யுமாறு கோரியே இந்த சேவைப் புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. இதற்கு நீதி கிடைக்கும் வரை நாம் புறக்கணிப்பைத் தொடர்வோம் என புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளோர் தெரிவித்தனர். (ந-ரி5)

## மீட்கப்பட்ட தலையின் உடற்பாகம் மீட்பு

கொழும்பு, மார்ச் 20
கொழும்பு வாழைத்தோட்டம் பகுதியில் மீட்கப்பட்ட, தலையின் உடற்பாகம் கண்டுபிடிக்கப்பட்டது. இது தொடர்பாக பரிசோதனை மேற்கொள்வதற்கு உடற்பாகம் நேற்றுத் தோண்டி எடுக்கப்பட்டது. அங்குணுகொலபெலெஸ்ஸ - முரவெடி ஹேன - கோட்டாபயகம பிரதேசத்தில் உடல் பாகம் புதைக்கப்பட்டுள்ளமை காவல்துறை விசாரணைகளின் மூலம் நேற்று முன்தினம் உறுதிப்படுத்தப்பட்டது. இதனை அடுத்து அந்தப் பகுதியில் பொலிஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருந்தது. உடல் துண்டிக்கப்பட்ட நிலையில், பாதாள உலக உறுப்பினரான கொஸ்மல்லி என்பவரின் தலை கடந்த 7ஆம் திகதி கொழும்பு வாழைத்தோட்டப் பகுதியில் மீட்கப்பட்டது. இந்த சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டதுடன், அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இருந்து உடல் புதைக்கப்பட்டிருக்கும் பிரதேசம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-ரி5)

## சிறுமியைக் கோழிக் கூண்டில் அடைத்து வைத்த தாய் கைது

கண்டி, மார்ச் 20
களியாட்ட நிகழ்வொன்றில் பங்குபற்றுவதற்கு முற்பட்ட 9 வயதுச் சிறுமியை கோழிக் கூண்டில் அடைத்துவைத்த சம்பவம் ஒன்று கண்டி - ஹேவாஹெட்ட பகுதியில் நடந்துள்ளது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நடந்துள்ளது.
பொதுமக்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலுக்கு அமைய சிறுமி மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இது தொடர்பில் சிறுமியின் தாய் கைது செய்யப்பட்டுள்ளார். தாய் இதற்கு முன்னரும் பல தடவைகள் சிறுமியை இவ்வாறு சித்திரவதைக்கு உட்படுத்தியுள்ளார் எனவும் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-ரி5)

## மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டவர் கைது

நுவரெலியா,மார்ச் 20
பொகவந்தலாவ கெசல்கமுவ ஆற்றுக்கு அருகாமையில் சட்டவிரோதமான முறையில் மாணிக்ககல் அகழ்ந்து கொண்டிருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.
பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின்படி மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டார். கைது செய்யப்பட்டவரிடமிருந்து மாணிக்ககல் அகழ்வுக்கு பயன்படுத்திய பல உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டனர். (ந.ரி4)



# மீண்டும் அதிபரானார் ஜி ஜின் பிங்



பீஜிங், மார்ச்19

சீனாவின் அதிபராக ஜி ஜின் பிங் நேற்றுமுன்தினம்தெரிவுசெய்யப்பட்டார். இதன் மூலம் அவர் எதிர்வரும் 2023ஆம்ஆண்டுவரைஅதிபராகத் தொடர்வதுஉறுதிசெய்யப்பட்டது. சீன நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம்நடைபெற்றவாக்கெடுப்பிலேயே அவர்மீண்டும்அதிபராவது உறுதிப்படுத்தப்பட்டது.

சீனாவில்ஒருகட்சிஆட்சிமுறைநடைமுறையில் உள்ளது. அங்கு கடந்த 1949ஆம் ஆண்டு முதல் சீன கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி செய்து வருகிறது. அந்த கட்சியின் பொதுச்செயலாளரே நாட்டின் அதிபராகவும் பதவி வகிக்கிறார். சீன கம்யூனிஸ்ட் கட்சியின் நிறுவுனர் மா சேதுங் கடந்த 1949ஆம் ஆண்டு முதல் 1976 செப்ரெம்பர் 9ஆம்திகதி அவர் இறக்கும்வரை அதிபராக நீடித்தார். அதன்பின் 1990ஆம் ஆண்டில் ஒரு நபர் இரு முறைக்கு மேல் அதிபர் பதவியில் தொடர முடியாது என்ற சட்டம் இயற்றப்பட்டது.

தற்போதைய சீன அதிபர் ஜி ஜின்பிங் கடந்த 2013 மார்ச் 14ஆம் திக்தி சீன அதிபராகப் பதவியேற்றார். கடந்த 2017 ஒக்டோபரில் நடந்த உள்கட்சித் தேர்தலில் ஜி ஜின்பிங் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளராக மீண்டும் தேர்வு செய்யப்பட்டார். அப்போதே அவர் இரண்டாவது தடவையாக வும் அதிபராவது உறுதியானது. அதிபரைத் தெரிவு செய்வதற்கான நாடாளுமன்ற வாக்கெடுப்பு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. 3 ஆயிரம் உறுப்பினர்களில் 2ஆயிரத்து 969பேரின் ஆதரவைப்பெற்று மீண்டும் அதிபராகத் தெரிவானார் ஜின் பிங். ஒருவர் இரு தடவை என்ற அதிகார வரையறையும் தற்போது நீக்கப்பட்டுள்ளது. இதனால் ஜின் பிங் வாழ்நாள் முழுவதும் அதிபராகத் தொடரவாய்ப்புள்ளதுஎன்றும்கருதப்படுகிறது. (ம)

## எரிகல்லை விண்கலம் மூலம் நொறுக்குவதற்கு நாசா திட்டம்

சூரியனைச் சுற்றிவரும் மிகப்பெரிய எரிகல்லைவிண்கலம்மூலம்அடித்துநொறுக்க நாசா மையம் திட்ட மிட்டுள்ளது. சூரியனை ஏராளமான குறுங்கோள்கள் சுற்றி வருகின்றன. அவற்றை விண்கல் அல்லது எரிகல் என்று அழைக்கின்றோம். பூமியை நோக்கி வரும் போது அவைகள் எரிந்து சாம்பராகின்றன. அதேநேரத்தில்சிலஎரிகற்கள்பூமியில் வந்து விழுகின்றன.

தற்போது 'பென்னு' என்றமிகப்பெரியஎரிகல் சூரியனைச்சுற்றி வருகிறது. அது ஆயிரத்து 600அடிஅகலம்கொண்டதுஇந்தவிண்கல் பூமியை தாக்கினால் கடும் பாதிப்பு ஏற்படும். இதையடுத்தே இந்த விண்கல்லை விண்கலத்தின் மூலம் அடித்து நொறுக்க நாசா திட்டமிட்டுள்ளது. (ம)

# மீண்டும் புடின்

மொஸ்கோ, மார்ச் 20

ரஷ்யாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றார்தற்போதையஅதிபரானவிளாடிமிர் புடின். இதன் மூலம் எதிர்வரும் 2023ஆம் ஆண்டு வரை அவர் அதிபர் பதவியில் தொடரவுள்ளார்.



இந்தவருடத்தின்மத்தியபகுதியில்புடினின்பதவிக்காலம்முடிவடையவிருந்தது. இதையடுத்து நேற்றுமுன்தினம் தேர்தல்நடத்தப்பட்டது.

ரஷ்ய எதிர்கட்சித் தலைவர் நவால்னி தேர்தலில் போட்டியிட தடை விதிக்கப்பட்டிருந்தது. மற்றொரு முக்கிய வேட்பாளருக்கும் கடைசிக் கட்டத்தில் தடை விதிக்கப்பட்டது. இதனால் எதிர்ப்புக்கள் ஏதும் இல்லாமல் புடின் வெற்றிபெறுவார்என்றுகருதப்பட்டது.

இதன்படி அவர் இமாலய வெற்றியைப் பெற்றார். பதிவான வாக்குகளில்சுமார்75 சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றார்புடின்.

ரஷ்ய அதிபருக்கான தேர்தலில், பதிவான வாக்குகளில் 50சதவீதவாக்குகளைவேட்பாளரொருவர்பெறாதபட்சத்தில்முதலிரு இடங்களையும் பிடிக்கின்ற வேட்பாளர்களுக்கு மீண்டும் தேர்தல் நடத்தப்படும். இந்த நடைமுறைக்குச் செல்ல வேண்டிய எந்த அவசியத்தையும்புடினின் வெற்றி வழங்கவில்லை.

"இந்த ஒற்றுமையைக் காத்துக் கொள்வது மிகவும்அவசியம். எமதுநாட்டின்எதிர்காலம் பற்றிநாங்கள்தொடர்ந்துசிந்திப்போம். அதன்படி பயணிப்போம்" என்று புடின் தெரிவித்தார். (ம)



## அவசியம் தேவையா?

உங்கள் செல்லப் பிராணியை எவ்வளவு தூரம் நீங்கள் நேசிக்கிறீர்கள் என்பதை அறிந்துகொள்வதற்காகவே உலகின் விலை உயர்ந்த ஆடையை உருவாக்கியதாகச்சொல்கின்றன இரண்டு நிறுவனங்கள். 24 கேரட்தங்கத்தில்வைரங்கள் பதித்தநாய்க்கானஉடையை உருவாக்கி சாதனை படைத்திருக்கின்றன டாகி ஆர்மர், வெரி பெஸ்ட் நிறுவனங்கள். தங்கத்தால்துணிதயாரிக்கப்பட்டிருக்கிறது. இதில் விலை மதிப்புமிக்க 20 வைரக் கற்கள்பதிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆடையின் விலை இலங்கை மதிப்பில் 22 கோடியே 2 இலட்சத்து 50 ஆயிரம்ரூபா. கத்தியால்கூட காயம் ஏற்படுத்திவிட முடியாது.

இரும்பைவிட15மடங்குஇந்த ஆடை உறுதியானது. தங்க ஆடையைத்தங்கள்நாய்க்கு வாங்குவதற்குப்பலரும் ஆர்வமாக இருப்பதாகச் சொல்கிறார்கள்இந்தநிறுவனத்தைச்

நீங்கள்
அடகு வைக்கும் நகைக்கான
முழுத் தொகையும்
உங்கள் கைகளுக்கு
கிடைக்கின்றதா?

காப்புறுதிக் கட்டணம், சேவைக் கட்டணம் ஏதுமின்றி முழுத்தொகையையும் உங்களுக்கு பெற்றுத்தருவது சம்பத் வங்கி மட்டுமே.

கெரட் 24 ற்கு ரூ. 40,000/-
கெரட் 22 ற்கு ரூ. 37,000/-

தற்போது அனைத்து சுப்பர் கிளைகளும்
அடகு சேவைகளுக்காக
வருடத்தின் 365 நாட்களும்
மு.ப 8.00 மணி முதல் பி.ப 8.00
மணிவரை திறந்திருக்கும்.
(கொழும்பு சுப்பர் கிளை தவிர்ந்த)

சம்பத்
ரண்திரிய
அடகுச் சேவை
அவசரத்திற்கு உதவும் அயலவன்

0112 30 30 50 www.sampath.lk

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்



கத்தோலிக்க திருச்சபையின் புனிதரான பத்திரிசியாரின் (செயின்ட் பற்றிக்ஸ்) திருநாள் உலகமெங்கும் கடந்த சனிக்கிழமை கோலாகலமாகக்கொண்டாடப்பட்டது. அயர்லாந்துநாட்டைச்சேர்ந்தவரான பத்திரிசியார் உலக நாடுகளைநோக்கியதனதுபற்பலபயணங்கள்மூலம்கத்தோலிக்கமதத்தை விரிவுபடுத்தினார். கத்தோலிக்க திருச்சபையின் மறைபரப்புப் பணிகளில் பத்திரிசியார் முக்கியமானவராகக்கருதப்படுகிறார். (ம)

"1939 ஆம் ஆண்டில்
இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட முதல்
நிறுவனமெனும் பெருமிதம் கொண்ட நாம்"



அன்றும் - இன்றும் - என்றும்
இலங்கையர்களுக்காக அர்ப்பணித்த
எமது காப்புறுதி நிறுவனம்

1939 ஏப்ரல் 3 ஆம் திகதி சிலோன் இன்சூவரன்ஸ் நிறுவனம் இந்நாட்டில் பதிவு செய்யப்பட்ட முதல் நிறுவனமெனும் பெருமிதத்துடன் பயணத்தை ஆரம்பித்தோம். இலங்கையர்களுக்காக மனப்பூர்வமான அர்ப்பணிப்புடன் சேவை வழங்கும் எமது தேசத்தின் ஒப்பற்ற காப்புறுதி நிறுவனமே நாம்.

எமது இலங்கை, எமது நம்பிக்கை

CEYLINCO
VIP
ON THE SPOT
உலகிற்கே ஒன்று!

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வெளியக சுயநிர்ணயத்தை கோருவது எப்போது?

உள்ளக சுயநிர்ணய உரிமை நிராகரிக்கப்படும்பட்சத்தில் வெளியக சுயநிர்ணய உரிமையைக் கோரும் உரித்து அந்த இனத்துக்கு இருக்கிறது. அதனைப் பன்னாட்டுச்சட்ட திட்டங்கள் உறுதிப்படுத்துகின்றன என்று யாழ்ப்பாணத்தில் தெரிவித்திருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன். முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர் அ.அமிர்தலிங்கத்தின் திருவுருவச் சிலையைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இந்நாள் எதிர்க் கட்சித் தலைவரான அவர் இதனைத் தெரிவித்தார்.

வெளியக சுயநிர்ணய உரிமை என்பது மற்றொரு வடிவத்தில் தனிநாட்டைக் கோருவதுதான். தளபதி என்று செல்லமாக அழைக்கப்பட்ட அமிர்தலிங்கம்கூட, தனிநாட்டுக் கோரிக்கையை ஆணித்தரமாக முன்வைத்த ஒருவர். போதாததற்கு ஆயுத வன்முறை வழிக்குத் தமிழ் இளைஞர்கள் திரும்ப வேண்டும் என்றும், அதன் மூலம் தனி நாட்டை விரைவில் அடைந்துவிட முடியும் என்றும் அழைப்புவிடுத்தவர். பின்னர் எதிர்க் கட்சித் தலைவர் பதவி கிடைத்ததும், தனி நாட்டுக் கொள்கையைக் கைவிட்டுவிட்டார் என்று விமர்சிக்கப்பட்டவர். அதன் மூலம் துன்பியல் முடிவையும் எதிர்கொண்டவர்.

அப்படிப்பட்டவரின் சிலைத் திறப்பு விழாவில் நின்றுகொண்டேதான், இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண இந்த அரசு முன்வராவிட்டால் தமிழர்கள் மீண்டும் தனிநாட்டுக் கோரிக்கையைக் கையில் எடுப்பார்கள் என்று மறைமுகமாகக் கூறியிருக்கின்றார் இரா.சம்பந்தன்.

எனினும், தனிநாட்டுக் கோரிக்கையைத் தமிழர்கள் எப்போது கையில் எடுப்பார்கள் என்கிற விடயத்தை அவர் தெளிவுபடுத்தவில்லை. தீர்வு விடயத்தில் கொழும்பு அரசு செயற்படுவதற்கான காலக்கெடு எது என்பதையும் அவர் சொல்லவில்லை. அது ஓரிரு வருட காலத்திலும் வரலாம். பல பத்து வருடங்களும் ஆகலாம் என்பதுதான் இப்போதைக்கு அவரது கருத்து.

இருந்தாலும், அரசியல் தீர்வு ஒன்றை உருவாக்குவதற்குக் கொழும்பு அரசு பின்னடிக்குமாக இருந்தால், தனிநாட்டுக் கோரிக்கையை திரும்பவும் கையில் எடுக்கத் தமிழர்கள் தயங்கமாட்டார்கள் என்பதை இடித்துரைக்கும் விதமாகவே சம்பந்தரின் பேச்சு இருந்தது என்று கொள்ளலாம்.

உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் புதிய அரசமைப்பு முயற்சிகளில் இருந்து அரசு பின்வாங்கியிருக்கும் நிலையில் அரசுக்கு இந்த எச்சரிக்கையை விடுப்பது அவருக்கு அவசியமாகவும் இருந்திருக்கும் எனக் கொள்ளலாம்.

தனி நாட்டுக் கோரிக்கையை நிபந்தனையின்றிக் கைவிட்டுவிட்டோம் என்பதை வெளிப்படையாகவும் ஆணித்தரமாகவும் கூறிவந்தவர் சம்பந்தன். ஒன்றிணைந்த நாட்டுக்குள்ளேயே ஒரு தீர்வைக் கேட்கிறோம் என்று திரும்பத் திரும்பச் சொல்வதற்கு அவர் தயங்கியதில்லை. அப்படிப்பட்டவரே இப்போது வெளியக சுயநிர்ணய உரிமையைக் கோரும் உரிமை தமிழர்களுக்கு இருக்கின்றது என்பதைத் திரும்பத் திரும்ப வலியுறுத்தும் நிலமை வந்திருக்கிறது என்பதும் கவனிக்கப்படவேண்டிய விடயம்.

சம்பந்தரதும் பங்களிப்புடன்தான், ரணில் மைத்திரி கூட்டு அரசு நிறுவப்பட்டதும், மைத்திரிபால சிறிசேன அரசதலைவரானதும் நடைபெற்றன. அதனாலேயே இந்த அரசின் மூலம் ஒரு தீர்வை எப்படியாவது அடைந்துவிட முடியும் என்று நம்பி அவர் கருத்துக்களைத் தெரிவித்து வந்தார், வருகின்றார். ஆனால், நிலமைகள் மெச்சத்தக்கவிதத்தில் இல்லை என்பதை அவரது இந்த உரை துலாம்பரப்படுத்துகின்றது.

பன்னாட்டுச் சமூகம் இந்த விடயத்தில் தமிழர்களுடன் முழுமையாக நிற்பதாகவும், பிராந்திய வல்லரசொன்று தமிழர்களுக்குநியாயம் வழங்கப்படவேண்டும் என்பதில் உறுதியாக நிற்பதாகவும்கூட, சம்பந்தன் தெரிவிக்கிறார். இருந்தாலும் தீர்வு எப்போது என்பது அவருக்கும் தெரியவில்லை என்பதையே அவ்ரது உரை காட்டுகின்றது. காத்திருப்பதைத் தவிர தமிழர்களுக்கு வேறு வழியேதும் இல்லை என்பதும் புலப்படுகின்றது. அப்படிப்பட்டதொரு நிலையில் வெளிய சுயநிர்ணய உரிமையைத் தமிழர்கள் எப்போது கோரப் போகின்றார்கள்?




# மாகாணசபைத் தேர்தலில் கூட்டமைப்பின் பலம் வெளிப்படுமா?

இந்துமதி

அடுத்த மாகாணசபை தேர்தலுக்கு முன்பாக எந்த வகையிலேனும் கூட்டமைப்பைப் பலவீனப்படுத்திவிடுகின்ற செயற்பாடுகள் மும்முரமாக இடம் பெறுவதை அவதானிக்கமுடிகின்றது. கூட்டமைப்பினுள் இருந்துகொண்டே அதற்குக் குழி பறிக்கும் வேலையில் சிலர் ஈடுபட்டுள்ளனர். உள்ளூராட்சித்தேர்தலில் வடக்குக் கிழக்கில் அதிக ஆசனங்களை கூட்டமைப்பு பெற்றபோதிலும், அதன் வாக்குவங்கியில் சிறிது சரிவு ஏற்பட்டதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். தேர்தல் வியூகங்களை முறையாக வகுக்காமை, மக்களால் ஏற்கக்கூடிய பொருத்தமான வேட்பாளர்களைநியமிக்காமை, முறையான தேர்தல் பரப்புரைகள் இடம்பெறாமை, தலைவர்களின் மந்தமான செயற்பாடு ஆகியகட்டமைப்பின்பின்னடைவுகளை எதிரணியினர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

### உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் கூட்டமைப்புக்கு அதிர்ச்சியளித்ததாக முதலமைச்சர் விமர்சிப்பு

தேர்தல் முடிவுகள் வெளியான போது கருத்துக் தெரிவித்த வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன், தமிழரசுக்கட்சியினர் நில நடுக்கமொன்றை உணர்ந்துள்ளனர் என்றார். அவர் குறிப்பிட்ட அந்தநிலநடுக்கத்தால் அவர் சிறிதும் பாதிக்கப்படவில்லை என்பதை அவரது கருத்து தெளிவாக எடுத்துக் காட்டிவிட்டது.

தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் முதலமைச்சர்வேட்பாளராகநியமிக்கப்பட்டுத் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் அமோக ஆதரவுடன் வெற்றி பெற்றிருந்த அவர் இன்னமும் தமிழ் அரசுக்கட்சியில்தான் உள்ளார். அவர் தமிழ் அரசுக்கட்சியிலிருந்து விலகி விடவுமில்லை, தமிழரசுக்கட்சி அவரைக்கட்சியிலிருந்துவிலக்கி விடவுமில்லை. அவ்வாறாயின், தேர்தல் முடிவுகளை, அவை தமிழ் அரசுக் கட்சிக்கு நில நடுக்கமெனக் குறிப்பிட்ட அவரது விமர்சனம் அவரையும் பாதித்திருக்க வேண்டும். ஆனால்அவ்வாறு எதுவும்நடந்து விடவில்லை. அரசியலில் எதுவும் நடக்கலாம். அங்குநிரந்தரமான நண்பர்களும் இல்லை, நிரந்தரமான எதிரிகளும் இல்லை, ஆனால் பிரச்சினைகளைத் தாங்கிக்கொண்டுஅவலவாழ்வு வாழ்ந்துவருகின்றதமிழர்களின் மத்தியில்அரசியல்சித்துவிளையாட்டில் சிலர் ஈடுபடுவதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இதற்கானதருணமும்இதுவல்ல.

### தமிழர்களை ஒன்றிணைக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

தமிழர்களின் அரசியல் பலம் சிதைந்து விடக் கூடாது என்ற நல்லநோக்கத்துடன் தமிழ்க்கட்சிகளை இணைத்துதமிழ்த்தேசியக்கூட்டமைப்புஉருவாக்கப்பட்டது. புலிகள் பலத்துடன் இருந்த வரையில் ஏதோவொருவகையில் கூட்டமைப்பின் ஐக்கியம் பேணப்பட்டது. அவர்கள் இல்லாதபோதுசிலரதுசுயரூபம்வெளிப்படஆரம்பித்தது. கூட்டமைப்பும் பிளவுபட்டது. கூட்டமைப்பை அழித்து விடுவதெனச் சிலர் கங்கணம் கட்டிக்கொண்டு அலைகின்றனர். இது புலிகளுக்குச் செய்கின்றமிகப்பெரியதுரோகம் என்பதை இவர்கள் புரிந்து கொள்ளவேண்டும். உள்ளூராட்சித் தேர்தலில் விட்டதவறுகள் மீண்டும் இடம்பெறாதுபார்த்துக் கொள்வதுகூட்டமைப்பின்பிரதானமான கடமையாகும். வேட்பாளர்களின் தெரிவில் அதிக அக்கறைஎடுத்துக்கொள்வது அவசியமானது. இதில் தவறுகள் ஏற்படுமானால்எல்லாமேபாதகமாக முடிந்துவிடும்.

### கூட்டமைப்பைப் பலவீனப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டதே தமிழ் மக்கள் பேரவை

தமிழ் மக்கள் பேரவை ஓர் அரசியல்இயக்கம்அல்லவென அடிக்கடிகூறப்பட்டுவந்தாலும், அதில் அங்கம்வகிப்பவர்களில்பலரும் அரசியல்வாதிகளாகவே உள்ளனர். கடந்த உள்ளூராட்சித் தேர்தலில்பேரவையினர்கூட்டமைப்புக்கு எதிராகக் களம் இறங்கியதையும் காண முடிந்தது. சி.வி. விக்னேஸ்வரன் பேரவையைப் பலப்படுத்துவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். யாழ்ப்பாணம் வீரசிங்கம்மண்டபத்தில் இறுதியாக இடம்பெற்ற பேரவையின் கூட்டமொன்று குழப்பத்தில் முடிவடைந்துள்ளது. பேரவைக்குமுழு ஆதரவையும்வழங்கிவருகின்ற ஊடகமொன்று, அங்குநடந்த சம்பவங்களைமுழுஇரட்டிப்புச் செய்யும் அளவுக்கு நிலைமை மோசமாக மாறிவிட்டிருந்தது. ஆனால் நீரில் மூழ்கியவன் சிறு துரும்பைக்கூடநம்பிக்கையுடன் பற்றிப் பிடிப்பது போன்று விக்னேஸ்வரன் பேரவையை விடாமல்பிடித்துக்கொண்டிருக்கிறார். வேலைப்பளு காரணமாக ஜெனிவா செல்லவில்லையெனக் கூறிச் சமாளித்த அவர், திருகோணமலையில் பேரவையின் கூட்டத்தை நடத்துவதில் அதிகஅக்கறையுடன்ஈடுபட்டார். வேலைப்பளுவென அவர், இதைத்தான் குறிப்பட்டார் என்பது இப்போதுதான் புரிகின்றது. விக்னேஸ்வரனின் இரட்டை வேடத்தைப் புரிந்து கொண்ட கஜேந்திரகுமார் போன்றவர்கள் அவரைத் தவிர்த்து விடுவ தற்கானசந்தர்ப்பத்துக்காகக்காத்திருப்பதாகஉள்வீட்டுத்தகவல்கள் தெரிவிக்கின்றன. இதுஉண்மையாகஇருக்குமானால்விக்னேஸ்வரனது அரசியல்வாழ்வு விரைவில் அஸ்தமித்துப் போக இடமுண்டு.

மாகாணசபைத் தேர்தல், அடுத்து இடம்பெறப் போகும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னோடி என்பதால் இதில் அதிக கவனம் செலுத்த வேண்டிய இக்கட்டில்கூட்டமைப்பு உள்ளது. எதிரணிக்குஈடுகொடுக்கும் வகையில் வியூகங்களை வகுத்துச்செயற்பட்டால்தான்குறிப்பிட்ட இலக்கை கூட்டமைப்பால் எட்ட முடியும்.

கூட்டமைப்பிலிருந்து வெளியேறியசிலர்அரசியல்ஆதாயத்துக்காக மீண்டும் கூட்டமைப்புடன் இணைந்துகொள்வதற்கு முற்படுவார்கள் கூட்டமைப்பின் கதவுகள். இவர்களுக்காக நிரந்தரமாகவே பூட்டப்பட்டிருக்க வேண்டும். அதே வேளை, உண்மையான விசுவாசிகள் கட்சியால் அரவணைத்துச் செல்லப்பட்ட வேண்டும். கூட்டமைப்பு என்ற பெருவிருட்சம், புயலுக்கும், சூறாவளிக்கும்ஈடுகொடுத்துநிலைத்து நிற்கவேண்டும் என்பதே அதன் உண்மையான தொண்டர்களின் பெரு விருப்பாகும்.

# ஊழல் அரசியல்வாதிகளை அரசு இனியும் விட்டுவைக்குமா?

சேரலாதன்

இந்த நாட்டில் பெரும் பணக்காரர்களாகத் திகழும் முதல் பத்து அரசியல்வாதிகளின் பெயர் விபரங்களை அமெரிக்காவின் புகழ்பூத்த வர்த்தக சஞ்சிகையான 'போபஸ்' வெளியிட்டுள்ளது.

இந்தச்சஞ்சிகைஎழுந்தமானத்தில், ஆதாரமற்ற செய்திகள் எதனையும் வெளியிடுவதில்லை. சகல விவரங்களையும் தீர ஆராய்ந்துஉண்மைத்தன்மையைஉறுதி செய்த பின்னரே செய்திகளை வெளியிட்டு வருகின்றது. இந்தச் சஞ்சிகைக்கு உலகளாவிய ரீதியில் இலட்சக்கணக்கான வாசகர்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.



**இலங்கை அரசியல்வாதிகளில் பெரும்பணக்காரர் வரிசையில் மகிந்தவுக்கு முதல் இடம்**

இந்தச்சஞ்சிகையால்வெளியிடப்பட்டுள்ள விவரங்களின் அடிப்படையில் முன்னாள் அரச தலைவரான மகிந்த ராஜபக்ச இலங்கைமதிப்பின்பிரகாரம் 2 இலட்சத்து 27 ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களுக்கு அதிபதியாகவுள்ளார். இவரையடுத்து இலங்கைக் கிரிக்கெட் அணியின்முன்னாள்தலைவரும், அமைச்சருமான அர்ஜீனரணதுங்கஇரண்டாவது இடத்திலும், தற்போதைய அரச தலைவரான மைத்திரிபால சிறிசேன மூன்றாவது இடத்திலும், ஆறுமுகன் தொண்டமான் நான்காவது இடத்திலும், கருணா என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன், பிரதியமைச்சரானஏ.எச்.எம். பௌசி, சந்திரிக்கா குமாரதுங்க, அநுரகுமாரதிசநாயக்க, ஏ.எல்.எம். அதாவுல்லா, ரணில் விக்கிரமசிங்கஆகியோர்முறையேஐந்தாவது, ஆறாவது, ஏழாவது, எட்டாவது, ஒன்பதாவது மற்றும் பத்தாவது இடத்திலும் உள்ளனர். அரசியல்வாதிகள் ஏழைகளாக இருக்கவேண்டுமென்ற கட்டாயம் எதுவுமில்லை. அவர்கள் அரசியலைவிட வேறு துறைகளிலும் தம்மை ஈடுபடுத்திப் பணத்தைச் சம்பாதிக்க முடியும். இங்குள்ள அரசியல்வாதிகளில் பலர் இவ்வாறானதொரு நிலை யில்தான் தற்போது உள்ளனர். ஆனால் இவர்கள் சம்பாதிக்கும் சொத்துக்கள் நேர்மையான வழிகளில் சம்பாதிக்கப்பட வேண்டியது முக்கியமானதாகும்.

**நாட்டின் ஒவ்வொரு பிரசையும் கடனாளியே**

நாடு தற்பொழுது மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றது. ஒவ்வொரு இலங்கைக் குடிமகனின் தலையிலும் 4 இலட்சம்ரூபாகடன்சுமைசுமத்தப்பட்டுள்ளதாகக்கூறப்படுகின்றது. இந்தக்கடன்களை வட்டியுடன் சேர்த்து மீளச்செலுத்தி முடிக்க பலஆண்டுகள்ஆகுமெனக் கணக்கிடப்பட்டுள்ளது. அதற்குள் மேலும் கடன்கள் பெறப்பட்டுவிடும். இதனால் நாடு ஒரு நிரந்தரமான கடனாளியாகவே மாறிவிடப் போகின்றது.

இந்த நிலையில், அரசியல்வாதிகளிடம் பெரும் சொத்துக் குவிந்திருப்பது ஆச்சரியத்தைஅளிக்கின்றது. ஊழலுக்குப்பெயர் பெற்றஇந்தியாவில்கூட, வருமானத்துக்கு மிஞ்சிய வகையில் சொத்துக்களைச் சேர்த்த அரசியல்வாதிகளில் பலர் சிறைத் தண்டனைக்குஆளாகியுள்ளதுடன், அவர்களது மேலதிகச்சொத்துக்களும்நீதிமன்ற உத்தரவின்பிரகாரம்பறிமுதல்செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சரான ஜெயலலிதாவும் இத்தகையதொரு நிலைக்குத் தள்ளப்பட்டார். ஊழல் புரிந்த வேறு பல இந்திய அரசியல்வாதிகளுக்கும் இதே நிலை ஏற்பட்டது. ஆனால் எமது நாட்டைப் பொறுத்தவரையில் அரசியல்வாதிகள் புரிகின்ற ஊழலும், மோசடிகளும்சாதாரணவிடயங்களாகமாறிவிட்டன.

**ஊழல் வழிகளில் சொத்துச் சேர்த்தவர்களாக அரசியல்வாதிகள் நிரூபிக்கப்பட்டால் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்களே**

முன்னாள் அரச தலைவரான மகிந்த ராஜபக்ச பெரும் ஊழல் மோசடிகளைப் புரிந்து பெருமளவு அரச நிதியை மோசடி செய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. இவரால் மோசடிசெய்யப்பட்ட நிதிதிருப்பப்பெறப்படுமானால்நாட்டின்பொருளாதாரநிலைமை ஓரளவுசீராகுமெனக்கூறப்பட்டது. ஆனால் இது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத்தெரியவில்லை. மகிந்த மட்டுமல்ல, அவரைச் சேர்ந்தவர்கள்புரிந்ததாகக்கூறப்படும் ஊழல் மோசடிகள் குறித்த குற்றச்சாட்டுக்கள் கிடப்பில் போடப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. இவர்கள் போன்று வேறுபலரும் இத்தகைய குற்றங்களைப் புரிவதற்கான வாய்ப்புக்கள் நிறையவே உள்ளன. ஆனால் அவர்களுக்கு எதுவுமே நடக்காது என்பதை உறுதியாகக் கூறமுடியும். ஏனென்றால் இந்தநாடுமுழுவதும்ஊழல்மோசடியாளர்களுக்குச் சார்பானதாகவே மாறிவிட்டது. நல்லாட்சிஅரசுபெயருக்குஏற்பநீதியாகவும், நேர்மையாகவும் செயற்படுமேயானால், முதலில் இந்தப் பத்து அரசியல்வாதிகளின் சொத்துக்கள் தொடர்பான உண்மைத்தன்மையை உரிய உயரதிகாரிகள் மூலமாக நேர்மையாக ஆராய்ந்து பொதுமக்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

இதில் ஏதாவது மோசடி இடம் பெற்றிருக்குமானால், எதுவித தயக்கமுமின்றிக் குற்றஞ்சாட்டப்படுவோருக்கு எதிராக நீதி விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும். ஊழல் மோசடிகள் மூலமாக இவர்கள் சொத்துக் குவித்தமை நிரூபிக்கப்படுமானால், அந்தச்சொத்துக்கள்யாவும்அரசுடமையாக்கப்பட வேண்டும்.

வறுமையான நிலையிலுள்ள நாட்டில் ஒரு சிலர்மட்டுமேபெருமளவுசொத்துக்களைக் கொண்டிருப்பது ஏற்புடையதல்ல. இதை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது. நாட்டிலுள்ள வறிய மக்கள் மேன்மேலும் பரிதாபமான நிலையை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அரசியல்வாதிகளில்சிலர் ஏதோ ஒருவகையில் பெரும் கோடீஸ்வரர்களாக மாறிக் கொண்டிருக்கின்றனர். இந்த நிலை தொடருமேயானால் நாடு நரகமாக மாறும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

மகிந்தவால் மோசடி செய்யப்பட்ட நிதி திருப்பப் பெறப்படுமானால் நாட்டின் பொருளாதார நிலைமை ஓரளவு சீராகுமெனக் கூறப்பட்டது. ஆனால் இது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. மகிந்த மட்டுமல்ல அவரைச் சேர்ந்தவர்கள் புரிந்ததாகக் கூறப்படும் ஊழல் மோசடிகளும் கிடப்பில் போடப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.



## ஆசிரியருக்கான கடிதம்

### இளமையிற் கல்வி சிலையிலெழுத்து

இளமையிற் கல்வி சிலையிலெழுத்து என்றொரு முதுமொழி தமிழில் வழக்கில் உள்ளது. இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் எம்மவர்களில் ஏராளமானோர் ஆங்கில மொழியை ஆர்வத்துடன் கற்றதால் இலங்கையின் அரச சேவையின் பல துறைகளிலும் எம்மவர்களால் உயர் பதவிகளை வகிக்க முடிந்தமை வரலாறு.

இதனால் ஏற்பட்ட காழ்ப்புணர்ச்சியிலாலோ, அரசியல் அதிகாரப் போட்டிகளின் காரணத்தாலோ நாட்டில் சிங்களமொழி அரச கரும மொழியாக்கப்பட்டதால், எம்மவர்கள் தரப்பு பெருமளவில் பாதிப்புக்கு உள்ளானமையும் வரலாற்றுப் பதிவுகள்.

உலகப் பொதுமொழியான ஆங்கிலம் உலகளாவிய ரீதியில் தொடர்பு மொழியாகப்பிரசித்திபெற்றுள்ளதால், இனிவரும்காலங்களில்ஆண்டு ஒன்றில் பள்ளிப்படிப்பை ஆரம்பிக்கும் மாணவர்களில் ஆரம்பித்து ஆங்கில மொழியைக் கற்பிக்க அரசு மேற்கொண்டுள்ள திட்டம் எமது எதிர்காலச்சந்ததியினருக்குப்பெரும்வரப்பிரசாதமாக அமையும். அந்த வகையில் அரசின் குறித்த முயற்சி பாராட்டப்பட வேண்டியதொன்றே.

க. அம்பலவாணர், கைதடி.

### பல அத்தியாவசிய தேவைகள் நிலவும் வவுனியா மாவட்டச் செயலகத்தில் சர்வமத நிலையம் அவசியம்தானா?

வவுனியா மாவட்டச் செயலகத்தில் இயங்கும் பல திணைக்களங்களின் உட்கட்டமைவு புனரமைப்பின்றிக்காணப்படுகின்றது. பொதுமக்களுக்கானமலசலகூடம்பாழடைந்தநிலையில் காணப்படுகின்றது. செயலக ஊழியர்களுக்கு வாகனங்களை நிறுத்த, தரிப்பிட வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்படவில்லை. மழைவெள்ளம்வெளியேறுவதற்கானகால்வாய்கள்சரியாக முறையில் பேணப்படவில்லை. பல்வேறு தேவைப்பாடுகள் மாவட்ட செயலகத்திற்குள் உள்ள நிலையில், புதிய மாவட்டச் செயலரான விதான பத்திரன, அவசர அவசரமாக அனைத்து மதங்களையும் உள்ளடக்கிய சர்வ மத நிலையமொன்றை மாவட்டச் செயலகத்திற்குள் அமைப்பதற்கான உள்நோக்கம் என்னவென்று புரியவில்லை.

அத்துடன்மாவட்டச்செயலகத்தை அழகுபடுத்தும்திட்டமொன்று ஓய்வுபெற்றஇராணுவஅதிகாரி ஒருவரின் தலைமையில் ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட செயலகத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், பொதுமக்களுக்கான சர்வ மத நிலையமாக அமைந்தாலும், இன்றையஅவசர இயந்திரமயமானவாழ்வியலில்எதிர்பார்க்கப்படும்பயன்பாடு இதன் மூலம் எட்டப்பட முடியுமா? என்பது கேள்விக்குரியதொன்றே.

அ. வாசுதேவன், வவுனியா

# ஊக்கமே உயர்வு

சி.நற்குணலிங்கம்



ஊக்குவித்தல் எனப்படுவது ஒருசெயலைச் செய்யத்தூண்டும் ஓர் உந்து சக்தியாகும்: "மன ஊக்கம் உணர்வாகி செயலாக வெளிப்படுகிறது" என்கிறார் அறிஞர் வில்லியம் ஜேம்ஸ். சிறுவயது முதலே ஊக்குவித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். குழந்தைகளின் மனம் களைகள் அரும்பாத நல்ல நிலம். நல்ல விதைகளை விதைத்துப் பராமரித்தால் செழிப்பாக வளரும் அவர்கள் உலக வாழ்வில் காலடி எடுத்து வைக்க இருப்பவர்கள். அவர்களை ஊக்குவிப்பதன்மூலம் மனவலிமை பெற்று அதனை மூலதனமாகக் கொண்டு வாழ்வில் நிமிர்ந்து நிற்க முடியும் "தளராத இதயத்தைப் பெற்றவர்க்கு இந்த உலகில் முடியாதது என்பது எதுவுமில்லை" என்கிறார் கிரேஸில் எனும் அறிஞர். ஊக்குவிக்கப்படும் குழந்தைகள் உற்சாகமடைகின்றனர். உந்துதல்கள்தான் ஊக்குவித்தலின் காரணமாகும். ஊக்கமும், செயலும் ஒன்றாகவே பயணம் செய்கின்றன.

### ஊக்கம் இரண்டு வகைகள்

ஊக்கமானது நேரடியான ஊக்கம், மறைமுகமான ஊக்கம் என இரண்டாக வகைப்படுத்தப்பட்டு செயற்படுத்தப்படுகின்றது. நேரடியான ஊக்கமே சாதாரணமாக வழக்கத்தில் காணப்படுகிறது. இந்த முறையின் மூலமே உயர்வு கண்டவர்கள் பலர். பயஉணர்வை ஏற்படுத்துவதன் மூலம் செயலைச் செய்விப்பதாகவும் இது விரக்தியை உருவாக்கி இறுதி விளைவினையும் பாதிக்கும் என்பதாலேயே மறைமுக அணுகுமுறை முற்றாக தவிர்க்கப்பட வேண்டும். என்னால் முடியும் என்ற வைராக்கியத்தை மனதுக்கு ஊட்ட வேண்டும். மனதில் அவை உரமாக வேண்டும். நாம் வெற்றியாளர்களாக வளர முடியும் என்ற அபிப்பிராயம்தான் அவர்களது முதல் உந்துசக்தி. தன்னால் எதையும் சாதிக்க முடியும் என்று தனக்குத் தானே ஊக்குவிப்பைக் கொடுப்பதன் மூலமும் எதிர்காலம் ஒளிமயமாக மாறும். சுய ஊக்கம் உள்ளவனிடம் அனைத்தையும் வெற்றி கொள்ளக்கூடிய தன்மைகள் இருக்கும். ஊக்கம் மனிதனது வாழ்வின் உயிர்த்துடிப்பாகும். ஜப்பானியர்கள் ஒரு காரியத்தில் ஈடுபடுவதற்கு முன் 5 நிமிடங்கள் ஊக்கமளிக்க கூடிய உணர்வுகளை ஏற்படுத்தும் வழக்கம் உள்ளவர்கள். அது அந்த நாட்டு மக்களுக்கு மனவலிமையூடாக காரியம் சிறக்க உதவுகின்றது.

### தொடர்ச்சியான ஊக்கம் வெற்றிக்கான ஆரம்பம்

ஒரு செயலைத் தொடர, 'நோக்கி நகர ஊக்குவித்தல்' சிறந்த பொறிமுறையாகும். ஊக்கம் தொடர்ச்சியாக வழங்கப்படுவதன் ஊடாகவே தனிநபர் இலக்குகள் எட்டப்படுகின்றன. ஊக்குவிக்கப்படும் குழந்தை மனவலிமை பெறுகின்றது. மனவலிமைக்கு விஞ்ஞானி தோமஸ் அல்வா எடிசனைத் தவிர வேறு யாரை உதாரணமாகச் சொல்வது?. இவர்கள் போன்ற சாதனையாளர்களை பிள்ளைகளுக்கு கூறி வளர்க்க வேண்டும். அதன்மூலம் அவர்கள் ஊக்கமடைவார்கள். ஊக்கமளிக்கும் சந்தர்ப்பங்களில் உடலை வருத்தி, ஊன், ஊக்கமின்றி செயற்பட்டு வெற்றி காண முயல்வர். "சொந்த விதியைப் படைப்பவர்கள் நீங்கள்தான். உங்கள் எதிர்காலத்தை நீங்களே உண்டாக்கிக் கொள்ளுங்கள். எழுந்து நில்லுங்கள். ஊக்கத்தை கைவிடாதீர்கள்" என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

வெற்றிகள், சாதனைகள், உயர்வுகள், குறைந்த பெறுபேறுகள் என யாவற்றுக்கும் துணையாக ஊக்கம் விளங்குகின்றது. ஊக்குவிப்பானது வெகுமதியாக, பணமாக, சிறுபரிசாக, புன்னகையாக, பாராட்டாக, சான்றிதழாக என பல வடிவங்களில் வழங்கப்படுகிறது. புன்னகை தன்னம்பிக்கையை அதிகரிக்கும், மகிழ்ச்சியை வரவழைக்கும், கவலைகளை மங்கச்செய்யும், மன அழுத்தத்தைக் குறைக்கும் எனவே புன்னகையைப் பூட்டி வைக்கா தீர்கள். அதைக் கொடுத்து உயர்வைப்பெற உதவுங்கள். பாராட்டப்படும் போது வரும் சில வார்த்தைகள் மிகவும் சக்தி வாய்ந்தவை. நாம் அதில் கஞ்சத்தனம் காட்டக்கூடாது. இனங்கண்டு பாராட்டத் தயங்காதீர்கள். காலம் தாழ்த்தாது பாராட்டுங்கள். காலம் தாழ்த்திப் பாராட்டுவது சூடான உணவை ஆறிய பின் பரிமாறுவதற்குச் சமம். "ஒரு கலைஞனுக்கு உண்மையான பாராட்டு கைதட்டல்களே. வெற்றிகள் யாவும் ஒரு ஊக்கத்தின் அடிப்படையில்தான் ஆரம்பிக்கின்றன" என்கிறார் கர்னகி.

### ஊக்கமில்லாத வாழ்வானது உயிரற்ற உடல் போன்றதே

சுயமாக ஒருவன் சிந்தித்து வாழ்வில் உயர்ச்சியடைவதற்கு அவனிலுள்ள திறமைகள் அடையாளப்படுத்தப்பட்டு, அவன் தன் ஆற்றலை வெளிப்படுத்த ஊக்கப்படுத்தப்பட வேண்டும். அவன் முன்னேறுவதற்கு மேலும் ஊக்கியாக அறிவுரைகளும் ஆலோசனைகளும், வழிகாட்டல்களும் வழங்கப்படல் வேண்டும். பிள்ளைகளுக்கு முதல் ஆசான்கள் பெற்றோர்களே. தனது பிள்ளை எல்லாவற்றிலும் திறமையுள்ளவனாக வர வேண்டும். எனப் பெற்றோர் ஆசைப்படுவது இயல்பு. ஆசை நிறைவேற ஊக்கமது கைவிடேல் என்பதில் ஊக்கமாக இருக்க வேண்டும். ஊக்கம் இல்லையென்றால் வெற்றிபெற முடியாது. ஊக்கமிருந்தால் உன்னால் தோற்க முடியாது. உக்கமில்லாத வாழ்வு உயிரில்லாத உடலுக்கு ஒப்பானது.

பொறுத்த வேளைகளில் பொருத்தமான ஊக்கம் பெற்றோரால் வழங்கப்படாத காரணத்தால் இன்று சமூகம் சீரிழந்து காணப்படுகிறது. எங்கும் கலாச்சாரச் சீரழிவுகள். எதிர்காலம் சிறப்பாக இருக்க, வேண்டியவிடத்து பிள்ளைகளுக்குத் தேவையான அளவுக்கு ஊக்கத்தை அளியுங்கள். ஊக்குவிப்பதன் மூலம் பிள்ளையினது நடத்தைப் பாங்கினையும், எதிர்காலக் கல்வியின் வெற்றி வாய்ப்புக்களையும் ஒழுங்குக்கு கொண்டுவரக் கூடியதாக இருக்கும். ஊக்குவிப்பு, பிள்ளைகளின் இரண்டாம் நிலைப் பெற்றோராகக் காணப்படுகிறது. வாழ்க்கையில் நிம்மதியாக வாழ பகவத் கீதையில் கர்மயோகத்தில் நல்வழிகள் சொல்லப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டாவதாக, "நாம் செய்யும்காரியங்கள் மகிழ்ச்சியுடனும், ஊக்கத்துடனும்நன்கு செய்ய வேண்டும்" எனக் கூறப்பட்டுள்ளது. இதனைப் பின்பற்றுவதால் ஒருவன் செயலாற்றும் திறனை மனவலிமையுடன் பெற்றுக்கொள்ளமுடியும். அறவே முடியாது என எண்ணும் காரியங்களைக்கூட திரும்பத் திரும்ப ஊக்குவிப்பதன் மூலம் கட்டாயம் சாதிக்க முடியும். அரசியலாயினும் சரி, கல்வியாயினும் சரி, விளையாட்டாயினும் சரி, தொழில்சார் நடவடிக்கைகளாயினும் சரி தோல்விகள் கதவை மூடும்போது தொடர்ந்து ஊக்குவிப்புடன் கதவுகளைத் தட்டித் திறப்பதுதான் வெற்றிக்கான சாவி. பிள்ளைகளுக்கு நல்லதொரு வழித்தடத்தின்கீழ் பயணிப்பது எப்படி என்பதை பெற்றோர்தான் கற்றுக் கொடுக்க வேண்டும். மூளை வளர்ச்சியும், மனவளர்ச்சியும் துரிதமாக நிகழுவது இளம்பருவத்திலேயே.

## வரலாற்றில் இன்றைய தினம் 20.03.2018

1915 - பொதுச்சார்புக் கொள்கை அல்பிரட் ஜன்ஸ்டைனால் வெளியிடப்பட்டது.

1956 - பிரான்சிடமிருந்து டுனிசியா சுதந்திரம் பெற்றது.

2003 - ஈராக்கில் நிலைகொண்டிருந்தன ஆஸ்திரேலியா, போலந்து ஆகிய நாடுகளின் இராணுவத்துக்கு எதிராக அமெரிக்க இராணுவம் தனது தாக்குதல் நடவடிக்கையைத் தொடங்கியது.

2002 - வவுனியாவில் ஆயுதக் களஞ்சியம் தீயில் எரிந்து நாசம்.

2009 - வவுனியா அகதிகள் முகாம் நிலை தொடர்பில் இலங்கை ஆயர்கள் பேரவை கவலை தெரிவிப்பு

2017 - மகிழ்ச்சியான நாடுகள் வரிசையில் இலங்கைக்கு 120ஆவது இடம்.

2007 - உலகளாவிய ரீதியில் சிறுபான்மையினர் மீதான கொடுமைகள் இலங்கையில் உச்சம் என ஐ.நாவின் மனித உரிமைக் குழு வின் அறிக்கையில் தெரிவிப்பு.

**நாளை**

**21.03.2018**

புதன்கிழமை

**பங்குனி 07**

திதி: சதுர்த்தி பி.ப. 04.09 வரை
நட்சத்திரம்: பரணி மு.இ. 07.35 வரை
சுபநேரம்: 04.47–06.17 வரை
ராகுகாலம்: 12.17–01.47 வரை

பழைமை வாய்ந்த ஏழு தலைமுறைகளாக செய்து வரும்

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



01. ஆண்/பெண் வசியம்
02. பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும் படி செய்யமுடியும்.
03. வியாபார முன்னேற்றம்.
04. வீட்டில் ஒற்றுமை உண்டாக
05. போலியானவர்களிடம் ஏமாந்து விட்டீர்களா ?

Note: (உங்களால் நேரில் வரமுடியாவிட்டால் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

ஒருமுறை எம்மை வந்து சந்தித்துப் பாருங்கள் !!

ரெங்கசாமி காளியம்மா
மாத்தளை, கண்டி. அம்பத்தன்ன.
077 327 2302/ 076 466 4153



## வேலை வாய்ப்பு

- JCB இயந்திர இயக்குநர் (JCB Operator)
- மோட்டார் கிரேடர் இயக்குநர் (Motor Grader Operator)
- Excavator இயக்குநர்

தகுதியுள்ளவர்கள் தமது விண்ணப்பம் மற்றும் தகுதிச் சான்றிதழ்களுடன் உடனடியாக நேரில் வரவும்.

மனிதவள முகாமையாளர்,
இல.45, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
021 222 6239

(CS/6191)(11.17)



விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111



வைர விழாவில்

## நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும்

யா/ குட்டியப்புலம்
அ.த.க.பாடசாலை,
குட்டியப்புலம், வயாவிளான்



**தலைவர்**
திரு.வை.விஜயபாஸ்கர் (அதிபர்)

**பிரதம விருந்தினர்**
திரு.S.D. ஜயவீர
கட்டளை அதிகாரி
(இலங்கை விமானப்படை, பலாலி விமானத்தளம்)

**சிறப்பு விருந்தினர்**
திருமதி கென்றி தவமணி
(பாடசாலை நிறுவுனரின் பாரியார்)



அமரர் ஜோன் கென்றி
நிறுவுனர்

**நிகழ்வுகள்**
- வைரவிழா மலர் வெளியீடு
- நிறுவுனர் நினைவுப் பேருரை
- நிறுவுனர் தின பரிசளிப்பு விழாவும் கலை நிகழ்வுகளும்

காலம்
20.03.2018 (செவ்வாய்க்கிழமை)
நேரம்:- மாலை 4.30 மணி
இடம் :- பாடசாலை மண்டபம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
பாடசாலை சமூகம்



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
24 . 09 . 1947



மறைவு
31 . 03 . 2017

### திருமதி சரோஜினிதேவி கதிர்காமநாதன்

கல கலக்க கதை பேசி காந்தமென கவரும்
களங்கமில்லா உங்கள் அன்பு அனைவரின்
நெஞ்சங்களை கொள்ளை கொள்ளும்
வஞ்சமில்லா பாசமம்மா உங்கள் பாசம் – எம்
உள்ளமதில் வாழும் உன்னத தெய்வமம்மா நீங்கள்
வார்த்தைகள் தேடி அலைகின்றோம் – நாம்
உங்களைப் பிரிந்த வலி சொல்ல – அம்மா
உங்கள் அன்பில் அரவணைப்பில் இருந்து – நாம்
இன்னமும் மீளவில்லையம்மா – அம்மா
ஆயிரம் உறவுகள் வந்து ஆறுதல் கூறினாலும்
உங்கள் அன்பிற்கு இணையாகுமா?
கண்மணிகளை நீங்கள் தேடி
எம்மைவிட்டு நீங்கள் மீளாத்துயில் கொண்டபோது – நாம்
கொண்டவலி என்றும் ஆறாதம்மா
மரணம் என்பது மண்ணில் உள்ளோர்க்கே – நீங்கள்
மனதில் என்றென்றும் வாழும் தெய்வமம்மா!!!

என்றும் உங்கள் நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
ஜெயரட்ணம் பாலேந்திரன்

தோற்றம்
27.12.1946

மறைவு
10.04.2016

திதி:-
வளர்பக்க திருதியை
(20.03.2018)



ஈராண்டுகள் சென்றாலும் உங்கள் ஆடம்பரமில்லாத
அன்பான பேச்சும் செயலும் எல்லோர் மனதிலும் உங்களை இடம்பிடிக்க வைத்தது
நீங்கள் இல்லாத இல்லம் இன்று வெறிச்சோடிக் கிடக்கின்றது உங்கள்
எண்ணங்கள் யாவும் நாங்கள் நிறைவு செய்வோம் அப்பா!
உங்கள் அன்பு பிரணவன் இன்னும் உங்கள் கதை சொல்லி முடியவில்லை
முற்றத்தில் நின்ற சைக்கிள் வண்டி முடங்கி அறையினுள்
இரண்டு வருடங்கள் முடிந்தன எங்கள் இதயங்களில் வீற்றிருக்கும்
உங்கள் அன்பான நினைவுகள் ஒருபோதும் மாறாது அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
அம்மாளை வேண்டுகின்றோம்

உங்கள் பிரிவால் துயருறும் -மனைவி,
மகன்மார் - குமரன், நந்தன், பிரணவன்

(CS/14918)(11.17)

# உதயன்

விளம்பர தொடர்புகளுக்கு

advt@uthayan.com, 021 493 1111


## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு வாரம் 1451 | சீட்டிழுப்பு திகதி 19.03.2018

வெற்றி இலக்கங்கள்: 02 34 40 53 M

அடுத்த வியாழக்கிழமை ஜக்பொட் ரூ. 18, 406, 940/=

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

## Galaxy Star

வெற்றி வாரம் 245 / திகதி 18.03.2018

நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்: 01 40 43 52 55

அடுத்த ஞாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப் பொதி ரூ. 4,205,880/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>GS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்:3009 | திகதி:19.03.2018 | திங்கட்கிழமை | நீலம்

வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 08 18 55 68 R

போனஸ் இலக்கம்: 51

அடுத்த புதன்கிழமைக்கான ஜக்பொட்: 35,122,670/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 201

வர்ணம் : சிவப்பு

சீட்டிழுப்பு திகதி: 2018.03.19

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 59,861,690/-

வெற்றி இலக்கங்கள்: 22 36 51 62 J

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## கண்ணீர் அஞ்சலி




எமது கல்லூரியின் சிரேஷ்ட
விரிவுரையாளர்
**திரு. க. கமலநாதன்**
அவர்களின் பாசமிகு மாமனார்
**கணபதிப்பிள்ளை சரவணமுத்து**

19.03.2018 அன்று காலமானார். அவர்களின் இறப்புச் செய்திகேட்டு துயர் அடைகிறோம். அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சமூகம்,**
**கோப்பாய்.**

(CS 14942/15/17)

## கண்ணீர் அஞ்சலி



நல்லூர் பிரதேசசபையில்
கடமையாற்றும் உத்தியோகத்தர்
**சுவேந்திரன் (பீற்றர்)**
அவர்களின்
அன்புத் தந்தை
**பொன்னர் துரைராசா**
அவர்களின் மறைவினால்
துயரடையும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

**நல்லூர் பிரதேசசபை,**
**நலன்புரிச் சங்கம்**

(CS/14922)(11.17)

## கண்ணீர் அஞ்சலி



எமது சக உத்தியோகத்தர்
த.மதுசன் (சாரதி, மாகாணத் திறைசேரி)
அவர்களின் பாசமிகு தந்தையார்

அமரர்
**அண்ணாமலை தவராசா**

அவர்களின் பிரிவினால்
துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அவரது ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்...

- ஊழியர் நலன்புரிச் சங்கம் -
மாகாணத் திறைசேரி, வடக்கு மாகாணம்

## சுழிபுரம் ஸ்ரீ வீரபத்திரர் உடனுறை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்

### வருடாந்த பொங்கல் விழா

மேற்படி ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா இன்று (20.03.2018) செவ்வாய் மாலை விளக்குவைத்தல் நிகழ்வுடன் ஆரம்பமாகும்.

**முதலாம் பொங்கல்** - 27.03.2018 காலை / மாலை

**இரண்டாம் பொங்கல்** - 03.04.2018 காலை / மாலை

கடைகள் வியாபார நோக்கங்களுக்காக எடுப்போர் 24.03.2018 மாலை 4.00 மணியளவில் ஆலய காரியாலயத்தில் தொடர்பு கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

— பரிபாலனசபை —

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 26 . 01 . 1938



உதிர்வு 20 . 03 . 2017

### திருமதி ஞானராஜா பூமணி

**உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம்**
**நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்– (யோ.வா: 11–25)**

அம்மா அன்பின் வடிவம் நீதானம்மா... எங்களை விழிநீர் சொரிய வைத்தீர்
நாம்படும் துயரை யாரறிவார்? மீண்டும் எங்களுடன் வந்திட வரம் கேட்கின்றோம்
இறப்போர் உயிர் பெறுவது உண்மையெனில்
மீண்டும் எங்களுடன் வந்திரும் எங்கள் தாயே.....


**432/6, மடம் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(CS/14897)(11,17)

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

பிறப்பு 18 . 09 . 1964



இறப்பு 18 . 03 . 2018

### சிவகுமார் துரைசிங்கம் (சிவா)

யாழ்.இருபாலையைப் பிறப்பிடமாகவும், நோர்வே Oslo வை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுமார் துரைசிங்கம் 18.03.2018 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரைசிங்கம் மற்றும் செங்கமலம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுவாமிநாதன் - பகவதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், சத்தியரூபியின் ஆருயிர்க் கணவரும், துஷாந், றபிஷா, சாருண் ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வேந்திரகுமார் (கனடா), ஜெயக்குமார் (டென்மார்க்), தவக்குமார் (இலங்கை), சசிகலா (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஞானேஸ்வரி (கனடா), சுகந்தி (டென்மார்க்), கவிதா (இராமநாதபுரம்), ஞானகுமாரன் (ஆசிரியர், இருதிடல் அ.த.க.பாடசாலை, கைதடி), ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நோர்வேயில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- **து.தவகுமார் (தம்பி),**
**சி.ஞானகுமாரன்**
(மைத்துனர்- ஆசிரியர்,
கலைவாணி கல்வி நிறுவகம், சிறுப்பிட்டி)

**சிறுப்பிட்டி வடக்கு,**
**நீர்வேலி.**

(CS/14925)(11.17)

**076 611 3102**


# ES Printers

அனைத்தும்
தனித்துவமான
கணினி வடிவமைப்புடன்




மக் பிரிண்ட் (MUG)
450/=




Books Binding




Banners

தொடர்புகளுக்கு,
021 492 7471,
021 492 7472
esprintersjaffna@gmail.com
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.




# நடிகர் சம்பத் இயக்குநராக அறிமுகம்



சமுத்திரக்கனி இயக்கத்தில் விஜயகாந்த் நடிப்பில் 2004 ஆம் ஆண்டில் வெளிவந்த 'நெறஞ்ச மனசு' படத்தின் மூலம் தனது சினிமா பயணத்தை தொடங்கியவர் நடிகர் சம்பத். 'பருத்திவீரன்', 'தாமிரபரணி', 'சென்னை 600028', 'சரோஜா', உள்ளிட்ட எண்பதுக்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். ரஜினிகாந்த் நடிப்பில் திரைக்கு வரவிருக்கும் 'காலா' திரைப்படத்தில் முக்கியமான கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார் சம்பத்.

இவற்றைத் தொடர்ந்து தற்போது இயக்குநராக அவதாரம் எடுத்துள்ளார். 'பச்சோந்தி' என்னும் குறும்படத்தை இயக்கியுள்ளார் சம்பத். அதில் சமூகத்தில் நடக்கும் ஆணாதிக்கம் பற்றியும், பெண்களை காட்சிப்பொருளாக நினைக்கும் ஆண்களைப் பற்றியும் பேசியுள்ளார்.




## நவிற்றல்

அஜ்மல் அரசை@ajmalnks
எல்லோரையும் இணைத்து விட்டு தனிமையில் நிற்கிறது செல்போன் டவர்

அஜ்மல் அரசை@ajmalnks
மேனேஜர் பதவியில் இருப்பவர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் தொப்பையோடும், சொட்டையோடுமே இருக்கின்றனர்.

அஜய் முருகேஷ்@ajay_aswa
தமது திறமையை பள்ளியில் நிரூபிப்பதை விட தாத்தா பாட்டிகளிடம் ஈசியாக நிரூபித்து வெற்றி பெற்றுவிடுகின்றனர் குழந்தைகள்

கோழியின் கிறுக்கல்!!@Kozhiyaar
இனிமேல் கிரிக்கெட் பார்ப்பதை விட்டு விட வேண்டும் என்ற எண்ணம் தோன்றும் ஒவ்வொரு முறையும், இது போல் ஏதாவது ஒன்றை நிகழ்த்தி பார்க்க வைத்து விடுகிறார்கள்!!

twitter

## மனிதனிடம் பக்தி கலக்கும்போது...

உணவு – பிரசாதமாகிறது
பட்டினி – விரதமாகிறது
தண்ணீர் – தீர்த்தமாகிறது
இசை – கீர்த்தனையாகிறது
இதயம்– கோவிலாகிறது
செயல் – சேவையாகிறது
பயணம்– யாத்திரையாகிறது
மனிதன் – புனிதனாகிறான்

Janakan Sivagnanam
11 hrs

இலங்கையின் சுதந்திரம் தமிழரால் தான் கிடைத்தது என்பதை தமிழனை வைத்தே நிரூபித்த இந்திய அணியை எப்படிப் பாராட்டலாம்.... ஆயிரம் முத்தங்கள் கார்த்திக், சுந்தர், சங்கர். தமிழன்டா எந்நாளும்....

வாழ்க்கையில தோல்வியை
மட்டுமே சந்திச்சு
பழக்கப்பட்டவனுக்கு டினேஷ்
கார்த்திக்கைப் பார்த்து
பெரிய நம்பிக்கை வரும்.



நேர்மையா உழைச்சிட்டு
இருப்போம். எண்டைக்காவது
ஒருநாள் எமக்குரியதா மாறும்




**மேடம்:** சிலரது பேச்சால் சங்கடத்துக்கு ஆளாவீர்கள். எவருக்கும் தகுதிக்கு மீறிய வாக்குறுதி வழங்க வேண்டாம். தொழிலில் மிதமான இலாபம் கிடைக்கும்.

**இடபம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்ப்பு எளிதில் நிறைவேறும். பிள்ளைகள் விரும்பிய பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள்.

**மிதுனம்:** குடும்பத்தினரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் விரிவாக்க பணியை மேற்காள்வீர்கள். இலாபம் சீராக இருக்கும்.

**கடகம்:** எதிரியிடம் கூட பெருந்தன்மையுடன் நடப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். பணியாளர்கள் பணிச்சுமையை திறம்படச் சமாளிப்பர்.

**சிங்கம்:** பிறரது புகழ்ச்சியான பேச்சில் மயங்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இருக்கின்ற குளறுபடியை சரி செய்வது நல்லது. இலாபம் மிதமாக இருக்கும்.

**கன்னி:** தாமதமான பணி நிறைவேற வாய்ப்புண்டாகும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப்பணி மேற்கொள்வீர்கள். எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும்.

**துலாம்:** அக்கறையுடன் சமூகப்பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் பணியிடத்தில் செல்வாக்குடன் திகழ்வர்.

**விருச்சிகம்:** தன்னம்பிக்கை மிக்கவராக திகழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் குறுக்கீடு வந்து சரியாகும். மிதமான வருமானம் கிடைக்கும். பிள்ளைகள் எதிர்காலம் குறித்து ஆலோசிப்பீர்கள்.

**தனுசு:** யாரிடமும் விவாதம் செய்ய வேண்டாம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி தாமதமாகும். இலாபம் சுமார். பணியாளர்கள் பணிச்சுமையால் அவதிப்படுவர்.

**மகரம்:** எதிரிகள் இடம் மாறிச் செல்வர். தொழில், வியாபார வளர்ச்சியால் புதிய சாதனை ஏற்படும். பணவரவு அதிகரிக்கும். நண்பருடன் விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**கும்பம்:** நிதானித்து பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் குறுக்கீடு வந்து விலகும். இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் சகஊழியர்களின் ஒத்துழைப்பை பெறுவர்.

**மீனம்:** மனதில் உற்சாகம் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பணி திருப்திகரமாக நிறைவேறும். பணியாளர்கள் நிர்வாகத்தின் ஆதரவால் முன்னேறுவர்.

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1 | | 9 | | | |
| | 9 | 6 | | 8 | | 5 | 1 | |
| 8 | | | | | | | | 2 |
| | | 4 | 5 | | 8 | 7 | | |
| | | | 7 | | 1 | | | |
| | | 5 | 3 | | 2 | 8 | | |
| 5 | | | | | | | | 6 |
| | 3 | 1 | | 2 | | 4 | 7 | |
| | | | 9 | | 3 | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 8 | 5 | 2 | 1 | 7 | 3 | 9 | 6 |
| 9 | 7 | 3 | 8 | 4 | 6 | 1 | 2 | 5 |
| 2 | 1 | 6 | 3 | 9 | 5 | 7 | 4 | 8 |
| 1 | 6 | 9 | 4 | 5 | 3 | 2 | 8 | 7 |
| 3 | 4 | 2 | 6 | 7 | 8 | 9 | 5 | 1 |
| 8 | 5 | 7 | 9 | 2 | 1 | 4 | 6 | 3 |
| 7 | 9 | 1 | 5 | 8 | 4 | 6 | 3 | 2 |
| 5 | 3 | 4 | 1 | 6 | 2 | 8 | 7 | 9 |

நேற்றைய விடை

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. [உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கி றார்கள்]. இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

# நரி அமைத்த தோட்டம்



முனியாண்டி என்றொரு விவசாயி இருந்தான். அவனிடம் நரி ஒன்று வந்தது. "ஐயா! உங்கள் நிலத்தில் வெள்ளரித்தோட்டம் ஒன்றை அமைக்கிறேன். கடுமையாக உழைக்கிறேன். கிடைக்கும் விளைச்சலை ஆளுக்குப் பாதியாக வைத்துக்கொள்ளலாம்"என்றது. விவசாயியும் ஒப்புக்கொண்டான். நரி அந்த நிலத்தில் ஒரு வெள்ளரித்தோட்டம் அமைத்தது. சில காலத்திலே தோட்டத்தில் நல்ல விளைச்சல் கிடைத்தது. ஆனால் முனியாண்டிக்குப் பங்கு கொடுக்க நரிக்கு விருப்பம் வரவில்லை. தானே நன்றாகத் தின்று கொழுத்தது.

தினமும் விவசாயியைச் சந்திக்க நரி செல்வதுண்டு. அப்போதெல்லாம் அவன் "நரியே! இன்னுமா வெள்ளரிப் பழம் பழுக்கவில்லை?" என்று கேட்டான் அதற்கு நரி "ஐயா அதற்குள் எப்படி பழுக்கும்! இப்போது தானே பூ பூக்கத் தொடங்கியுள்ளது"என்றது. அடுத்த முறை நரி சென்ற போது .அதே கேள்விகளையே விவசாயி கேட்டான்.

"ஐயா: இப்போது தானே பிஞ்சு விடத் தொடங்கியுள்ளது"என்றது நரி. இப்படி தொடர்ந்து ஏமாற்றிக் கொண்டிருந்த நரிமேல் விவசாயி சந்தேகம் கொண்டான். நரியின் வெள்ளரித் தோட்டம் எப்படி இருக்கிறது என்று அறிய தோட்டத்துக்கு கிளம்பிச் சென்றான். தோட்டத்தை நெருங்கினான். ஏராளமான நரிகளின் நடமாட்டம் தெரிந்தது. "ஆம் தோட்டம் அமைத்த நரி எல்லா நரிகளுக்கும் விருந்து வைத்துக்கொண்டிருந்தது. நரியோ "தோழர்களே! இது நான் அமைத்த தோட்டம்தான். ஒரு வெள்ளரிப் பழத்தையும் விட்டு வைக்காதீர்கள். எல்லாவற்றையும் தின்று தீருங்கள். அதுவே எனக்குப் பெருமை"என்றது.

எல்லா நரிகளும் தோட்டத்தை நாசம் செய்தன. ஒரு பழத்தையும் விடாமல் தின்று தீர்த்தன. அதையெல்லாம் பார்த்த முனியாண்டியின் கண்கள் கலங்கின.

விவசாயி தன்னை ஏமாற்றிய நரிக்கு நல்ல பாடம் புகட்ட வேண்டும் என மனதுக்குள் நினைத்துக்கொண்டான். நரிகள் எல்லாம் சென்றுவிட்டன. முனியாண்டி ஒரு வெள்ளரிப்பழம் ஒன்றைக் கடையில் வாங்கி வந்தான். அதைப்பிளந்து ஒரு கூர்மையான கத்தியை அதனுள்ளே வைத்தான். பின்னர் முழுப்பழம் போலவே சரி செய்தான். தோட்டத்துக்குச் சென்று அந்தப் பழத்தை ஒரு வெள்ளரிச் செடியில் சொருகி வைத்தான்.

மறுநாள் நரி தோட்டத்துக்கு வந்தது. வெள்ளரிப்பழம் ஏதாவது இருக்கிறதா?என்றுதோட்டம் முழுவதும் சுற்றியலைந்தது.

விவசாயி வெள்ளரிக் கொடியில் சொருகி வைத்த வெள்ளரிப்பழம் அதன் கண்ணில்பட்டது. விரைந்து அதைப்பறித்து தின்னத்தொடங்கியது. பசி மயக்கத்தில் பழத்தை ஆராய அதற்கு நேரம் இருக்கவில்லை. வெள்ளரிப்பழத்துக்குள் இருந்த கத்தி நரியின் தொண்டையைக் கிழித்தது. அலறியபடியே ஓடியது நரி. அது குருதி சிந்தி இறந்து போனது. மறுநாள் தோட்டத்துக்கு வந்த முனியாண்டி நரியைத் தூக்கி ஒரு மரத்துக்கு உரமாகப் புதைத்தான். பின்னர் தனக்குள் சொல்லிக்கொண்டான். "இனிமேல் எவரிடமும் ஏமாற மாட்டனே்" ஏமாறாதே! ஏமாற்றாதே!

# சிரி சிரி


ஆசிரியர் - கோழி ஏன் முட்டை போடுகிறது?

மாணவன் - ஏனென்றால் அதுக்கு 1.2.3 போடத் தெரியாது.

ஆசிரியர்- முட்டாளுக்கு அடி முட்டாளுக்கும் என்ன வித்தியாசம்?

மாணவன் - நாங்க்ள எல்லோரும் முட்டாள்கள் சேர். எங்களை அடிப்பதால் நீங்கள் அடி முட்டாள் சேர் சரியா?

ஆசிரியர்- ???



# நன்றியுரை

பாடசாலை இல்ல மெய் வல்லுநர் போட்டியின் இறுதியில், விளையாட்டின் தலைவர் நிகழ்த்திய நன்றியுரை,

பெரு மதிப்புக்குரிய அதிபர் அவர்களே, தலைமை விருந்தினர் அவர்களே, அவரது துணைவியார் அவர்களே ஆசிரியப் பெருமக்களே மற்றும் இங்கு வருகை தந்திருக்கும் பெரியோரே, பெற்றோரே பாடசாலையின் நலன் விரும்பிகளே அன்பான மாணவர்களே உங்கள் அனைவருக்கும் என் அன்பு வணக்கம்.

இன்று நிகழ்ந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியின் போது நீங்கள் காட்டிய ஆர்வத்தைப் பெரிதும் பாராட்டுகிறேன். போட்டிகளில் பங்கு பற்றிய அனைத்து மாணவர்களுக்கும் முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எமது அழைப்பை ஏற்று இந்தப் போட்டியின் போது தலைமை அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்த மதிப்புக்குரிய மாநகர சபை முதல்வர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகும். வெற்றியீட்டிய வீரர்கள் வீராங்க னைகளுக்கு பரிசில்களையும் வெற்றிக் கேடயங்களையும் கிண்ணங்களையும் வழங்கிக்கௌரவித்த தலைமை அதிதியின் துணைவியாருக்கும் எமது நன்றிகள்.

போட்டிகள் சிறப்புற நடைபெற சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய இல்ல ஆசிரியர்களும் இல்லத்தலைவர்களுக்கும் எம் நன்றி என்றும் உரியது.


போட்டிகள் யாவும் குறித்த நேரத்தில் ஒழுங்கின்படி நடைபெறுவதற்கும் போட்டி முடிவுகளை உடனுக்குடன் அறியத்தருவதற்கும் உறுதுணை புரிந்த நடுவர்களுக்கும் எமது நன்றிகள். மேலும் போட்டிகள் நடைபெறும் வேளைகளில் மாணவர்களின் ஒழுங்கு பேணுதலிலும் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் முன்னின்று உழைத்த மாணவத் தலைவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

எங்கள் பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி சிறப்பாக நிகழ்வதற்கு வழிவகுத்த எங்கள் அதிபர் அவர்களுக்கும் பரிசுப்பொருள்களை வழங்கி உதவிய பெரு மக்களுக்கும் என்றும் எமக்கு உற்ற துணையாக விளங்கும் பெற்றோர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்."

நன்றி வணக்கம்.


# யானை

தேர் ஒன்று மெல்ல அசைந்து
வருகுது நீயும் பாரம்மா
செவிகள் இரண்டும் அழகாய்
மேலே தெரியுது பாரம்மா
கருமேகத்தை நிறமாகக் கொண்டு
வருகுது பாரம்மா - அதன்
கழுத்தில் மணியொன்று கிலுகிலு
என்றது நீயும் கேளம்மா
நீண்ட தும்பிக்கையுடன்
பாரம் தூக்க
வருகுது பாரம்மா
நீரில் இறங்கி நீச்சலடிப்பதை
நீயும் பாரம்மா
உலக்கையைப் போன்று
உருண்டைக்கால்கள்
இருப்பதைப் பாரம்மா - அதன்
உதவியாலே எத்தனைவேலைகள்
செய்வதைப் பாரம்மா





# புள்ளிகளை இணைத்து படத்தை முழுமை செய்வோம்



# தன்னம்பிக்கை

பணக்கார இளைஞன் ஒருவன் விலையுயர்ந்த கார் ஒன்றுடன் பரதையில் நின்றிருந்தான். அப்போது ஏழைச் சிறுவன் ஒருவன் எட்டி நின்று அக்காரையே ஆசையுடன் பார்த்துக்கொண்டிருந்தான். இதனைக் கவனித்த அந்தக் காருக்குரிய இளைஞன் "இது என் அண்ணன் எனக்குப் பரிசளித்த கார்"என்று சிரித்துக்கொண்டே கூறினான். சிறுவன் முகத்தில் வியப்பு. உனக்கு அப்படி ஒரு அண்ணன் இருந்திருக்கலாமென்று ஆசைப்படுகிறாயா?" என்று அந்த இளைஞன் சிறுவனிடம் கேட்டான். உடனே அந்தச் சிறுவன் "இல்லை! அப்படியோர் அண்ணனாக நான் வளரவேண்டும் என்று விரும்புகிறேன்" என்றான்.



# இல்லாத நாடுகள்

1. திரையரங்குகள் இல்லாத நாடு - பூட்டான்
2. தினசரி பத்திரிகைகள் இல்லாத நாடு - காம்பியா
3. காகங்கள் இல்லாத நாடு - நியூசிலாந்து
4. புகை வண்டி இல்லாத நர்டு - ஆப்கானிஸ்தான்
5. பாம்புகள் இல்லாத நாடு - அயர்லாந்து
6. தலைநகரம் இல்லாத நாடு - நவ்ரு
7. தாய்மொழி இல்லாத நாடு - சுவிற்சர்லாந்து
8. பொதுக்கழிப்பறைகள் இல்லாத நாடு - பெரு
9. வாடகைக்கார்கள் இல்லாத நாடு - பெர்முடா

# தானியங்களின் உள்ளீடுகளுக்குரிய மரபுப் பெயர்கள்

1. அவரை - பருப்பு
2. உழுந்து - பருப்பு
3. நெல் - அரிசி
4. மாம்பழம் - சதை
5. கற்றாளை - சோறு
6. வாழைப் பழம் - சதை
7. திணை - அரிசி
8. பலா - சுளை

## தமிழ்த் தினப் போட்டிகள் தவணை ஆரம்பத்தில்

தென்மராட்சி.மார்ச் 20

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த் தினப் போட்டிகள் இரண்டாம் தவணை ஆரம்பத்தில் நடத்தவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் அறிவித்துள்ளார்.

வலயப் பாடசாலைகளில் இந்த வருட பாடசாலை நிலை தமிழ்த் திறன் போட்டிகள் முடிவ டைந்துள்ளதால் வலய நிலைப் போட்டிகளுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் பாடசாலைகளின் இரண்டாம் தவணை ஆரம்பத்தில் வலய நிலைப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன எனவும் தெரிவித்தார். (9)



வவுனியா சுந்தரபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் வெள்ளி விழா நிகழ்வு இன்று காலை 10 மணியளவில் அதிபர் சே.ஜேசுநேசன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் கலந்து கொண்டதுடன் விசேட விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந:சிவசக்தி ஆனந்தனும் சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண சபை உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம்,மற்றும் இ.இந்திரராஜா ,தெற்கு வலயக் கல்வி பணிப்பாளர் மு.ராதாகிருஸ்ணன் ,மற்றும் வடக்கு வலய பிரதிக் கல்வி பணிப்பாளர் மாலதி முகுந்தன் . முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர். விசேடமாக பாடசாலையின் வெள்ளி விழா மலரான தரிசனம் நூலும் வெளியிடப்பட்டது. (110)

## ஆங்கில...

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.

யாழ்ப்பாணம் புனித பாத்திரிசியார் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட தொழில்நுட்ப ஆய்வுகூடக் கட்டத் தொகுதி நேற்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் திறக்கப்பட்டது. அந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே வடக்கு மாகாண முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

குருநகர்ப் பகுதியில் இத்தாலிய ரோமன் கத்தோலிக்க திருச்சபையால் இந்தக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. ஆங்கிலக் கல்வி அறிவுடன் சேர்த்து கத்தோலிக்க மதப் பரம்பல்களை மேற்கொள்வதற்காக இங்கு வந்தவர்கள் கல்வி அறிவை மேம்படுவதற்காக பல பாடசாலைகளை அமைத்து ஆங்கில மொழி மூல கற்கை நெறிகளை உருவாக்கித் தந்தமை மகிழ்வுடன் நினைவுகூரப்படுகிறது.

தென்னிந்திய திருச்சபை மற்றும் அமெரிக்க திருச்சபைகளால் அமைக்கப்பட்ட பலதரப்பட்ட பாடசாலைகளே வடக்குத் தமிழ் மக்களை ஆங்கிலப் புலமையிலும் மற்றும் கல்வி கேள்வி அறிவுகளிலும் சிறந்து விளங்க வழி சமைத்தன என்றால் மிகையாகாது.

நாம் ஆங்கில மொழியிலும் கல்வியிலும் மேம்பட்டதாலேயே அப்போது அரசோச்சிய ஆங்கிலேயர் பல தமிழர்களை அரச சேவைக்குள் உள்ளீர்த்தனர்.

. அவர்கள் இலங்கையை விட்டு வெளியேறியதும் எமது ஆங்கிலப் புலமையையும் கல்வி அறிவையும் மழுங்கடிப்பதற்காக 1956ஆம் ஆண்டில் சட்டங்கள் கொண்டு வரப்பட்டன. தனித் தாய்மொழிக் கற்கையானது ஆங்கிலத்தை மறக்கச் செய்தது.

தாய்மொழிக் கற்கை முறைமை சிறப்பானதே. ஆனால் இடைத்தர நிலைகளிலிருந்து உயர் நிலைக் கல்விக் கூடங்களுக்கு மாணவ மாணவியர் செல்கின்ற போது ஆங்கிலக் கல்வியின் அத்தியாவசியம் உணரப்படுகின்றது. இன்றும் கூட கல்வி அறிவில் மிகவும் மேம்பட்ட பலர் ஆங்கில மொழித் தேர்ச்சி சிறப்பாக இல்லாமையால் தமது ஆற்றல்களை வெளிப்படுத்துவதில் சிரமமடைவதைக் காணும்போது மன வேதனை அடைகின்றேன்.

அன்று ஆங்கிலக்கல்வி இலங்கையிலுள்ள அனைத்து இனங்களையும் இன, மத வேறுபாடுகளின்றி இலங்கையர் என்ற ஒரு அடையாளத்தின் கீழ் இணைத்தது. அதேபோன்ற ஒரு நிலை மீண்டும் மலர வேண்டும். அதனாலேயே இணைப்பு மொழி என்று ஆங்கில மொழி ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஐக்கிய இலங்கைக்குள் அனைத்து இனங்களும் தத்தமது அடையாளங்களுடன் சுயமாகவும் சுதந்திரமாகவும் இயங்குவதற்கான ஒரு சூழ்நிலை உருவாக வேண்டும் என்றால் இணைப்பு மொழி கட்டாய பாடமாக்கப் பட வேண்டும்.

ஒன்பது மாகாணங்களும் ஒரு சமஷ்டி அமைப்புக்குள் அடங்க முன் வரவேண்டும். எமது தமிழ்ப் பேசும் மாணவ மாணவியர் ஒரு மொழியிலும் சிங்கள மாணவ மாணவியர் இன்னோர் மொழியிலும் பாண்டித்தியம் பெற்றால் அவர்களுக்குள் அன்னியோன்யமான கருத்துறவாடல்கள் குறைவாக இருக்கும். புரிந்துணராமையும் சந்தேகங்களுமே அவர்கள் உறவில் அதிகரிக்கும். கட்டாயமாக இணைப்பு மொழிப் பாண்டித்தியம் உருவாக அரசியல் தலைவர்களும் மதத் தலைவர்களும் அறிஞர்களும் இணைந்துகொண்டு இதய சுத்தியுடன் செயற்பட வேண்டும் – என்றார். (ற–8)

## த.தே.கூட்டமைப்பு...

ளுக்கான சத்தியப் பிரமாண நிகழ்வு இன்று பி.ப. 3 மணிக்கு வவுனியா கலாசார மண்டபத்தில், தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டத்தில் வெற்றி பெற்ற உறுப்பினர்களின் பதவியேற்பு நிகழ்வு இளங்கலைஞர் மண்டபத்தில் இன்று காலை 10.45 மணிக்கு நடைபெறவுள்ளது.(ற5,110)

## வடக்குப்...

பக் கட்டடத் தொகுதித் திறப்பு விழாவில் கலந்து கொள்வதற்காக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்று யாழ்ப்பாணம் வந்தார். அந்த நிகழ்விலேயே நியமனக் கடிதங்களும் வழங்கப்பட்டன.

"நாட்டில் வேலைதேடும் பட்டதாரிகள் அதிகம்பேர் உள்ளனர். தங்களுக்கு நியமனங்கள் வழங்க வேண்டும் என்று அவர்கள் பல போராட்டங்கள் நடத்துகின்றனர். அது அவர்களின் தவறு அல்ல. எமது கல்வி முறையிலும் பல தவறுகள் உள்ளன. அரசு என்கிற வகையில் அவற்றைத் திருத்தி வருகின்றோம். கல்வியை முடித்த இளையவர்கள் போராட்டம் நடத்தாத வகையில் அந்த மாற்றங்களை உருவாக்குகின்றோம். இங்குள்ள வேலை தேடும் பட்டதாரிகளுக்கு ஜப்பானில் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பில் அண்மையில் ஜப்பான் சென்றபோது ஆராய்ந்தேன். அங்கு விஞ்ஞான, தொழில்நுட்ப பட்டதாரிகளுக்கே அதிக வேலை வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

எமது கல்வியில் மாற்றத்தைக் கொண்டு வந்து உயர்தரத்தின் பின்னர் மாணவர்களைச் சரியான பாதையில் பயணிக்க வைக்க வேண்டும். விஞ்ஞான, தொழில்நுட்ப பட்டதாரிகளாக உருவாக்க முயற்சி எடுக்க வேண்டும்.

ஒரு தொகைப் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் ஓராண்டுப் பயிற்சி நிமித்தம் பணியாற்றுவர். பின்னர் அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் – என்றார். (ற–8)

## முன்னணி...

நாளை புதன்கிழமை மாலை 4 மணியளவில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் வி.மணிவண்ணன் தலைமையில் சத்தியப்பிரமாண நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ற5)

## காவலூர்...

தயினார் ஜெயகாந்தன் இன்று பதவியேற்கவுள்ளார். இதேவேளை வடக்கில் தவிசாளர் தலைமையில் ஆரம்பமாகக் கூடிய பூநகரி, புதுக்குடியிருப்பு சபைகளின் அமர்வுகள் இன்று நடைபெறாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் ஊர்காவற்றுறை, பூநகரி, புதுக்குடியிருப்பு, வவுனியா தெற்கு சிங்களப் பிரதேச சபை என்பவற்றில் அறுதிப் பெரும்பான்மையுடன் ஒரு கட்சி ஆட்சி அமைக்கக் கூடிய நிலை காணப்படுகின்றது. இந்தச் சபைகளுக்குரிய தவிசாளர் மற்றும் உப தவிசாளரது பெயர்களும் அரசிதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

இன்று தொடக்கம், தவிசாளர்கள் உள்ளூராட்சி சபைகளில் தமது கடமைகளைப் பொறுப்பேற்க முடியும். ஊர்காவற்றுறை பிரதேச சபையில் மாத்திரமே தவிசாளர் கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார். இந்தச் சபைகளின் அமர்வுகளை, தவிசாளர் சபையின் செயலருடன் கலந்துரையாடி, 4 வேலை நாள்களுக்கு முன்னதாக உறுப்பினர்களுக்கு அறிவித்து ஆரம்பிக்க முடியும். (ற–5,21,8)

45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



பிறப்பு 27.04.1992 இறப்பு 04.02.2018

அச்செழு, நீர்வேலியை பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட

தவநேசன் கபிலேசன்

கடந்த 04.02.2018 அன்று அமரத்துவம் அடைந்த தவநேசன் கபிலேசன் அவர்களின் மரணச்சடங்கில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் நேரில் வந்தும் தொலைபேசி மூலமாகவும் முகப்புத்தகம் மூலமாகவும் ஆறுதல் தெரிவித்த அனைத்து உறவுகளுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன் இன்று (20.03.2018) செவ்வாய்க்கிழமை இல்லத்தில் நடைபெறவிருக்கும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அச்செழு. நீர்வேலி. குடும்பத்தினர்.

சிவமயம்



புங்குடுதீவு மேற்கு

பெருங்காடு கிராஞ்சியம்பதி

ஸ்ரீமீனாட்சியம்பாள் சமேதர
சோமசுந்தரேஸ்வர சிவன் தேவஸ்தானம்
மஹோற்சவ விஞ்ஞாபனம் ஏவிளம்பி வருடம் - 2018

சிவநேயச் செல்வர்கள்

நிகழும் மங்களகரமான ஏவிளம்பி வருடம் பங்குனித்திங்கள் 7 ஆம் நாள் (21.03.2018) பரணி நட்சத்திரமும் கூடிய சுபதினத்தன்று பகல் 11 மணிக்கு துவஜாரோகணம் (கொடியேற்றம்) நடை-பெற்று அதனைத் தொடர்ந்து 10 தினங்களும் காலை மாலைத் திருவிழாக்கள் நடைபெறத் திருவருள் கூடியுள்ளதால் அடியார்கள் ஆசார சீலர்களாக வருகை தந்து தவறாது விழாக்களில் கலந்து எம் பெருமானை வழிபட்டு இஷ்டசித்திகளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

10 நாள்களும் இரவு 7.30 மணிக்கு சமய சொற்பொழிவு நடைபெறும்.

ஒழுங்கமைப்பு சமயஜோதி திரு. க. நிஜலிங்கம்

11 நாள்களும் அடியார்களுக்கு பகல் அன்னதானம் வழங்கப்படும்.

நிர்வாகசபையினர்.




139ஆவது ரோயல் தோமியன் (Battle of the Blues) துடுப்பாட்ட தொடருக்கான உத்தியோகபூர்வ வங்கி அனுசரணையை செலான் வங்கி வழங்கியது.
அனுசரணை காசோலையை செலான் வங்கியின் பணிப்பாளரும், முதன்மை நிறைவேற்று அதிகாரியுமான கபில ஆரியரட்ன, காப்பாளர் வண. மூர்க் பில்மோரா மற்றும் ரோயல் கல்லூரியின் அதிபர் பி.ஏ. அபேரட்ன ஆகியோரிடம் கையளித்தார்.
இந்த ஆட்டம் கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் கடந்த 8 ஆம், 9 ஆம் மற்றும் 10ஆம் திகதிகளில் இடம்பெற்றிருந்தது. (ஓ)

# 'கொழும்பு சிற்றி சென்ரர்' கூட்டுத் திட்டம் நடைமுறைக்கு

## 'அபான்ஸ்' மற்றும் 'சில்வர் நீடில் கொஸ்பிட்டாலிட்டி' நிறுவனங்களின் கூட்டு முயற்சியில் உருவாக்கம்

இந்தத் திட்டத்தில் உள்ள சிறப்புத் தன்மையின் காரணமாக சிங்கப்பூர் 'சி.எம்.ஓ ஏசியா' மூலம் 2017 ஆம் ஆண்டுக்கான 'வளர்ச்சியடைந்து வரும் கூட்டுத் திட்டம்' என்ற பன்னாட்டு விருது கிடைக்கப் பெற்றுள்ளது.

'அபான்ஸ் வியாபாரக் குழுமம் மற்றும் 'சில்வர் நீடில் கொஸ்பிட்டாலிட்டி' நிறுவனங்களின் கூட்டு முயற்சியில் 'கொழும்பு சிற்றி சென்ரர்' கூட்டுத் திட்டம் உருவாகிவருகிறது.


இந்தத் திட்டம் கொழும்பு நகரத்துக்கு அழகைச் சேர்ப்பதோடு, அழகிய பேய்ரே ஏரிக்கு அருகே, வணிகவீதியில் முக்கியமானதொரு இடத்தில் துரித கதியில் மிகப் பெரியளவில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இது அண்ணளவாக நில மட்டத்தில் இருந்து 110 மீற்றர் (360 அடிகள்) உயரத்தை கொண்டமைந்துள்ளது. கடந்த ஒக்ரோபர் மாத காலப்பகுதியில் இந்தத் திட்டத்தின் மூலம் 30 மாடிகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளதுடன், கட்டடத்தின் முழு உயரத்தில் 2/3 பகுதி நிறைவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாண்டின் நிறைவினுள் இந்தத் திட்டத்தின் சகல பணிகளையும் முழுமையாக நிறைவு செய்யவுள்ளதோடு, இதிலுள்ள 192 அதிசொகுசு வீடுகள், பன்னாட்டு தரங்களுக்கு அமைவாக உருவாக்கப்படவுள்ளன. பன்னாட்டு தரத்திலான விற்பனை நாமங்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் கொள்வனவு செய்யக்கூடிய கடைத்தொகுதிகள் மற்றும் வியாபாரிகளின் துறை சார் சந்திப்புக்கள், ஒன்று கூடல்கள் உள்ளிட்ட தொழில் சார் நிகழ்வுகளுக்கு சகல சலுகைகளையும் வழங்கிவரும் 'நெக்ஸ்ற்' ஹொட்டல் உள்ளிட்ட நவீன வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து அம்சங்களையும் இது உள்ளடக்கியுள்ளது.

வருகின்ற புது வருட காலத்தில் 'கொழும்பு சிற்றி சென்ரர்' கடைத்தொகுதிகள் மற்றும் 6 திரைகளைக் கொண்ட திரையரங்கம், 720 இருக்கைகளைக் கொண்ட உணவகம் மற்றும் 70 விற்பனை நாமங்களைக் கொண்ட கடைத்தொகுதிகள் இங்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன. இங்கு 'அபான்ஸ் ஆர்மெயின் எக்சேஞ்', 'அப்பிள்', 'மங்கோ' மற்றும் 'ஓடிள்' உள்ளிட்ட உள்நாட்டு மற்றும் பன்னாட்டளவிலான விற்பனை நாமங்களைக் கொண்ட கடைத்தொகுதிகளும் அமையவுள்ளன.

இது குறித்து கருத்துரைத்துள்ள கொழும்பு சிற்றி சென்ரர் கூட்டுத் திட்டத்தின் முதன்மை நிறைவேற்று அதிகாரி ஆனந்த் சுந்தரம், "கொழும்பு சிற்றி சென்ரர் திட்டத்தின் ஒரு பகுதியை எதிர்வரும் சித்திரைப் புது வருடகாலத்தில் ஆரம்பித்து வைப்பதற்கான பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன. கொழும்பு சிற்றி சென்ரர் கூட்டுத் திட்டத்தில் உருவாகிவரும் பன்னாட்டு தரத்துக்கமைவான கடைத்தொகுதிகள் அனைத்தும் நீண்ட நாள்களாக கொழும்பு நகரத்தின் தேவையாகவே இருந்து வந்துள்ளது. ஆனால் இப்போது அனைவரது கனவும் நனவாகும்



தருணம் உதயமாகியுள்ளது." - என்றார்.

மேலும் இந்தத்திட்டமானது, இலங்கையின் வணிக கேந்திர நிலையமாகப் போற்றப்படும் கொழும்பு நகரின் இதயப் பகுதியில் அமையப் பெற்றுள்ளது. இங்கு முதன்மை பாடசாலைகள், மருத்துவமனைகள், கடைத்தொகுதிகள், வரலாற்றுப் பெருமைமிக்க ஸ்தலங்கள் அமைந்துள்ளன. இதிலுள்ள வீடுகளின் விலை நிர்ணயம் கடந்த 2016ஆம் ஆண்டு தொடக்கம் 40 வீதத்தால் அதிகரித்துள்ளது. நீண்ட கால மற்றும் குறுகிய கால முதலீட்டாளர்களை அதிகம் ஈர்த்துள்ளது. (ஓ)

# வரிக்கு முந்திய இலாபமாக 19.718 பில்லியன் ரூபாவை கொமர்சல் வங்கி பெற்றுக்கொண்டுள்ளது

## மூன்றாவது காலாண்டில் கனிசமான வளர்ச்சியைப் பதிவிட்டுள்ளது

கொமர்ஷல் வங்கி, கடந்த 2017 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி முடிவடைந்த ஒன்பது மாத காலப்பகுதியில், நிதிச் சேவைகளுக்கான 'வற்' மற்றும் 'என்.பி.ரி' வரி என்பனவற்றுக்கு முன்பான இலாபமாக 19.718 பில்லியன் ரூபாவை பெற்றுக் கொண்டுள்ளது.

உறுதியான செயற்பாட்டு வருமானம் மற்றும் இறுக்கமான செலவுக் கட்டுப்பாடுகளிடையே இது 20.25 வீத வளர்ச்சியாகக் காணப்படுகிறது. வரிக்குப் பிந்திய இலாபம் 16.88 வீதத்தால் அதிகரித்து 16.232 பில்லியன்களாக உள்ளது.

நாட்டின் முக்கிய தனியார் வங்கி, கொழும்பு பங்குச்சந்தையில் தாக்கல் செய்துள்ள நிதி அறிக்கையிலேயே இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையில் கொமர்சல் வங்கி கடந்த நிதியாண்டின் காலாண்டு காலப்பகுதியில் நிதி சார்ந்து பெற்றுக்கொண்டுள்ள வளர்ச்சி குறித்து பல விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

குறிப்பாக, "கடன் புத்தக வளர்ச்சி 707.4 பில்லியன் ரூபாவாகவும், வைப்புக்கள் 818.6 பில்லியன் ரூபாவாகவும் காணப்படுகிறது. பங்குதாரர் நிதி முதற் தடவையாக 100 பில்லியனைத் தாண்டியுள்ளது. நடப்பாண்டின் முதல் ஒன்பது மாதகாலப்பகுதியில் வங்கியின் நேரடி வரிகள் 8.043 பில்லியன் ரூபாவாக பதிவிடப்பட்டுள்ளது. நிதிச் சேவைகள் மீதான 'வற்' வரி 11 வீதத்தில் இருந்து 15 வீதம் வரை அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த வளர்ச்சி பதிவாகியுள்ளது.

இந்த ஒன்பது மாத காலத்துக்குமான வரிக்குப் பிந்திய இலாபம் 15.01 வீதத்தால் அதிகரித்து 11.675 பில்லியன்களாக உள்ளது. குறிப்பிட்ட காலத்துக்கான மொத்த வருமானம் என்பது 84.568 பில்லியன்களாக காணப்படுகிறது. இது கடந்த 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியின் முதல் ஆறு மாத காலத்தை விடவும் 17.7000 பில்லியன் அல்லது 26.47 வீத வளர்ச்சியைக் காட்டுகின்றது.

வட்டி வருமானம் 30.03 வீதத்தால் அதிகரித்து 75.669 பில்லியன்களாக உள்ளது. வட்டிச் செலவுகள் 39.75 வீதத்தால் அதிகரித்து 47.427 பில்லியன்களாக உள்ளது. குறிப்பிட்ட காலப்பகுதியில் நிலையான வைப்புக்கு இருந்த அதிகரித்த கேள்வியே

இதற்குரிய முதன்மைக் காரணமாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் விளைவாக தேறிய வருமானம் 16.44 வீதத்தால் அதிகரித்து 28.242 பில்லியன்களாக காணப்படுகிறது. கட்டணங்கள் மற்றும் தரகு வருமானம் 28.67 வீதத்தால் அதிகரித்து 7.330 பில்லியன்களாக உள்ளது. இதன் விளைவாக தேறிய கட்டண மற்றும் தரகுப் பெறுமானங்கள் கணிசமான பங்களிப்பை வழங்கியுள்ளது. இது 29.03 வீதத்தால் அதிகரித்து 6.151 பில்லியன்களாக உள்ளது.

மூன்றாவது காலாண்டில் வங்கியின் செயற்பாடுகள் குறித்து கருத்து வெளியிட்டுள்ள கொமர்ஷல் வங்கியின் தலைவர் தர்மா தீரரத்ன,

"கடந்த ஆண்டின் குறிப்பிட்ட காலப்பகுதியை விட, வங்கிச் செலவுகளின் வளர்ச்சியை 6.88 வீதத்தால் மட்டுப்படுத்தியுள்ளளோம். கடந்த ஆண்டை விடவும் சிறிது அதிகரித்து செலவுப் பெறுமதியை, 949.114 மில்லியன்கள் அதிகமாகக் கொண்டுள்ளது." - என்றார்.

மேலும் இதுகுறித்து கருத்துரைத்துள்ள கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஜெகன் துரைரட்ணம்,

"எமது கடன் புத்தகத்தின் தரத்தை நாம் தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றோம். எமது 'என்.பி.ரி' விகிதாசாரத்தில் இது மேலும் குறைப்புக்கு வழி வகுக்கின்றது. அத்தோடு ஒட்டு மொத்த வர்த்தகப் பிரிவின் விரிவான வளர்ச்சியில் நாம் கவனம் செலுத்தி வருகின்றோம்." - என்றார். (ஓ)

> "வங்கியின் மூலதன நிதியம் 90 பில்லியனுக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது. கொமர்சல் வங்கியின், சொத்துக்கள் 8.57 வீதத்தால் அதிகரித்து கடந்த 2017 ஆம் ஆண்டின் ஒன்பது மாத காலமுடிவில் 1.099 ரில்லியன்களாக உள்ளது.


COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 0212221455

19/3/2018
www.cse.lk

பங்குச்சந்தைத் தகவல்கள்

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | -15.83 | 6,493.63 | 6,509.46 |
| S&P SL20 | -10.47 | 3,669.46 | 3,679.93 |
| வியாபாரப்புரள்வு | | 396,485,632 | 824,607,230 |
| உள்நாடு:- கொள்வனவு | | 153,471,168 | 246,430,944 |
| விற்பனை | | 211,564,000 | 358,069,920 |
| வெளிநாடு:-கொள்வனவு | | 243,014,464 | 578,176,320- |
| விற்பனை | | 184,921,632 | 466,537,344 |




| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| கொமர்சியல் வங்கி | COMB.N | 136.20 | 835,046 | 113,151,600 |
| டோக்கியோ சிமெண்ட் | TKYO.N | 54.00 | 1,036,133 | 55,954,854 |
| சம்பத் வங்கி | SAMP.N | 301.00 | 144,885 | 43,838,381 |
| கொமர்சியல் வங்கி | COMB.X | 107.90 | 342,436 | 36,966,168 |
| சன்ஷைன் ஹோல்டிங்ஸ் | SUN.N | 58.50 | 302,809 | 17,714,327 |
| ஹெமாஸ் பவர் | HPWR.N | 21.00 | 763,035 | 17,548,134 |
| சொ.ட்ப்ட்லொஜிக் ஹோல்டிங்ஸ் | SHL.N | 23.50 | 359,502 | 8,501,552 |
| றிச்சட் பீரிஸ் அன் கம்பனி | RICH.N | 12.50 | 439,406 | 5,494,729 |
| ஈஸ்ட் வெஸ்ட் ப்ரொபேர்ட்டிஸ் | EAST.N | 19.50 | 267,833 | 5,419,428 |
| ஹெய்லீஸ் | HAYL.N | 200.00 | 25,800 | 5,102,016 |

Educational Work shop
ஏப்ரல் 7ம் திகதி ஆரம்பமாகிறது
call or sms 0777 822 014 / 0777 105 205

| சந்தைக் குறிகாட்டிகள். | | |
|---|---|---|
| கம்பனிகள் | ↑ | 299 |
| பரிமாற்றத்தில் | ↑ | 241 |
| விலை உழைப்பு | ↓ | 11.1 |
| புத்தகப்பெறுமதி | ↓ | 1.3 |
| பங்குலாப விளைவு | ↓ | 3 |

# கருப்பட்டியின் மருத்துவக் குணம்!



பதநீரை காய்ச்சி அதிலிருந்து பெறப்படும் கருப்பட்டிக்கு சுவை, மணம் இருப்பதோடு மட்டுமல்லாமல், மருத்துவக் குணமும் அதிகம் இருக்கிறது. கருப்பட்டியை இனிப்புக்காக மட்டும் பயன்படுத்தவில்லை. ஏனெனில் இதில் இருக்கும் கூடுதலான மருத்துவத் தன்மையின் காரணமாக இதை இன்றும் கிராமங்களில் பயன்படுத்துகின்றனர்.

இயற்கையான முறையில் தயாரிக்கப்படும் கருப்பட்டியானது எமது உடலை சுத்தப்படுத்தி சமிபாட்டுக்கு உதவும். பருவம் அடைந்த பெண்களுக்கு கருப்பட்டியையும், உளுந்தையும் சேர்த்து உளுத்தங்களி செய்து கொடுத்தால் இடுப்பு எலும்புகள் வலுப்பெருவதுடன், கருப்பையும் ஆரோக்கியமாக இருக்கும். மாதவிடாய் காலத்தில் ஏற்படும் வயிற்று வலியை போக்க கருப்பட்டி சாப்பிடலாம்.

சீரகத்தை வறுத்து இஞ்சி மற்றும் கருப்பட்டி சேர்த்து சாப்பிட்டால், நன்கு பசி எடுக்கும். ஓமத்தை கருப்பட்டியுடன் சேர்த்துச் சாப்பிட்டால் வாயுத்தொல்லை நீங்கும். குப்பைமேனிக் கீரையுடன் கருப்பட்டியைச் சேர்த்து வதக்கிச் சாப்பிட்டால் வறட்டு இருமல், நாள்பட்ட சளித் தொல்லை நீங்கும்.

ஆண்மையை வீரியப்படுத்துவதிலும் கருப்பட்டிக்கு தனிப்பங்கு உண்டு. கோப்பியில் சீனிக்கு பதிலாக கருப்பட்டிப் போட்டுக் குடித்தால் உடலில் சக்கரையின் அளவு கட்டுப்பாடாக இருக்கும். சக்கரை நோயாளிகளும் கூட கருப்பட்டி கோப்பி குடிக்கலாம். இதில் சுண்ணாம்புச் சத்தும், நோய் எதிப்பு சக்தியும் அதிகமாக இருக்கிறது.

சக்கரை நோயாளிகள், கைக்குத்தல் அரிசி சோற்றுடன் கருப்பட்டியைக் கலந்து சாப்பிட்டு வந்தால். சக்கரையின் அளவு கட்டுப்பாட்டில் இருப்பதுடன், அடிக்கடி சிறுநீர் போவதும் குறையும். உடலுக்கு தேவையான ஆற்றலை தரக்கூடிய உணவாக கருப்பட்டி கருதப்படுகிறது.

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 1000 | 700 | 1000 |
| நண்டு | 400 | 500 | 500 | 200 |
| கணவாய் | 600 | 800 | 600 | – |
| பாரை | 500 | 650 | 600 | – |
| சுறா | 500 | 700 | 800 | – |
| சீலா | 300 | 450 | 500 | – |
| விளை | 400 | 450 | 500 | – |
| முரல் | 300 | 400 | 400 | – |
| கும்பிளா | 300 | 350 | 400 | – |
| கிளாக்கன் | 800 | 400 | 500 | – |
| ஓரா | 300 | 300 | 500 | – |
| திரளி | 200 | 200 | 200 | – |
| நகரை | 200 | 300 | 400 | – |
| சூடை | 100 | 180 | 120 | – |
| ஒட்டி | 100 | 250 | 250 | – |
| திருக்கை | 300 | 300 | 400 | 150 |
| மதனம் | 150 | 250 | 250 | – |
| கொய் | 100 | 100 | 80 | 100 |
| பாலை | 200 | 300 | 500 | – |
| வாளை | 150 | 350 | 300 | – |

# இளநரையைத் தடுக்க இலகுவான வழிகள்




வயது முதிர்வடையும் போது கறுத்த முடி வெளுப்படைவது இயல்பான ஒன்று. ஆனால் இன்று 20 வயதான இளைஞர்களுக்கு தலைமுடியானது வெளுத்து முதுமையான தோற்றத்தைத் தருகிறது. அதற்குக் காரணம் சத்தான உணவு இல்லாமை, உண்ணாமை, முறையான கூந்தல் பராமரிப்பின்மை மற்றும் மனக்கவலை என்று வல்லுநர்கள் கூறுகின்றனர். மேலும் உடலில் ஏற்படும் நாள்பட்ட நோய்களாலும் இளநரை ஏற்படுகிறது. அதிலும் குறிப்பாக அனீமியா, மூக்கடைப்பு, நீண்ட நாள் மலச்சிக்கல் போன்றவை ஏற்பட்டாலும் இளநரையானது ஏற்படும் என்றும் கூறுகின்றனர். இத்தகைய இளநரையை வீட்டிலிருந்தே போக்க எளிதான வழிகள் இருக்கின்றன.

1. நெல்லிக்காயை தினமும் ஒன்று என்று சாப்பிட்டு வர, எமது உடலில் நோய் எதிர்ப்பு பெருகும். மேலும் அதிலுள்ள விற்றமின் சி முடியை கருமையடையச் செய்யும்.
2. மருதாணி இலையை அரைத்து எண்ணெயில் போட்டு காய்ச்சி பூசி வந்தால், இளநரையானது விரைவில் நீங்கும்.
3. கறிவேப்பிலையை சமைக்கும் உணவில் அதிகம் சேர்த்து, அதனை சாப்பிட்டால் உடலில் இரும்புச்சத்து அதிகமாகி கூந்தலானது கருமைய்யாக வளரும்.
4. நான்கு கரண்டி மருதாணித் தூள், இரண்டு கரண்டி கோப்பி, ஒரு முட்டை, அரை கரண்டி ஆமணக்கு ஆகியவற்றை கலந்து, தலையில் நன்றாக தேய்த்து, ஒரு மணிநேரம் ஊற வைத்துப் பின் கூந்தலை குளிர்ந்த நீரில் அலசினால் இளநரையானது படிப்படியாகக் குறையும்.
5. கறிவேப்பிலையை தேங்காய் எண்ணெயுடன் சேர்த்து காய்ச்சி, கூந்தலுக்கு தடவி வந்தால் இளநரையானது வராமல் இருக்கும்.
6. வெள்ளைப் பூவான கரிசாலையை நன்கு காய வைத்து, அரைத்து தூளாக்கி ஒரு மாதம் இளநீரிலும், ஒரு மாதம் தேனிலும் கலந்து உண்ண வேண்டும். இதனால் இளநரை மாறும்.
7. தேங்காய் எண்ணெய் அல்லது பாதாம் எண்ணெயுடன் சிறிது எலுமிச்சை சாற்றை விட்டு கலந்து தலைக்கு பூசி நன்கு மசாஜ் செய்து, குளித்து வந்தால், இளநரையானது போகும்.

ஆகவே மேற்கூறிய இயற்கையான உணவினாலும், சரியான பராமரிப்பாலும் இளநரையை வராமலும், வந்த இளநரையை போகவும் செய்யலாம்.

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| கத்தரி | 40 | 80 | 50 | 50 | 80 |
| முள்ளங்கி | 60 | 50 | 30 | 60 | 30 |
| மரவள்ளி | 50 | 40 | 40 | 50 | 40 |
| பயிற்றை | 60 | 120 | 80 | 80 | 80 |
| பாகல் | 140 | 200 | 80 | 120 | 120 |
| க.கிழங்கு | 60 | 60 | 60 | 100 | 50 |
| பெ.வெங்காயம் | 180 | 140 | 90 | 80 | 80 |
| சி.வெங்காயம் | 140 | 150 | 120 | 140 | 120 |
| பூசணி | 40 | 50 | 50 | 50 | 40 |
| தக்காளி | 40 | 60 | 30 | 30 | 40 |
| வாழைக்காய் | 60 | 70 | 70 | 60 | 60 |
| கீரை | 30 | 30 | 30 | 15 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 30 | 30 | 30 |
| ப.மிளகாய் | 60 | 100 | 60 | 50 | 60 |
| புடோல் | 60 | 70 | 40 | 60 | 40 |
| கோவா | 60 | 70 | 50 | 50 | 40 |
| வெண்டி | 80 | 100 | 80 | 80 | 100 |
| போஞ்சி | 100 | 150 | 120 | 100 | 100 |
| லீக்ஸ் | 160 | 160 | 140 | 140 | 160 |
| தேங்காய் | 75 | 80 | 90 | 100 | 70 |
| உ.கிழங்கு | 70 | 70 | 70 | 80 | 80 |
| தேசிக்காய் | 80 | 40 | 70 | 40 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 35 | 20 | 10 |
| கறிமிளகாய் | 80 | 120 | 140 | 100 | 100 |
| கரட் | 100 | 130 | 80 | 120 | 80 |
| முருங்கைக்காய் | 400 | - | 500 | 300 | 650 |



## இது புதுசு

ஆண்களுக்கான ரீசேட் வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை ஆயிரத்து 400 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன..

# வெண் பொங்கல்

**தேவையான பொருள்கள்**

பச்சரிசி - 2 கோப்பை
மஞ்சள் தூள் - 1 கரண்டி
பாசிப்பருப்பு - 3/4 கோப்பை
உப்பு - தேவையான அளவு


**தாளிக்க**

நெய் - 1 மேசைக்கரண்டி
சீரகம் - 2 மேசைக்கரண்டி
முந்திரி - 10
மிளகு - 1 கரண்டி
கறிவேப்பிலை- பாதி கொத்து

**செய்முறை**

முதலில் பாசிப்பருப்பை வெறும் சட்டியில் சிவக்க வறுக்கவும். பிறகு கழுவி விட்டு ஒரு பாத்திரத்தில் போதிய தண்ணீர் விட்டு மஞ்சள் தூள் சேர்த்து வேக வைக்கவும்.

பருப்பு பாதி வெந்த நிலையில் அரிசியைக் கழுவி பருப்புடன் சேர்த்து ஒன்றுக்கு மூன்று என தண்ணீர் ஊற்றி நன்றாகக் குழைய வேக வைக்கவும். (ஏனெனில் பொங்கல், சோறு போல் இல்லாமல் கொஞ்சம் குழைய இருக்க வேண்டும்.



ஒரு முறை திறந்து கிளறி சிறிது மஞ்சள் தூள், உப்பு போட்டு சிறிது நேரம் மூடி வேக வைக்கவும். பருப்பு, சோறு இரண்டும் ஒன்றாகக் கலந்து குழைய வெந்த பிறகு அடுப்பிலிருந்து இறக்கவும்.

ஒரு சட்டியில் நெய் எடுத்து சூடுபடுத்தி அதில் மிளகு, சீரகம், இஞ்சி, முந்திரி, கறிவேப்பிலை தாளித்து பொங்கலில் கொட்டிக் கிளறவும்.

அல்லது தாளித்த பிறகு பொங்கலை சட்டியில் கொட்டிக் கிளறி இறக்கலாம்.

# இந்தியாவின் வெற்றியை கொண்டாடிய இலங்கை

## இந்தியாவுக்கு வெளியில் நிற்கிறோம் என்ற உணர்வு சிறிதும் ஏற்படவில்லை என்று ரோகித் பெருமிதம்



இலங்கையின் 70ஆவது சுதந்திரக் கிண்ணத் தொடரை முன்னிட்டு நடத்தப்பட்ட முத்தரப்பு ரி-20 தொடரில், இந்திய அணி கிண்ணம் வென்றதை எக்கச்சக்கமாக கொண்டாடித் தீர்த்தனர் இலங்கை இரசிகர்கள். "இந்திய அணிக்குக் கிடைத்த ஆதரவு அபாரமானது. இந்தியாவுக்கு வெளியில் நிற்கிறோம் என்ற உணர்வு எமக்கு ஏற்படவில்லை" என்று தெரிவித்தார் இந்திய அணியின் தலைவர் ரோகித்.


கிரிக்கெட்டைப் பொறுத்த வரையில் இலங்கை இரசிகர்கள் இந்திய அணிக்கு தமது ஆதரவைக் கொடுப்பதென்பது அரிதிலும் அரிது. இன்னும் சொல்லப் போனால் இந்திய அணியின் தோல்விகளை இரசிப்பவர்களாகவே இலங்கை இரசிகர்கள் இதுவரை இருந்து வந்தனர். ஆனால் அத்தனையையும் மாற்றிப்போட்டுள்ளது பங்களாதேஷ் வீரர்களின் 'பாம்பு டான்ஸ்'.

இலங்கைக்கு எதிரான இரண்டாவது லீக் ஆட்டத்தில் வெற்றிபெற்று இலங்கை அணி வெளியேற முக்கிய காரணமாக அமைந்தது பங்களாதேஷ். பங்களாதேஷ் வீரர்களின் கொண்டாட்டங்கள் அருவருக்கத்தக்க வகையில் அமைந்திருந்தன. பங்களாதேஷ் வீரர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட ஓய்வறையின் கண்ணாடியும் உடைக்கப்பட்டது. இவை அனைத்தும் பங்களாதேஷ் அணிக்கு இலங்கை இரசிகர்கள் மத்தியில் மிகப்பெரும் அவப்பெயரைச் சம்பாதித்துக் கொடுத்தது. இதனால் இலங்கை இரசிகர்களுக்கு, பங்களாதேஷ்அணியின் மீதிருந்த எதிர்ப்பு இந்திய அணிக்கான ஆதரவாக மாற்றம் பெற்றது. இதையடுத்து நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் இந்திய அணி வெற்றிபெற்றதை அடுத்து இலங்கை இரசிகர்கள் தமது எல்லையற்ற ஆரவாரத்தை வெளிப்படுத்தினர். இலங்கை இரசிகர்களின் ஆதரவை வெகுவாக மெச்சியுள்ளார் இந்திய அணியின் தலைவர் ரோகித்.

அதேநேரம் இலங்கை இரசிகர்களின் ஆதரவு தமக்குத் தேவையற்றது என்ற விதமாக கருத்துத் தெரிவித்துள்ளார் பங்களாதேஷ் அணியின் தலைவர் சகிப் அல் ஹசன்.

"வெளிநாட்டு இரசிகர்களின் ஆதரவை நாங்கள் எதிர்பார்ப்பதில்லை. அதில் நாங்கள் கவனம் செலுத்தவில்லை. ஆதரவு அளித்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஆனால் இப்படியெல்லாம் நடக்கும். யார் யாரை ஆதரிக்கிறார்கள் என்பது பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. களத்தில் நல்ல கிரிக்கெட்டை ஆட வேண்டும் என்பதுதான் எங்கள் நோக்கம்" என்று சகிப் அல் ஹசன் மேலும் தெரிவித்தார்.

(ம)



## மும்பை இந்தியன்ஸில் மீண்டும் மக்கலினகன்

நடப்பு வருட ஐ.பி.எல். தொடருக்கான மும்பை இந்தியன்ஸ் அணியில் மக்கெலினகன் சேர்க்கப்பட்டுள்ளார்.

நடப்பு வருட ஐ.பி.எல். தொடர் எதிர்வரும் 7ஆம் திகதி ஆரம்பமாகிறது. இந்தத் தொடருக்கான மும்பை அணியில் இடம்பிடித்திருந்த ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் ஜேசன் காயம் காரணமாக விலகியதை அடுத்து அவரின் இடத்துக்கு மக்கெலினகன் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

கடந்த வருடம் முப்பை அணிக்காகவே மக்கெலினகன் விளையாடினார். ஆனால் நடப்பு வருடத்தில் எந்த அணியாலும் அவர் ஏலத்தில் எடுக்கப்படவில்லை. இதையடுத்து ஜேசனுக்குப் பதில் வீரராக அவர் மும்பை அணியில் சேர்க்கப்பட்டார்.

(ம)

## எதையும் சந்திக்க தயாராக இருந்தார்

### கார்த்திக் தொடர்பில் ரோகித் வெளிப்படை

"பங்களாதேஷுக்கு எதிரான இறுதியாட்டத்தில், டினேஸ் கார்த்திக் திட்டமிட்டே பின்வரிசையில் களமிறக்கப்பட்டார்" என்று தெரிவித்தார் இந்திய அணியின் தலைவர் ரோகித். ஆட்டம் முடிந்த பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே ரோகித் இவ்வாறு தெரிவித்தார்.

"தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடருக்கு டினேஸ் கார்த்திக் தெரிவு செய்யப்பட்டிருந்தார். எனினும், அவருக்கு வாய்ப்புகள் கிடைக்கவில்லை. ஆனால், இன்று அவரின் ஆட்டம் அனைவருக்கும் மிகப்பெரிய நம்பிக்கையை அவர் மீது அளித்து, அவரை அடுத்த கட்டத்துக்கு அழைத்துச் சென்றுள்ளது. டினேஸ் கார்த்திக்கைப் பொறுத்தவரை முக்கியமான விடயம், அவர் அதிகமான தன்னம்பிக்கையை உடையவராக இருக்கிறார். எந்தச் சூழ்நிலை வந்தாலும், அதை எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறார். இறுதியாட்டத்தின் போது, தான் மூன்றாவது வரிசையில் களமிறங்கவில்லை என்று அவர் என்னிடம் தெரிவித்தார். அவரின் முடிவை மதித்து 7ஆவது வீரராக களமிறக்கினேன். கடைசிக்கட்ட அதிரடிக்குத் தகுதியானவர் அவர் என்பதை அறிந்திருந்தோம்" என ரோகித் மேலும் தெரிவித்தார். (ம)

## ரபாடாவுக்கு பதில் யார்?

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக நாளைமறுதினம் நடைபெறவுள்ள மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் ரபாடாவுக்குப் பதிலாக எவர் அணியில் சேர்த்துக் கொள்ளப்படுவார் என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. ஆஸ்திரேலிய அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. முடிவடைந்த இரண்டாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் வோர்ணர், அணித் தலைவர் சிமித் ஆகியோரை வீழ்த்திய பின்னர் அவர்களுடன் மோதல் போக்கைக் கடைப்பிடித்தார் ரபாடா. இதனால் அவருக்கு இரண்டு ஆட்டங்களில் தடை விதிக்கப்பட்டது. மற்றொரு வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரெய்னும் காயத்தால் ஏற்கனவே விலகியிருந்தார். இதனால் இரண்டு வீரர்களை அணியில் இணைத்துக் கொள்ளக்கூடிய வாய்ப்பு தென்னாபிரிக்க அணிக்கு இருந்தது. இதைப்பயன்படுத்தி இரண்டு வேகப்பந்து வீச்சாளர்களை அணிக்குச் சேர்த்துள்ளது தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை. ஒலிவர், மோறிஸ் ஆகியோரே அவ்வாறு அணிக்குள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். எனினும் விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமில் மோர்கலுக்கு வாய்ப்பு வழங்கப்படும் என்றே கருதப்படுகிறது. (ம)



# பாராட்டு மழையில் டினேஸ் கார்த்திக்



முத்தரப்பு ரி-20 தொடரில் கடைசிப் பந்தில் சிக்சர் அடித்து இந்திய அணியின் வெற்றிக்கு வித்திட்ட டினேஸ் கார்த்திக்குக்கு பல முனைகளில் இருந்தும் பாராட்டுக்கள் குவிந்து வருகின்றன.

இந்திய அணியின் வெற்றிக்கு 2 பந்துப்பரிமாற்றங்களில் 34 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் களமிறங்கினார் டினேஸ் கார்த்திக். அவர் 8 பந்துகளில் 2 பவுண்டரிகள் 3 சிக்சர்கள் அடங்கலாக ஆட்டமிழக்காமல் 29 ஓட்டங்களைச் சேர்த்தார். இறுதிப் பந்தில் 5 ஓட்டங்கள் வெற்றிக்குத் தேவை என்ற நிலை இருந்தது. சிக்சர் விளாசி ஆட்டத்தை முடித்தார். இதையடுத்தே அவருக்கு பாராட்டுக்கள் குவிந்து வருகின்றன.

**சச்சின் - அபாரமான வெற்றி:** டினேஷ் கார்த்திக் சிறப்பான ஆட்டம். இதற்கான அடித்தளம் அமைத்துக் கொடுத்த ரோகித் சர்மாவின் ஆட்டமும் அபாரம்.

**பயிற்சியாளர் ரவிசாஸ்திரி:** டினேஸ் கார்த்திக், நீ அபாரமானவன்.

**யுவராஜ் சிங்:** அற்புதமான ஆட்டம் கார்த்திக்.

**மொகமட் கைப்:** டினேஸ் கார்த்திக் உண்மையிலேயே பரபரப்பான ஆட்டம். நீண்ட நாள்களுக்கு நினைவு வைக்கும்படியான இன்னிங்ஸ். நீண்ட காலமாக இருக்கிறார். சோதனைகளைக் கடந்தார். வெற்றிக்கு குறுக்கு வழி எதுவும் இல்லை என்பதை நிரூபித்தார்.

**மத்தியூஸ்:** அருமையான ஆட்டம். இந்திய அணியினருக்கு வாழ்த்துக்கள்.

**மக்கலினகன்:** 8 பந்துகளில் 29 ஓட்டங்கள் என்பது அவ்வளவு இலகுவில் சாத்தியப்படாததே.

**சுரேஷ் ரெய்னா:** வலையில், களத்தில் நாங்கள் கடுமையாக உழைக்கிறோம், நாங்கள் அணியைக் கட்டமைக்கிறோம். அணிக்கு வாழ்த்துக்கள், பெருமையாக உள்ளது. மிகப்பிரமாதமான இன்னிங்ஸ் கார்த்திக்.

(ம)

# நாமகள் வி.கழக கால்பந்து முடிவு

யாழ்ப்பாணம், மார்ச் 20
தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 55 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்கள் சிலவற்றின் முடிவுகள்.

உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இந்த ஆட்டங்கள் இடம்பெற்றன. முதலில் இடம்பெற்ற குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழக அணிக்கும் திக்கம் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

முல்லைத்தீவு சென். யூட் விளையாட்டுக்கழக அணிக்கும் இளவாலை சென். ஹூட்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் 3:0 என்ற கோல் கணக்கில் சென். யூட் வெற்றி பெற்றது.

உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் குப்பிளான் பை ஸ்ரார் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)



# கிளிநொச்சி மத்திய ம.வி. துடுப்பாட்டத்தில் சம்பியன்

யாழ்ப்பாணம், மார்ச் 20
கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்திய 15 வயதுப்பிரிவினருக்கான துடுப்பாட்டத் தொடரில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அணி 9 இலக்குகளால் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து கிளிநொச்சி மகா வித்தியாலய அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கிளிநொச்சி மகா வித்தியாலய அணி, முதலில் துடுப்பெடுத்தாடி 26.1 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 58 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் அபிராஜ், பிரதாப் இருவரும் தலா 4 இலக்குகளையும் காண்டீபன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அணி 6 பந்துப் பரிமாற்றங்களில் ஓர் இலக்கை இழந்து வெற்றி பெற்றது. அருள்வெட்சி 43 ஓட்டங்களைச் சேர்த்தார்.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தின் அருள்வெட்சி சிறந்த துடுப்பாட்ட வீரராகவும், தொடராட்ட நாயகனாகவும், அதே கல்லூரியின் அபினாஸ் ஆட்டநாயகனாகவும், சயந்தன் சிறந்த களத்தடுப்பாளராகவும், பிரதாப் சிறந்த பந்து வீச்சாளராகவும் தெரிவாகினர்.

பரிசளிப்பு நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தின் காப்பாளரும் கிளிநொச்சி கல்வி வலய பணிப்பாளருமான தி.ஜோன்குயின்ரஸ், மதிப்புறு விருந்தினர்களாக பிரித்தானிய தமிழ் துடுப்பாட்ட லீக்கின் காப்பாளர் வைத்திய கலாநிதி தெய்வேந்திரம், கிளிநொச்சி கல்வி வலய உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் மு.காந்தச்செல்வன், வடக்கு மாகாண துடுப்பாட்டப் பயிற்றுனர் அமில பின்னத்துவ ஆகியோர் கலந்து கொண்டனர்.
(ம-23)



# கடற்கரை கரப்பந்தாட்டத்தில் கச்சாய் அ.த.க.பா. சம்பியன்

யாழ்ப்பாணம், மார்ச் 20
தென்மராட்சி வலய கடற்கரைக் கரப்பந்தாட்டத் தொடரில் கச்சாய் அ.த.க. பாடசாலை கிண்ணம் வென்றது.

கச்சாய் கடற்கரையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில், கச்சாய் அ.த.க. பாடசாலையும் மட்டுவில் சந்திரபாபு ஸ்கந்தவரோதய வித்தியாலயமும் மோதின. மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் இரண்டாவது செற்றை 17:21 என்ற அடிப்படையில் இழந்தாலும், முதலாம் மற்றும் மூன்றாம் செற்களை 22:15, 21:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணம் வென்றது கச்சாய். (ம-108)

# மெய்கண்டான் ம.வி. கரப்பந்தில் சம்பியன்

யாழ்ப்பாணம், மார்ச் 20
வலிகாமம் கல்விவலய பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில், 16 வயது பெண்கள் பிரிவில் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய அணி சம்பியனானது.

மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய அணியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி மோதியது. 25:16, 25:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற செற் கணக்கில் கிண்ணம் வென்றது மெய்கண்டான் மகா வித்தியாலய அணி.

மூன்றாமிடத்தை அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணி பெற்றது.
(ம-422)

# யாழ். மாவட்டச் செயலகம் சதுரங்கத்தில் சம்பியனானது

யாழ்., மார்ச் 20
வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட மாவட்டச் செயலக அணிகளுக்கு இடையிலான சதுரங்கத் தொடரில் இரண்டு பிரிவுகளிலும் யாழ்ப்பாண மாவட்டச் செயலக அணி கிண்ணம் வென்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் உள்ளரங்கில் அண்மையில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன.

பெண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக அணி முதலிடத்தையும், கிளிநொச்சி மாவட்டச் செயலக அணி இரண்டாமிடத்தை யும், முல்லைத்தீவு மாவட்டச் செயலக அணி மூன்றா மிடத்தையும் பெற்றன.

ஆண்கள் பிரிவு சதுரங்கத்தில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக அணி முதலாம் இடத்தையும், கிளிநொச்சி மாவட்ட செயலக அணி இரண்டாமிடத்தையும், முல்லைத்தீவு மாவட்ட செயலக அணி மூன்றாமிடத்தையும் பெற்றன. (ம-422)





## இன்றைய மோதல்கள்

**யங்கம்பன்ஸின் கால்பந்தாட்டம்**

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கலட்டி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யங் லயன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**நாமகள் வி.க. கால்பந்தாட்டம்**

தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 55ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பளை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் திருக்குமரன் விளையட்டுக் கழ்க மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொட ரில் இன்று பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியை எதிர்த்து சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட் டுக் கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி யூத் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
(ம-23)

## கே.ஸி.ஸி.ஸி. கழகத்தின் துடுப்பாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 20 கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாணம் துடுப்பாட்டச் சங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட துடுப்பாட்டக் கழகங்களுக்கு இடையில் விரைவில் துடுப்பாட்டத் தொடரொன்றை நடத்தவுள்ளது.

(ம-23)

## 50 தடவைகள் ரொனால்டோ ஹற்றிக்

போர்த்துக்கல் கால்பந்தாட்ட அணியின் தலைவரும் ரியல் மட்ரிட் கழகத்தின் நட்சத்திர வீரருமான ரொனால்டோ, தனது 50ஆவது ஹற்றிக் கோலை நேற்றுமுன்தினம் பதிவுசெய்தார். கினோரா அணிக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் ரியல் மட்ரிட் அணி 6:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. ரியல் மட்ரிட்டின் சார்பாக ரொனால்டோ 4 கோல்களைப் பதிவுசெய்தார். இந்த ஹற்றிக் பதிவு அவரின் 50ஆவது ஹற்றிக் அடைவாகப் பதிவானது. ஸ்பானியக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடரில் மட்டும் இதுவரை 34 ஹற்றிக் கோல்களைப் பதிவுசெய்துள்ளார் ரொனால்டோ.

(ம)



## ரபாடா விவகாரம்: பிரட் லீ நடுநிலை



ஆஸ்திரேலிய வீரர்களுடன் மோதல் போக்கைக் கடைப்பிடித்தமைக்காக தென்னாபிரிக்காவின் வேகப்பந்து வீச்சாளர் ரபாடாவுக்கு இரண்டு ஆட்டங்களில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ள விவகாரத்தில் எந்தத் தரப்புக்கும் சார்பில்லாமல் நடுநிலையைப் பேணுகிறார் ஆஸ்திரேலியாவின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் லீ.

"இந்த விவகாரத்தில் எந்தத் தரப்புக்கும் ஆதரவு தெரிவிக்கப் போவதில்லை. பொதுவாக கிரிக்கெட் மைதானத்துக்குள் ரோபாவாக செயற்பட முடியாது. அதேவேளையில் வீரர்கள் எல்லையை மீறக்கூடாது. இனரீதியில் யாரையும் அவமதிக்கக்கூடாது. குழந்தைகள் எம்முடைய நடைமுறையைப் பின்பற்றும் என்பதால் எல்லை மீறக்கூடாது. இவற்றை விட கடினமான கிரிக்கெட் ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டும். சர்ச்சைகளை தவிர்க்க துடுப்பாட்ட வீரர்களை பந்துவீச்சாளர்கள் நேருக்குநேர் பார்க்கக்கூடாது. துடுப்பாட்ட வீரர்கள் பந்து வீச்சாளர்களைப் பார்க்கக்கூடாது என்று சிலர் சொல்வதை நான் ஏற்கவில்லை'' என்று லீ மேலும் தெரிவித்தார்.

(ம)

**விற்பனைக்கு**

யாழ்.சிவகுருநாதன் வீதியில் 4 பரப்பு வெற்றுக் காணியும் கிளிநொச்சி A9 வீதிக்கு அருகில் கந்தசாமி கோயிலுக்கு பின்புறமாக (பரவிப்பாஞ்சான்) (2றூட் 20 பேர்ச்) 10 பரப்புக் காணியும். உரும்பிராய் இந்துக்கல்லூரிக்கு அருகில் 10 பரப்பில் அமைந்த இரு வீடும். கொக்குவில் பொற்பதி வீதியில் 10 பரப்பு பழைய வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு - 077 723 2535



## ரொனால்டோ மிரட்டல் ரியல் மட்ரிட் அபாரம்

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ரியல் மட்ரிட்டை எதிர்த்து கினோரா மோதியது. ஆட்டத்தின் 11ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட்டின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார் ரொனால்டோ. 29ஆவது நிமிடத்தில் ஸ்ருவானி, கினோராவின் சார்பாகக் கோலைப் பதிவுசெய்து பதிலடி கொடுத்தார். வேறெந்த கோல்களும் பதிவாகவில்லை. முதல் பாதியின் முடிவில் இரண்டு அணிகளும் தலா ஓர் கோலைப் பதிவுசெய்தன. இரண்டாம் பாதியில் ஆட்டம் அப்படியே ரியல் மட்ரிட்ன் பக்கமாகச் சாய்ந்தது. 47ஆவது மற்றும் 64ஆவது நிமிடங்களில் ரியல் மட்ரிட்டின் சார்பாகக் கோல்களைப் பதிவுசெய்தார் ரொனால்டோ. லூகாஸ் 59ஆவது நிமி டத்தில் மட்ரிட்டின் நான்காவது கோலைப் பதிவுசெய்தார். ஜீனைப் 82ஆவது நிமிடத்தில் கினோராவின் மூன்றாவது கோலைப் பதிவுசெய்தார். அதன்பின்னர் பேல் 88ஆவது நிமிடத்திலும், ரொனால்டொ 90ஆவது நிமிடத்திலும் அடுத்தடுத்து கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 6:3 என்ற கோல் கணக்கில் ரியல் மட்ரிட் வெற்றிபெற்றது.

(ம)

## சென். தோமஸ் கபடியில் சாதித்தது

யாழ்., மார்ச் 20 பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கபடியில் ஆண்கள் பிரிவில் பருத்தித்துறை சென். தோமஸ் அணி சம்பியனானது. அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் பருத்தித்துறை சென். தோமஸ் அணியை எதிர்த்து கொட்டடி துள்ளுமீன் அணி மோதியது. முதல் பாதியின் முடிவில் 17:11 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை வகித்தது பருத்தித்துறை சென். தோமஸ். அந்த அணி இரண்டாவது பாதியிலும் ஆதிக்கம் செலுத்தி முடிவில் 44:31 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

(ம422)



**முழுநேர ஆங்கில பயிற்சி**

**பதிவுகள் ஆரம்பம்**

பாட உள்ளடக்கங்கள்

**முழுமையான இலக்கணக்கற்றல்** (Complete Grammar - 48 hours)

**முழுமையான பேச்சுப்பயிற்சி** (Complete Spoken English - 48 hours)

**முழுமையான எழுத்துப்பயிற்சி** (Complete Writing - 18hours)

**முழுமையான வாசிப்புப்பயிற்சி** (Complete Reading - 14 hours)

Complete English

| | |
|---|---|
| பயிற்சிக்காலம் : 02 மாதங்கள் | நாட்கள் : திங்கள் முதல் வியாழன் வரை |
| | நேரம் : காலை 8.30 முதல் 12.30 வரை |

- இக்கற்கைநெறியைத்தொடர O/L கற்றிருத்தல் போதும்.
- 60 பேருக்கான விண்ணப்பபடிவங்கள் 25.03.2018 வரை மட்டும் வழங்கப்படும்.
- விண்ணப்பிப்போர் நேரடியாக பதிவுசெய்தல் வேண்டும்.
- விண்ணப்ப இறுதி திகதி 25.03.2018 ஞாயிறு.

Admissions will be granted on first come and first serve basis

"தேசிய ஆங்கில டிப்ளோமா" சான்றிதழுடன் கூடிய கற்கைநெறி

SAAMSON Experts in English Training

403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோயிலடி யாழ்நகர்.

021 320 3313 077 1570 486

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.03.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.